Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

விஷானி நகை மாளிகை

மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)



முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 10 ஞாயிற்றுக்கிழமை (25.11.2012) பக்கங்கள் 20 ஓசை – 056



பரிசு! 03



பாராட்டு! 04



அக்கறை 05



நடவடிக்கை 09




மோசடியை தவிர்க்க... 12

# 13 ஆவது திருத்தச் சட்ட நீக்கம் இந்திய உறவைப் பாதிக்கும்

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

மாற்றுச் செயற்பாடுகள் எதுவுமின்றி 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை மாற்றியமைத்தாலோ அல்லது நீக்கினாலோ இந்தியாவுடனான உறவுகள் பாதிக்கப்படுவதுடன், நாடும் நெருக்கடிக்குள் தள்ளப் படும் என அரசாங்கம் தெரிவித் துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சர் நிமால் சிறிபால டி 'சில்வா தெரி வித்துள்ளதாவது,

13 ஆவது அரசியல் அமைப் புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யவோ, அதில் மீண்டும் திருத்தங்களை மேற்கொள்ளவோ, அரசாங்கம் இதுவரை எந்தத் தீர் மானங்களையும் எடுக்கவில்லை.

அரசாங்கத்தில் அங்கம் வகிக் கும் கட்சிகளும், சில எதிர்க் கட்சிகளும் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள நிலைப்பாடுகள் அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல.

அரசியல் அமைப்புத் திருத் தச் சட்டம் ஒன்று தொடர்பாக தவறான நிலைப்பாடுகளை வெளியிடுவதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அர சாங்கம் குறித்து, தவறான தோற் றத்தை ஏற்படுத்த முயற்சிக்கப் படுகிறது. சிலருக்கு இவ்வா றான நிலைமையை ஏற்படுத்தும் தேவை உள்ளது.

மாற்று செயற்பாடுகள் இன்றி, திடீரென 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கினால், இந்தியா மற்றும் இலங்கை இடையில் இருக்கும் உறவுகள் பாதிக்கப்படுவதுடன், நாடும் நெருக்கடிக்குள் தள்ளப் படும் எனவும் அமைச்சர் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்பு அரசை வலியுறுத்தும் யோசனை மாகாண சபைகளில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யக்கூடாது என அரசாங் கத்தை வலியுறுத்தும் யோசனை மாகாண சபைகளில் சமர்பிக்கப் படவுள்ளது.

முதலாவதாக வடமேல் மாகாண சபையில் சமர்பிக்கப் படவுள்ள இந்த யோசனையில், வடமேல் மாகாண முதலமைச்சர் அத்துல விஜேசிங்க உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் கையெழுத்திட் டுள்ளனர்.

எதிர்வரும் 3 ஆம் திகதி இந்த யோசனை தொடர்பான விசேட விவாதம் ஒன்றும் வட மேல் மாகாண சபையில் நடை பெறவுள்ளது. இதனைத் தவிர வடமத்திய மாகாண சபையிலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கடற்றொழிலாளர் உரிமையை மறுக்கும் "பாஸ்" நடைமுறையை நீக்கவேண்டும்

### சந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு பிரதேசத்தில் தொடர ந்தும் நடைமுறையிலிருக்கும் பாஸ் நடைமுறை அம்மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச் சினையாக இருக்கிறது. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்கள் முடிவடைந் துள்ள நிலையிலே தொடர்ந்தும் கடற்படையினரால் பாஸ் நடை முறை பின்பற்றப்படுவது அங் குள்ள கடற்றொழிலாளர்களுக்கு மிகப்பெரிய அசௌகரியத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. குறிப்பாக மன்னாரிலிருந்து முல் லைத்தீவுவரையிலுள்ள பல் வேறு பகுதிகளில் தொடர்ந்தும் "பாஸ்" நடைமுறை இருந்து வரு கின்றது. இது ஏற்றுக்கொள்ள முடியாத ஒருவிடயம். இது கடற்றொழிலாளர்களின் உரி மையை மறுக்கின்ற செயற்பாடா கும். எனவே அவர்களை இரண் டாம்தரப் பிரஜைகளாக நடத்தும் போக்கு தவிர்க்கப்படவேண்டும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிர தித் தலைவருமான முருகேசு சந் திரகுமார் கடந்த வெள்ளிக்கிழமை

19 ஆம் பக்கம் பார்க்க

## யுத்தநிறுத்த நகர்வுகளை ஏற்கமறுத்தார் பிரபாகரன்

### கூறுகிறார் கே.பி.

(கொழும்பு)

ஏ - 9 வீதியில் இராணுவத்தி னர் நகர்ந்து கொண்டிருந்த போது கௌரவமான யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவதற் கான சாத்தியங்கள் இருந்தன. அதனை புலித் தலைமை புரிந்து கொள்ளவில்லை. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் என் னால் யுத்த நிறுத்த நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிலை யில், ஒஸ்லோ யுத்த நிறுத்த நகர்வு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் முறி யடிக்கப்பட்டது என்று புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வ தேசப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் (கே.பி) தெரிவித்தார.

இது தொடர்பில் அவர் மேலும தெரிவித்துள்ளதாவது,

2008 ஆம் ஆண்டு புலிகளின் நிலைவரத்தை பெரும்பாலானோர் அவதானித்துக் கொண்டிருந்தனர.

19 ஆம் பக்கம் பார்க்க

## தேசிய குண்டெறிதல் யாழ். வீரன் சாதனை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இடம்பெற்று வரும் 24 ஆவது தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற விளை யாட்டு விழாவின் 20 வயதுப் பிரி வினருக்கான குண்டெறிதல் போட் டியில் யாழ். மாவட்ட வீரன் இரத் தினசிங்கம் விமலேந்திரா தேசிய மட்ட சாதனையை முறியடித்தார்.

நேற்று மாலை சுகததாச விளை யாட்டு மைதானத்தில் நடைபெற்ற

19 ஆம் பக்கம் பார்க்க



## அவதூறை ஏற்படுத்திய செய்தி 'உதயன்', 'வலம்புரி' மீது வழக்கு

### 100 மில்லியன் நட்டஈடு கோரும் இராணுவத் தளபதி



(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி யாகும் உதயன் மற்றும் வலம் புரி பத்திரிகைகளுக்கு எதிராக தலா 100 மில்லியன் ரூபா நட்ட ஈடு கோரி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவினால் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியின் சார் பில் சட்டத்தரணி உபேந்திர

19 ஆம் பக்கம் பார்க்க

## பிராந்திய வல்லரசு கொள்கை இந்தியாவிடம் இருக்கவில்லை



### தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

பிராந்திய வல்லரசாகும் கொள்கையிலேயோ அல்லது அதி காரம் பெறும் நோக்கிலோ இந்தியா ஒருபோதும் செயற்பட வில்லை என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கை பாதுகாப்பு சேவைகள் வித்தியாலயத்தில் இடம் பெற்ற இந்தியாவின்

19 ஆம் பக்கம் பார்க்க

# இலவசக் கல்வியை முழுமையாகப் பெறமுடியாத மடு.வலய மாணவர்கள்

## – பெற்றோர் கவலை தெரிவிப்பு

மன்னார் மடு.வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் பெரிதும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். இவ் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பலர் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர்.

இதனால் திங்கட்கிழமைகளில் அரைநாள் கல்வி கற்பிப்பு பாடநேரமும், வெள்ளிக்கிழமைகளில் அரை நாள் கல்வி கற்பிக்கும் நேரமும் மாணவர்களின் கல்வி தடைப்படுகின்றது. இதனால் மாணவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குறித்த வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் கட்டாயக்கல்வியைக் கற்று வருகின்றனர்.

கல்வி நடவடிக்கைகளில் மிகவும் ஆர்வமும், திறமைகளும் கொண்டுள்ள மாணவர்கள் யுத்தத்தின் பின் தமது கற்றல் செயற்பாடுகளைத் தொடர பல



பிரச்சினைகளை எதிர் கொண்டனர். தற்போது குறித்த மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்குச் செல்ல முடியாத நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வருகின்றனர்.

பாடசாலைக்கல்வியை மட்டும் நம்பியுள்ள குறித்த மாணவர்கள் தற்போது ஆசிரியர்களின் வருகை பிந்துகின்றமையினாலும், சில முக்கிய பாடங்களுக்கு சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் இல்லாமையினாலும், குறித்த மடு.கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் யுத்த சூழ்நிலையின பின்னரும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

## இறுதிப் போட்டி

(மட்டுவில்)

52 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை உஷன் இராமநாதன் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மீசாலை சீமா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (118)

## மின்சாரம் அடிக்கடி தடை; மாணவர்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இரவு வேளைகளில் மின் விநியோகம் தடைப்படுவதால் மாணவர்கள் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது 3 ஆம் தவணைப் பரீட்சையை எதிர்கொண்டுள்ள மாணவர்கள் தாம் கற்கும் வேளையில் அடிக்கடி மின் விநியோகம் தடைப்பட்டு வருகிறன்றது.

இதனால் இறுதிப் பரீட்சைக்கான கற்கைகள் பாதிக்கப்படுகின்றன. கற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் மன விரக்தி ஏற்படுகின்றது. விரக்தியால் கற்கும் நிலை ஏற்படாது குழப்பமான நிலை ஏற்படுகிறது.

கற்கும் வேளை மன எரிச்சல் ஏற்பட்டால் எமது கற்றல் நிலை பாதிக்கப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு மின்சார சபையில் சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாணவர்கள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர். (இ)



நாடு முழுவதிலும் 10 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி கல்வயல் ஐயனார் ஆலயச் சூழலில் ஆலய தர்மகத்தா சு.சிவானந்தன், விவசாய சம்மேளன உறுப்பினர் அ.பற்குணநாதன் மரக்கன்றுகளை நாட்டுவதையும் காணலாம்.

## விஷ்ணு ஆலய தீப பூசை

(குருநகர்)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் 28 ஆம் திகதி புதன்கிழமை விஸ்ணு ஆலயதீப பூசை நடைபெறவுள்ளது.

மாலை 5.30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் பூசை ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் விஸ்ணுதீபம் ஏற்றி வைக்கப்படும்.

இரவு 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து நாராயண சுவாமி, பூமாதேவி, ஸ்ரீதேவி சகிதம் விசேட தண்டிகையில் வீதியுலா எழுந்து அடியவர்களுக்கு அருள்பாலிப்பார். (68)

## செல்வபுரம் கிராமத்தின் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு

(கரணவாய்)

கரணவாய் செல்வபுரம் கிராமத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த குடிநீர்ப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் வாழும் மக்கள் 45 வருடங்களாக மழை காலத்தில் குடிதண்ணீருக்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வந்த நிலையில், இக்கிராமத்திற்கு குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கத்தால் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குடிதண்ணீர் வழங்குவதற்கான திட்டத்தை கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தனர்.

இதேவேளை குடிநீர் வழங்கும் வகையில் கிணறு அமைப்பதற்கான காணியை சுவிஸில் வாழும் ஆனந்தராசா, ஷர்மிலா ஆகியோர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (18)

## அரச மரம் அகற்றப்படாமையால் வீதி திருத்தும் பணி தாமதம்

(கரணவாய்)

யாழ்.நெல்லியடிப்பகுதியில் எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக உள்ள பாரிய அரசமரம் அகற்றப்படாமல் இருப்பதால் அவ்வீதிக்கு காபற் இடும் பணிகள் தாமதமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நெல்லியடி பிரதான வீதியாக காணப்படும் இவ்வீதி காபற் இட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த அரச மரத்தை அகற்ற வேண்டும் எனவும் அகற்றிய பின்னர்தான் காபற் இடமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிப் புனரமைப்பில் ஈடுபடும் ஒப்பந்தகாரர் அரசமரத்தை அகற்றித்தருமாறு தம்மிடம் கேட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். அரச மரத்தை யார் அகற்றுவது என்று தெரியாது குழப்ப நிலை காணப்படுவதாகவும் இதனால் வீதிப்புனரமைப்புப் பணிகள் தாமதமடைவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (18)

## வீதிக்கு குறுக்கே பள்ளம்; பயணம் செய்வதில் இடையூறு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் தார் வீதியை குறுக்கே அகலமாக வெட்டியதால் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் அருகாமையிலுள்ள வேலியோரமாகச் செல்ல வேண்டியுள்ளது.

நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் ஆகியோரை வாகனங்களில் கொண்டு செல்லும் போது அக்கிடங்கில் விழுந்தெழும்பிச் செல்லவேண்டியுள்ளது. இதனால் நோயாளர்களுக்கு நோய் மேலும் அதிகமாகிறது.

இந்த வாய்க்கால் அண்மையில் பெய்த மழைக்கு வெள்ளம் பாய்வதற்காக குடியிருப்பாளர்களால் இவ்வாறு ஆழமாக வெடடப்பட்டது. மழை வெள்ளம் ஓடுவதற்காக வீதியின் அருகாமையினால் வாய்க்கால்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆனால் அங்கு குடியிருப்பவர்கள் வீடு கட்டுவதற்கும், மதில் கட்டுவதற்கும் மற்றும் பல்வேறு தேவைகளுக்காகவும் அவ்வாய்க்காலில் கற்குவியல்களையும், மண்குவியல்களையும் பறித்து வைத்துள்ளனர்.

இதன் காரணமாக வெள்ளம் செல்ல முடியாது வீடுகளிலும், வீதிகளிலும் தேங்கி நிற்கிறது. எனவே வலி.தென்மேற்குப் பிரதேச சபையினர் இதனை நேரில் சென்று பார்வையிட்டு இவற்றைத் திருத்தியமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மக்கள் பலரும் கேட்டுக் கொள்கின்றனர். (104)



அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த Cathalryn Trust இனரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிதியைக் கொண்டு யுனிசெவ் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட கிளி.பூநகரி மகா வித்தியாலய புதிய கட்டடத்தை திறந்து வைப்பதனையும், காட்சியளிக்கும் புதிய கட்டடத்தையும் காணலாம். (27)

## மாணவர்கள் கௌரவிப்பு

(வடமராட்சி)

ஜனாதிபதி மகிந்தராஜபக்சவின் 67 ஆவது பிறந்த தினத்தையும், ஜனதிபதியின் பதவியேற்ற தினத்தையும் நினைவு கூரும் முகமாக கல்வியமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலைகளில் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக்கௌரவிக்கும் விழா புற்றளை மகா வித்தியாலயத்தில் அதிபர் ஆர்.ஆனந்தேஸ்வரன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வித்தியாலயத்தின் இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி இந்திராணி பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர் எஸ்.திருச்செல்வம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 34 மாணவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். அத்தோடு வடமராட்சி வலயத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களும், சிறுவர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் கலந்து வெற்றியீட்டிய மாணவர்களும் விழாவில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (01)

# குற்றச் செயல்களை முற்றாகத் தடுக்க பொலிஸாருடன் மக்கள் இணையவேண்டும்

## பொலிஸ் அதிகாரி



(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பொலிஸார் குற்றச் செயல்களைத்தடுக்கம் நோக்குடன் இரவு பகல் அடிக்கடி ரோந்து சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பல. திருட்டுச் சம்பவங்கள் குறைந்துள்ளன. பொது மக்களாகிய உங்களையும் உங்கள் பொருட்களையும் பாதுகாப்பதற்கு உங்களின் [illegible]வி கட்டாயம் தேவை.

உங்கள் பகுதியில் சந்தேகமான ஆட்களைக் கண்டால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் என மானிப்பாய் பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தில் கடந்த வாரம் நடைபெற்ற பொது மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சனசமூக நிலையத்தலைவர் இ.மனோகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,


தற்போது மோட்டார் சைக்கிளில் திரிபவர்கள் நண்பகல் வேளையில் வீதிகளில் பெண்கள் அணிந்திருக்கும் நகைகளை அறுத்துச்செல்கின்றார்கள். அப்படியான சம்பவங்கள் சாவற்கட்டு, உடுவில், கட்டுடை, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

அதனால் சந்தேகமான ஆட்களைக் கண்டால் அவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கம் ஆள் அடையாளங்களை உடன் எமக்கு அறிவியுங்கள் என்றார்.

மோட்டார் போக்குவரத்து பொலிஸ் அதிகாரி சூரியகுமார் கூறுகையில்,

பாடசாலை மாணவர்கள் வீதியில் சமாந்தரமாக செல்லக் கூடாது. போக்குவரத்து விதிமுறைகளை கவனிக்க வேண்டும். தலைக்கவசம் இல்லாமல் செல்லக்கூடாது. விபத்து ஏற்படும் போது எம்மை நாம் பாதுகாக்க முடியும் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு போக்குவரத்து விதிமுறைகளை செல்லிக்கொடுக்க வேண்டும்.

நாம் வீதிகளில் மோட்டார் சைக்கிள்களை மறித்து பரிசோதனை செய்யும் போது தலைக்கவசம் அணியாமலும் வாகன வரிக்கான பதிவுகள் ஆவணங்கள் இல்லாமல் செல்வதும் எம்மால் கண்டு பிடிக்கப் படுகிறது என்றார். (104)



காரைநகர் வலந்தலை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி காரைநகர் பிரதேச அமைப்பாளருமான வி.கண்ணன் (ரஜனி) மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைக் காணலாம்.

# மண்டைதீவிலுள்ள மாடுகளை பாதுகாக்குமாறு கோரிக்கை

மண்டைதீவு பிரதேசத்தில் உள்ள தரவை மாடுகள் உரிய முறையில் பாதுகாப்பட வேண்டும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இக்கிராமத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் இடப்பெயர்வு காலங்களில் விவசாயிகளினால் வீட்டுச்செல்லப்பட்டு வழித்தோன்றலாக வந்தவை என விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்கிராமத்தில் முன்னெடுக்கப்படும் நெற்செய்கைக்கும் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கும் பிரதானமான இத்தரவை மாடுகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதால் இவற்றால் கிடைக்கும் இயற்கைப் பசளை இக் கிராமத்திற்கும் இல்லாமல் போய்விடும் என விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்கிராமத்தில் உள்ள மாடுகள் களவாடப்படுவதும் வெப்பகால நோய்த்தாக்கத்திற்கு ஆளாகி இறப்பது போன்றவற்றால் மாடுகளை இழக்க நேரிடுவதாகவும் தெரிவிக்கும் விவசாயிகள் இங்குள்ள தரவை மாடுகளை பாதுகாக்க விவசாய சங்கத்தினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெரிவிக்கின்றனர். (23)

# எழுச்சி ஊர்வலம்

(வலிகாமம்)

விவேகானந்தரின் 150 ஆவது ஜனனதின விழாவும் அதனையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எழுச்சி ஊர்வலமும் நடைபெறவுள்ளதாக உடுவில் பிரதேச இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் இணைப்பாளர் என்.பி ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

இவ்விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு மருதனார் மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாக்குழுத்தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் ஆசியுரையை சிவஸ்ரீ.இ.சுந்தரேசக்குருக்களும், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனும் வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரையினை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் வழங்கவுள்ளார். (06)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

யாழ் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்க சமாசத்தின் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 9.30மணிக்கு சங்கத் தலைவர் எஸ்.இலகுநாதன் தலைமையில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவு இடம்பெறவுள்ளது. (109

# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய பரிசளிப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் அதிபர் க. ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக பிரதிகல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.ஸ்ரீராமச்சந்திரன் கலந்துகொள்ளவுள்ளார். (109)

# பலாலி 2 ஆம் ஒழுங்கை குண்டும் குழியுமாக சேதம்

யாழ் பலாலி வீதியின் 2 ஆம் ஒழுங்கை மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் மக்கள் சிரமத்தின் மத்தியில் பயணம் செய்ய வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

40 வருடங்களாக திருத்தப்படாத இவ்வீதி தற்போது குண்டும் குழியுமாகச் சேதமடைந்துள்ளதால் மழைகாலங்களில் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை' இவ்வீதியிலுள்ள கால்வாய்களும் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. எனவே இவ் வீதியையும் கால்வாய்களையும் புனரமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (105)

# தமிழ் எழுத்தாளர்களின் இலக்கிய நூல்களுக்குப் பரிசு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடமாகாண தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் வருடா வருடம் சிறந்த நூற்பரிசுத தேர்வினை நடாத்தி வருகின்றது.

அந்த வகையில் 2011 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு போட்டிக்கென திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற நூல்களில் துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நூல்களும் ஆசிரியர்களின் விபரமும் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான கௌரவிபபு விழா டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய விழாவின் நிறைவு நாளன்று வழங்கப்படும் என வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளர்.

இதன்படி சிறுகதை இலக்கியத்துக்கு அல்வாய் மேற்கு தே.நந்தினி சேவியரின் நெல்லிமரப் பள்ளிக்கூடம், நாவல் இலக்கியத்திற்கு மன்னார் எஸ்.ஏ உதயனின் சொடுதா, கவிதை இலக்கியத்திற்கு மட்டக்களப்பு சுந்தர பாண்டியனின் கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள், ஆய்வும் விமர்சனமும் களுபொவில மு.பொன்னம்பலத்தின் திறனாய்வின் புதிய திசைகள் போன்ற நூல்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர் இலக்கியத்திற்கு காரைநகர் திருமதி ஸ்ரீலேக்கா பேரின்பநாதனின் கிண்கிணி நாதங்கள், நாடக இலக்கியத்திற்கு கொழும்புத்துறை க.இ.கமலநாதனின் ஆச்சி அச்சாப்பாட்டி, உயர்கல்விக்கு நலலூர் பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜாவின் மெய்யியல் ஓர் அறிமுகம், பல்துறை இலக்கியம் சமயத்திற்கு கோப்பாய் கே.வி குணசேகரத்தின் ஸ்ரீமத் பகவத் கீதை சுலோகம் உரை விளக்கம் கதைகள், மொழிபெயர்ப்புக்கு கொக்குவில் சோ.பத்மநாதனின் பர்மியப்பிக்கு சொன்ன கதைகள், பொதுவானவைக்கு நல்லூர் கலாநிதி செ.திருநாவுக்கரசின் எண்ணங்களும் வண்ணங்களும் ஆகிய நூல்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

# டெங்கு ஒழிப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலி வ்தியில் அமைந்துள்ள சுகாதார நிலையத்தில் டெங்கு ஒழிப்பு கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு சுகாதார வைத்திய அதிகாரிகளினால் நடாத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் பயங்கர உயிர் கொல்லியான டெங்கை ஒழிப்பதற்கு பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு அவசியம் அவரவர் வீடுகளையும் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்கவேண்டியது ஒவ்வொருவருடைய பொறுப்பாகும்.

கழிவுப்பொருட்களை வீடுகளிலிருந்து அப்புறப படுத்துவதும் போத்தல்கள் பழைய பொருட்கள் தயிர்ச்சட்டிகள் போன்றவற்றை ஒன்று சேர்த்து



அவற்றை வெளியேற்றுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர் சரபுல் அனாம், ஜே.87 சமுர்த்தி அதிகாரி என்.ஜெகதீஸ்வரன் ஜே.87 கிராம அலுவலர் எம்.எஸ்.ஜினூஸ், குடும்ப நல உத்தியோகத் தர் எம்.தேவசெல்வி சுகாதார வைத்திய அதி காரி வை.வசீகரனம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் சனசமூக நிலைய தலைவர் எம்.ஹஸஸான் மற்றும் பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (105)

மனிதர்கள் இரண்டு அழுக்குக் கைகளைப்போல. ஒன்றினால்தான் மற்றொன்றின் அழுக்கைப் போக்க முடியும். – பொன்மொழி.

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## கேட்பதில் தெளிவு வேண்டும்!

இலங்கைக்கு வெளியே இருந்து நடத்தப்படுகின்ற இணையத்தள விவாதங்களைக் காண்கிறபோது எழும் கேள்விகளையும் எண்ணங்களையும் கொஞ்சம் பகிர்ந்துகொள்ளலாம். இணையங்களில் எழுதும் எல்லோருமே இங்கே மக்கள் படுகின்ற அவலங்கள் குறித்துக் கவலைகளை வெளிப்படுத்துகிறார்கள். அவலங்கள் நீங்க வேண்டும் என்ற தங்கள் அக்கறையையும் உணர்ச்சிகரமாக எழுதிவருகிறார்கள்.

இங்கு பிரச்சினைகள் தீர்ந்து வாழ்வதற்கான சூழல் உருவாவதற்கு எத்தனையோ விதமான கருத்துக்கள் வைக்கப்பட்டாலும் அவற்றில் இரண்டு பெரும் தரப்புகளை நாம் அடையாளப்படுத்தலாம். இலங்கை அரசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி சர்வதேச நாடுகள் மூலம் அழுத்தத்தை ஏற்படுத்தி தீர்வைக் கொண்டுவந்து விடலாம் என்பது ஒரு தரப்பு.

இந்தத் தரப்பையே பெரும்பாலோர் எந்தக் கேள்விகளுமின்றி ஏற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. முதலில் இந்தத் தரப்பினரில் யாரும் சர்வதேசம் எந்தத் தீர்வை எடுத்துத் தரப்போகிறது என்றோ அல்லது எதை எடுத்துத் தரவேண்டும் என்றோ எதுவும் சொல்வதில்லை. அதனாலேயே வெறும் கற்பனாவாதமாக, ஒவ்வொரு ஐ.நா. மாநாடு நடக்கும்போதும் 'இதோ இலங்கை மண்டியிடப்போகிறது' என்ற எதிர்பார்ப்பை மக்களுக்குக் கொடுத்தே காலத்தை ஓட்டிவருகின்றனர்.

இன்னும் தனிநாட்டுக்கு இணையான ஒரு தீர்வை நம் மனதில் வைத்துக்கொண்டு, இலங்கை அரசை மிரட்டுவதற்கென சர்வதேச நாடுகளிடம் நாம் போய்நிற்கும்போது, மறுவிளைவாக தீர்வுக்கு எதிரான உணர்வை சிங்கள மக்களிடம் மேலும் மேலும் வளர்த்துக்கொண்டேதான் செல்கிறோம். சந்திரிகா காலத்தில் சமஷ்டிக்கே ஒப்புதலளிக்கத் தயாராயிருந்த சிங்கள மக்கள் இப்போது அந்த மனநிலையில் இல்லை என்றால், அதற்கு வெற்று வீரவசனங்களால் மிரட்டிக்கொண்டிருக்கும் இந்தத் தமிழ்த்தரப்பினரே பொறுப்புக்கூற வேண்டும்.

சர்வதேசம் மூலம் இலங்கை அரசை அடிபணிய வைத்துத்தான் தீர்வொன்று வரவேண்டுமென இவர்கள் முயல முயல அரசைக் கேள்வியின்றி ஆதரிக்கும் பாதுகாக்கும் வீம்புதான் சிங்கள மக்களிடம் வளர்கிறது. இவ்வாறு மிரட்டி அந்த மக்களிடம் இருந்து எந்தத் தீர்விற்கான ஒப்புதலைத்தான் நாம் பெற முடியும்?

மாறாக, நம் பக்கமிருக்கும் பிழைகள் பற்றி ஆராய்வதும், அவற்றைத் திருத்தி நம்மை மாற்றிக்கொள்வதன் மூலமுமே இந்தப் பிரச்சினையை வெல்வதற்கான புதிய வழியை நாம் கண்டடைய முடியும் என்று கூறும் மறுதரப்பையே நாம் செவிமடுக்க வேண்டும். நம் பிழைகளை மறைத்துக்கொண்டு சர்வதேசத்தை இலங்கை அரசுக்கெதிராகத் திருப்பி மண்டியிட வைத்துவிடலாம் என்று மனப்பால் குடித்தபடி மக்களின் அவலநிலையை நீடிக்க வைத்திருப்பதை நாம் அனுமதிக்கக்கூடாது.

முதலில், இன்றைக்கும் புலிகள் காலத்துக் கோரிக்கையை அதே பாணியில் நாம் கேட்டுக்கொண்டிருக்கவில்லை என்பதை, இந்த நாட்டில் நாம் இணைந்தொன்றாய் வாழப்போகும் சிங்கள மக்களுக்கு ஐயந்திரிபற எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கு முதலில் இந்த நாட்டில் அதிகாரங்கள் பகிரப்படுவதை சந்தேகங்கள் அகன்ற சூழலில் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதை நாம் நம்ப வேண்டும். அதற்கும் முதலில் எத்தகைய தீர்வை நாம் கேட்கிறோம் என்பதை வரையறுத்துச் சொல்லத் தெரிய வேண்டும்.

இப்படி நடக்கக் கூடிய வழிகளில் சிந்திக்காமல், பட்டுவேட்டிக் கனவிலேயே வீராப்புப் பேசிவந்தால், என்ன நடக்குமென்பதைத்தான் இன்றுவரைக்கும் நாம் பார்த்துவருகிறோம்.

- ஆசிரியர்

# போக்குவரத்து சேவை நவீனமயமாக்கப்படும்

## அமைச்சர் குமார வெல்கம அறிவிப்பு

(கொழும்பு)

போக்குவரத்து சேவையை நவீன மயப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நவீன வசதிகளுடன் போக்குவரத்து சேவையை பலப்படுத்தும் வகையில் அடுத்த வருடத்தில் மேலும் 2000 புதிய பஸ்களை கொள்வனவு செய்து சேவையிலீடுபடுத்தவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

அத்துடன் கொழும்பு நகர்புற சேவையிலீடுபடுத்தும் வகையில் தற்போது சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள சொகுசு பஸ்களுக்கு மேலதிகமாக மேலும் 25 சொகுசு பஸ்களை அடுத்த வருடத்தில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சின் செயற்திட்ட மதிப்பீடு தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் தகவல் ஊடக திணைக்களத்தில் நடைபெற்றது.

அரச பஸ் போக்குவரத்துத்துறையில் மேற்கொள்ளப்படும் எத்தகைய முன்னேற்ற நடவடிக்கைகளும் தனியார் போக்குவரத்துத் துறைக்கு எவ்விதத்திலும் தடையாக அமையாது. ஏனெனில் அரச, தனியார் துறைகள் இணைந்தே மக்களுக்கான முழுமையான போக்குவரத்துச் சேவையை வழங்க முடியும்.

தற்போது அரச போக்குவரத்துச் சேவையில் பழைய பஸ்கள் 7775 திருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பத்து வருடங்களுக்கு மேற்பட்ட 2676 பஸ்களும் 15 வருட சேவைக்குட்பட்ட 2903 பஸ்களும் எம்மிடமுள்ளதுடன் அவற்றை சேவையிலிருந்து நீக்குவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு மாற்றீடாகவே 2000 புதிய பஸ்களைக் கொள் வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வெள்ள அனர்த்தம் 170 குடும்பங்கள் பாதிப்பு

(கொழும்பு)

பொலன்னறுவை, அம்பாந்தோட்டை ஆகிய இரு மாவட்டங்களிலும் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் 170 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

பொலன்னறுவையில் மகாவெல, கிரிந்திஓயா ஆகியன பெருக்கெடுத்தமையை அடுத்து ஏற்பட்ட வெள்ளத்தினால் 80 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பல பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவில் 90 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் வெள்ள வாய பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்வதாகவும் அந்நிலையம் அறிவித்துள்ளது.

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலை 85 மில்லியன் ரூபா வருமானம்

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியின் ஊடாக மாதாந்தம் 83 - 85 மில்லியன் ரூபா இலாபம் பெறப்படுவதாக துறைமுக மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தெற்கு அதிவேக வீதியில் மாதத்திற்கு 2,83,000 வாகனங்கள் பயணிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தெற்கு அதிவேக வீதி திறக்கப்பட்டது தொடக்கம் இன்றுவரை 950 மில்லியன் ரூபா இலாபம் பெறப்பட்டுள்ளதென பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல குறிப்பிட்டார்.

# இலங்கை கடற்படையினரை பாராட்டுகிறது அவுஸ்ரேலியா

(கொழும்பு)

ஆஸி.செல்லும் சட்ட விரோதப்படகு அகதிகளைக்கட்டுப்படுத்துவதில் இலங்கைக்கடற்படையினர் தீவிரமாக செயற்பட்டமைக்காக அவுஸ்ரேலிய அரசு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

எனினும் கடந்த ஆறு மாத காலப் பகுதியில் சுமார் 4000 இலங்கையர்கள் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்கு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆறு மாத காலப் பகுதியில் மொத்தமாக 12000 பேர் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்குள் பிரவேசித்துள்ளதாகவும், இதில் 4000 பேர் இலங்கையர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் பிரவேசிப்போருக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும் என அவுஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்த 500 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு இலங்கை கடற்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக அவுஸ்ரேலிய அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## அலையில் சிக்கி மூவர் மரணம்

(கொழும்பு)

நெலுவ - தெல்லவ எலகி நியனவத்துறு சப்பத்து பாலத்திற்கு அருகில் அதிக மழை காரணமாக அலையால் அடித்துச் செல்லப்பட்டு மூவர் காணமல் போயுள்ள நிலையில் அதில் இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். குறித்த மூவரும் நேற்றுமுன்தினம் இரவு 7.30 அளவில் அலையால் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இருவர் நேற்று நியனவத்துறு சப்பத்து பாலத்திற்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 57 மற்றும் 45 வயதுடைய இருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். 36 வயதுடைய நபர் காணாமல் போயுள்ளார். நெலுவ பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் குறித்த நபரை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## மண்டைதீவு பாடசாலைக்கு ஜெனரேற்றர் அன்பளிப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு மகாவித்தியாலயத்திற்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனால் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியில் ஒரு இலட்சம் ரூபாவும் கனடா, சுவிஸ் வாழ் பழைய மாணவர்களின் நிதியுதவியுடனும் மின்சார ஜெனரேற்றர் இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்பாடசாலையில் மின்சார வசதி இன்மையால் மாணவர்கள் மண்ணெண்ணெய் விளக்கை பயன்படுத்தி கல்வி கற்று வந்த நிலையில் தற்போது இவர்களுக்கு ஜெர்மன் ரெக் என்ற 5 மெகாவாட்டிற்கும் மேலதிகமாக மின்சாரத்தை உற்பத்தியாக்கும் ஜெனரேற்றர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பாடசாலையின் மின்சாரத் தேவை நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் கணனிகள், தொலைத்தொடர்பு சாதனங்கள இயங்குவதற்கும் நன்மையளித்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். (23)

## மின்னல் தாக்கி ஒருவர் பலி

(கொழும்பு)

தம்புள்ளை - ரத்மல்கம்எல வெல்யாய பகுதியில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவருக்கு வயது 37 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியல் தீர்வைத் தவிர்ப்பதிலேயே கூட்டமைப்புத் தலைவர்களுக்கு எப்போதும் அக்கறை

■ சங்கர சிவன்

தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் தாங்களே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் அடிக்கடி கூறுகின்றபோதிலும், அக்கூற்று எவ்வளவுக்குச் சரியானது என்பது இப்போது கேள்விக்குரியதாக இருக்கின்றது. மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார் என்பதைத் தீர்மானிப்பதற்கான அளவீடு அல்லது பிரமாண சூத்திரம் ஏதாவது இருக்கின்றதோ தெரியவில்லை. எனினும், மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு விசுவாசமாக முயல்பவர்களையே அம்மக்களின் உண்மையான பிரதிநிதிகள் எனக் கூறலாம். தேர்தல் காலத்தில் பொய் வாக்குறுதிகளை அளித்தும் மக்களை உணர்ச்சி வசப்படுத்தியும் வாக்குகள் பெற்று வெற்றியீட்டுபவர்கள் எல்லோரும் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக முடியாது.

தமிழ்ப் பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். இந்த எண்ணிக்கை காரணமாக அவர்கள் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் ஆகிவிட முடியாது. தமிழ் மக்கள் இன்று பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றார்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் நதி மூலமாக இருப்பது இனப்பிரச்சினை. இனப்பிரச்சினையின் தீர்வுக்காக உழைப்பவர்களும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துச் செயற்படுபவர்களுமே தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் இல்லை. அது இனப்பிரச்சினையின் தீர்வுக்கான செயற்பாட்டில் விசுவாசமாக ஈடுபடுவதுமில்லை.

தமிழ்த் தலைவர்கள் ஆரம்பத்திலிருந்தே பல தவறுகளை விட்டு வந்திருக்கின்றார்கள். இந்தத்தவறுகளால் தலைவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. தமிழ் மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டுத் தேர்தலில் வெற்றியீட்டும் சூத்திரம் அவர்களுக்குத் தெரியும் என்பதால் எல்லாத் தேர்தல்களிலும் வெற்றிபெற்றுத் தங்கள் நாடாளுமன்றப் பதவிகளைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களைத் தெரிவு செய்த மக்கள் இவர்கள் விட்ட தவறுகளினால் மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாகினார்கள்.

இந்தத் தவறுகளை நிதானமாக ஆராய்ந்தால் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் என்பது விளங்கும்.

அண்மைக் காலத்தில் தமிழ்த் தலைவர்கள் விட்ட இரண்டு தவறுகளைப் பார்ப்போம். மாகாண சபையை நிராகரித்தது ஒரு தவறு. சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தது மற்றைய தவறு.

மாகாண சபையை நிராகரித்தவர்கள் அதே மாகாண சபையை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இன்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றார்கள். அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை நிராகரித்தவர்கள் அதே தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் தீர்வொன்றை முன்வைக்குமாறு இன்று அரசாங்கத்துக்குக் கூறுகின்றார்கள். மாகாண சபையும் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட பிராந்திய சபையும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட வேண்டியவை என்றதற்குத் தமிழ்த் தலைவர்கள் அன்று கூறிய காரணங்கள் அனைத்தும் பொய்யானவை என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. அன்று கூறிய காரணங்கள் உண்மையானவை யென்றால், மாகாண சபையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்றும் அதே தலைவர்கள் இன்று கோரிக்கை முன்வைக்க மாட்டார்கள். அப்போது பொய்யான காரணங்களைக் கூறி அவற்றை ஏன் நிராகரித்தார்கள் என்ற கேள்வி இப்போது எழுகின்றது. தமிழ்த் தலைவர்கள் எதிர்ப்பு அரசியல் மூலமே தங்கள் அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இல்லையென்றால் இவர்களுக்கு அரசியல் இல்லை. தமிழ் மக்களுக்கு எப்போதும் பிரச்சினைகள் இருக்கும் நிலையிலேயே இத்தலைவர்கள் தங்கள் அரசியல் பதவிகளைப் பாதுகாக்க முடியும். தமிழ் மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளையிட்டு இந்தத் தலைவர்களுக்கு எந்தக் காலத்திலும் அக்கறை இருந்ததில்லை. எனவே, இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தான் இவர்களுடைய அரசியலுக்கு மூலதனம்.

**நீங்களே ஒரு தீர்வுத் திட்டத்தை ஏன் முன்வைக்கக் கூடாது என்ற கேள்விக்கான பதில் தான் இன்றைய தேவை.**



**“ தமிழ்த் தலைவர்கள் எதிர்ப்பு அரசியல் மூலமே தங்கள் அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இல்லையென்றால் இவர்களுக்கு அரசியல் இல்லை. தமிழ் மக்களுக்கு எப்போதும் பிரச்சினைகள் இருக்கும் நிலையிலேயே இத்தலைவர்கள் தங்கள் அரசியல் பதவிகளைப் பாதுகாக்க முடியும். தமிழ் மக்களின் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளையிட்டு இந்தத் தலைவர்களுக்கு எந்தக் காலத்திலும் அக்கறை இருந்ததில்லை. எனவே, இனப்பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தான் இவர்களுடைய அரசியலுக்கு மூலதனம். இனப்பிரச்சினையின் தீர்வாகச் சிறிதளவு அதிகாரங்களாவது தமிழ் மக்களுக்குக் கிடைப்பதைத் தடுக்கும் வகையில் இத்தலைவர்கள் செயற்படுவதற்கு அதுவே காரணம்”.**

இனப்பிரச்சினையின் தீர்வாகச் சிறிதளவு அதிகாரங்களாவது தமிழ் மக்களுக்குக் கிடைப்பதைத் தடுக்கும் வகையில் இத்தலைவர்கள் செயற்படுவதற்கு அதுவே காரணம். இந்த அடிப்படையிலேயே மாகாண சபையையும் பிராந்திய சபையையும் நிராகரித்தார்கள். மாகாண சபையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சந்திரிகாவின் ஆலோசனைகளுக்கு அமைவாக அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் இப்போது கூறுவதெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கான முயற்சி. இன்றைய அரசாங்கம் இவற்றைச் செய்யாது என்ற நம்பிக்கையுடனேயே இக்கோரிக்கைகளை முன்வைக்கின்றார்கள். இவர்களுடைய நோக்கம் விசுவாசமானதென்றால் தாங்களே ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கலாமே.

அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கூறுவது அரசியல் நேர்மையீனத்தின் வெளிப்பாடு. தாங்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று உரிமை கோருகின்றார்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எது தீர்வு என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பும் இவர்களைச் சார்ந்தது என்பதே இந்த உரிமைக் கோரிக்கையின் அர்த்தம். ஆனால், அரசாங்கம் அதைத் தீர்மானிக்கட்டும் என்று விட்டுவிடுவதாகவே இவர்களின் கோரிக்கை இருக்கின்றது. இது தீர்வைத் தவிர்ப்பதற்கும் அதே நேரத்தில் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்குமான தந்திர முயற்சி. அரசாங்கம் தீர்வைமுன்வைக்காது என்பது இவர்களுடைய எதிர்பார்ப்பு. அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளினதும் மற்றைய அறிக்கைகளினதும் அடிப்படையில் தீர்வை முன்வைக்குமாறு நாங்கள் கேட்கின்றபோதிலும் அரசாங்கம் எதுவும் செய்வதாக இல்லை என்று தமிழ் மக்களுக்குக் கூறலாம். இது எல்லோரையும் ஏமாற்றும் வேலை. நீங்களே ஒரு தீர்வுத் திட்டத்தை ஏன் முன்வைக்கக் கூடாது என்ற கேள்விக்கான பதில் தான் இன்றைய தேவை.

அரசியல் தீர்வை மாத்திரமன்றி முழுமையான தீர்வை நோக்கிய நகர்வுகளையும் தவிர்க்கும் முயற்சியின் தொடர்ச்சிதான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிக்கும் முடிவு. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு முன்னால் தமிழ் மக்களின் நியாய பூர்வமான அபிலாஷைகளை எடுத்துக் கூறுவதற்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம்தான் நாடாளுமன்றத் தெரிவுக்குழு. இப்படியான சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அம்மக்களின் சார்பில் கருத்துகளை எடுத்துக் கூறவேண்டுமேயொழியப் பகிஷ்கரிக்கக் கூடாது. பகிஷ்கரிப்பதற்கு நொண்டிச் சாட்டுக்களையே கூறுகின்றார்கள். ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களை அரசாங்கம் நிறைவேற்றவில்லை என்பது இவர்கள் கூறுகின்ற ஒரு காரணம். அரசாங்கம் அத்தீர்மானங்களை நிறைவேற்றவில்லை என்பதற்காகத் தமிழ் மக்களையா கூட்டமைப்பு தண்டிக்கின்றது? தெரிவுக் குழுவில் தமிழ் மக்களின் சார்பில் பேச மறுப்பது தமிழ் மக்களுக்கு வழங்கும் தண்டனைதானே.

தெரிவுக் குழுவில் பேரினவாதிகள் பெரும்பான்மையாக இருப்பார்கள் என்பதால் அங்கு தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைப்பது சாத்தியமில்லை என்பது பகிஷ்கரிப்புக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறும் இன்னொரு காரணம். இது எல்லோரையும் முட்டாள்கள் ஆக்குவதற்கான முயற்சி. பேரினவாதிகள் பெரும்பான்மையாக இருப்பார்கள் என்பதற்காகத் தமிழ்மக்கள் தரப்பு நியாயத்தைக் கூறாமல் விடுவது எந்தவகை அரசியலோ தெரியவில்லை. பிரதம நீதியரசருக்கு எதிரான ஒழுக்கவழுப் பிரேரணை தொடர்பான தெரிவுக் குழுவில் கூட்டமைப்பு அங்கம் வகிக்கின்றது. இந்தத் தெரிவுக் குழுவில் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகள் பெரும்பான்மையாக இருக்கின்றனர். அவர்கள் பாரபட்சமாக முடிவெடுப்பார்கள் எனக் கூறிக் கூட்டமைப்பு ஒதுங்கவில்லை. இந்தத் தெரிவுக் குழுவுக்கு ஒரு நியாயம், அந்தத் தெரிவுக் குழுவுக்கு வேறொரு நியாயமா?

இனப்பிரச்சினையை வைத்து அரசியல் நடத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளைத் திசை திருப்பித் தீர்வைத் தவிர்ப்பதிலேயே எப்போதும் அக்கறையாக இருப்பதுதான் தமிழ் மக்களின் துரதிர்ஷ்டம். இதைத் தமிழ் மக்கள் சரியாக விளங்கிக் கொள்வதிலேயே அவர்களின் விமோசனம் தங்கியுள்ளது. ●

# ஐ.நா.வில் இராஜதந்திர யுத்தத்துக்கு இலங்கையை இழுக்கிறது அமெரிக்கா



(ஜெனிவா)

அடுத்த வருடம் மார்ச் மாதம் சுவிற்சர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மற்றொரு முக்கிய தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான முன்னேற்பாடுகளை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சர்வதேச சமூகத்திற்கு கடநத கூட்டத் தொடரில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றும் விடயத்தில் அரசு அசமந்தப் போக்கை கடைப் பிடித்து வருவதன் காரணமாகவே அமெரிக்கா மீண்டும் இந்த முடிவை எடுத்துள்ளது.

இதற்காகத் தனது இராஜதந்திரிகளை உஷார்படுத்தியுள்ள வோஷிங்டன், நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது என அந்த வட்டாரங்கள் உறுதிப் படுத்தின.

அமெரிக்காவின் புதிய பிரேரணை மனித உரிமைகள் சபையில் நிறைவேறினால் அதனை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு கொண்டு செல்லவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

# "பராலைட்" ஏற்படுத்திய பரபரப்பு

(கண்டி)

கண்டி - அலவத்துகொடை பகுதி கிராமத்தில் வானிலிருந்து விழுந்த பொருள், இராணுவத்தினரால் பாதுகாப்பு தேவைகளுக் காகப் பயன்படுத்தப்படும் அதிக ஒளி பொருந்திய 'பராலைட்' என கண்டறியப்பட்டுள்ளது.

கண்டி - அலவத்துகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீகல பிரதேசத்தின் வீட்டுத் தோட்டம் ஒன்றில் நேற்றுமுன்தினம் காலை 08.15 அளவில் 'பராலைட்' விழுந்துள்ளது.

சுமார் எட்டு அங்குலம் நீலம் உடைய இது ஒரு 'பராலைட்' என கண்டி விஷேட பொலிஸ் அதிரடிப்படையினர் நடத்திய ஆரம்பகட்ட பரிசோதனையின் போது தெரிவிக்கப்பட்டது. இதனைக் கண்டவர்கள் வானத்திலிருந்து பட்டாசு வெடிப்பு ஓசையுடன் பூமிக்கு வந்து விழுந்ததாக தெரிவித்தனர்.

இப்பொருள் ஒரு ஆயுதத்திலிருந்தே வெளியாகி இருக்க வேண்டும் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் அல்லது அயல் பிரதேசத்தில் யாராவது இதனை பரீட்சித்திருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகப் படுகின்றனர்.

இது சம்பந்தமான, மேலதிக விசாரணைகளை பாதுகாப்பு படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாய ஓய்வூதியம் கிடைக்காதது ஏன்?

சஜித் போர்க்கொடி



(கொழும்பு)

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் கிரமமாக கிடைக்காதது ஏன் என்று நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச.

விவசாயிகளுக்கான ஓய்வூதிய சம்பளத்தை வழங்க இந்த அரசாங்கம் மறுத்து வருவ தாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகளுக்கான ஓய்வூதிய சம்பளத்தை வழங்குவதாக இந்த அரசாங்கத்தின் விவசாயத்துறை அமைச்சர்கள் நாடாளுமன்றில் தெரிவித்தபோதும் அது இதுவரை நடைமுறையில் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன் தினம் விவசாயத்துறை அமைச்சு தொடர்பில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் மேலும் உரையாற்றிய சஜித் பிரேமதாச,

கடந்த மாகாண சபைத் தேர்தல் காலத்தில் விவசாயிகளுக்கான ஓய்வூதிய சம்பளத்தை வழங்குவதாக அரசாங்கம் வாக்குறுதி அளித்த போதும், கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் விவசாயிகளுக்கான ஓய்வூதிய சம்பளம் வழங்கப்படவில்லை என குறிப்பிட்டார்.

# கடன் சுமைகளைச் சமாளிக்க தயாராகிறது அரசு

(கொழும்பு)

புதிய ஆண்டின் நிதிச் சுமைகளைச் சமாளிக்க அரசு தயாராகி வருகிறது. அதற்கான ஏற்பாடுகளில் அரசு குதித்துள்ளது.

சர்வதேச நிதி நிறுவனங்களுடன் ஏற்கனவே கடன் கோரி விண்ணப்பங்கள் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டில் மொத்தம் 1303 பில்லியன் ரூபா கடனை அரசு பெற்றுக்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

இந்தக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை நிதி அமைச்சு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடன் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சர்வதேச கடன் நிறுவனங்களுடன் கடன் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏறகனவே பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மற்றும் வட்டித் தொகைகளை செலுத்தவும், வரவு செலவுத் திட்ட பற்றாக் குறையை ஈடு செய்யவும் அரசாங்கம் இவ்வாறு கடன் பெற்றுக்கொள்ளவுள்ளது.

# பொலிஸாருக்கு பயிற்சி அடுத்த ஆண்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

இம்முறை வரவு - செலவுத்திட்ட யோசனையில் பொலிஸ் பயிற்சிகளுக்காக 950 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்கள கட்டட நிர்மாணப் பணிகளுக்காக மேலும் ஒரு பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நாட்டின் சகல பொலிஸ் நிலையங்களினதும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸ் மா அதிபர் இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கம்பஹா பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.



பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவுக்கு எதிரான தெரிவுக்குழு விசாரணைக்கு கிளம்பும் எதிர்ப்பு.

# அடிப்படை வசதிகளுக்கு பஞ்சம் ஆஸி. சென்ற படகு அகதிகள் நிர்க்கதி

(கொழும்பு)

நவ்வுறுத் தீவில் தஞ்சக் கோரிக்கையாளர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள முகாமில் நிலைமைகள் மிக கொடூரமாகவும் தரக்குறைவாகவும் காணப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவில் தஞ்சம்பெறும் நோக்குடன் படகுகள் மூலம் வந்தவர்களில் 386 ஆண்களது தஞ்சக்கோரிக்கை பரிசீலனை முடியும் வரை இந்த நவ்வுறுமுகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்கியுள்ள கூடாரங்கள் ஆட்களால் நிரம்பி வழிகின்றன. வெப்பத்திற்கும் மழைக்கும் தாக்குப் பிடிக்காத இந்தக் கூடாரங்களில் எவருக்கும் தனிப்பட்ட அந்தரங்கத்துக்கான சுதந்திரமே இல்லை.

எவ்வளவு காலத்துக்கு இவ்வாறு தடுத்து வைக்கப்பட போகிறோம் என்பது தெரியாமலேயே அவர்கள் உளவியல் பாதிப்புகளுக்கு உள்ளாகிவருகின்றனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த முகாம்களில் இருப்பவர்களின் தஞ்சக் கோரிக்கைகளை பரிசீலித்து முடிக்கும் வரை, அவர்கள் 5 ஆண்டுகள் வரையாவது அந்த முகாம்களிலேயே காத்திருக்க வேண்டும் என்று ஆளும் தொழிற்கட்சியும் எதிர்க்கட்சியும் கூறுகின்றன.

நவ்வுறுத் தீவில் ஒவ்வொரு கூடாரத்திலும் 16 பேர் அல்லது 5 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அருகருகே மிக நெருக்கமான படுக்கைகளும் உடுதுணிகளையும் வைத்துக்கொள்ள பிளாஸ்டிக் கூடைகளும் வழங்கப்பட்டுள்ளன. 40 டிகிரி வரையான வெப்பத்துடன் காற்றிலும் அதிக ஈர லிப்புக் காணப்படுவதால் வெப்பம் கொளுத்துவ தாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு கிறது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தூதுக்குழு அங்கு சென்றிருந்தபோது, நிலைமை இன்னும் மோசமாக இருந்துள்ளது. முகாமின் ஒருபகுதியில் மழை வெள்ளம் புகுந்து கூடாரங்களும் படுக்கைகளும் நனைந்தும் இருந்திருக்கின்றன.

குற்றவாளிகளுக்கு கொடுக்கின்ற கடுமையான தண்டனை போல் இது இருக்கிறது. அவுஸ்ரேலியாவில் குற்றவாளிகளுக்கு இதனைவிட நல்லதாகவே நடத்தப்படுகிறார்கள.

ஒரு குற்றவாளிக்கு எவ்வளவு காலம் தான் சிறையில் இருக்கப் போகிறேன் என்பது தெரியும். இங்கு அது கூட எங்களுக்குத் தெரியாது என்று நவ்வுறுமுகாமில் உள்ள ஒருவர் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்துள்ளார்.

தமது நிலைமையை முன்னிறுத்தி 9 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒருவர் 40 நாட்களுக்கு மேலாக உணவு உண்ண மறுத்துவருகிறார் என்றும் அந்த அமைப்பு சுட்டிக் காட்டியிருக்கிறது.

அபாயகரமான படகுப் பயணங்கள் மூலம் அவுஸ்ரேலியா நோக்கி வருவோரை தடுக்கும் நோக்குடன் பசிபிக் கொள்கையை அவுஸ்ரேலியா மீண்டும் கையில் எடுத்துள்ளது.

அவுஸ்ரேலிய மற்றும் நவ்வுறுஅரசுகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உரிமைகள் மீறப்பட்டுவருவதாக சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த டாக்டர் கிரஹாம் தோம் குறிப்பிட்டார்.

இந்த முகாமுக்கு ஆட்களை மாற்றுவதை அவுஸ்ரேலியா உடனடியாக நிறுத்தி, அந்த முகாமையே முழுமையாக மூடிவிடவேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள அரச தரப்பு பேச்சாளர் ஒருவர், சர்வதேச மன்னிப்புச்சபை இந்தக் கருத்தை முன்வைத்திருப்பது ஆச்சரியப்படத்தக்கது அல்ல. இந்த நவுறுமுகாமுக்கு முன்பிருந்தே குடியேறிகளை தடுத்துவைத்திருக்கின்ற வழக்கம் இருந்து வருகிறது என்று அவர் பதில் தெரிவித்துள்ளார்.

# "அந்த" இறுவட்டுக்களை வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

ஆபாசப் படங்கள் அடங்கிய இறுவட்டுக்களை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபர் ஒருவரை வாரியபொல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாரியபொல பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றினையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே சந்தேகநபரைக் கைது செய்ய முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 43 ஆபாசப் படஙகள் அடங்கிய இறுவட்டுக்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாந்தைகிழக்கு பிரதேசத்திற்கு அரசபேருந்து சேவை அவசியம்

## மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு அரச பேருந்து சேவை இன்மையால் இப்பிரதேசத்தில் மீள்குடியேறி வசித்துவரும் மக்கள் போக்குவரத்துத் தேவைகளுக்காக பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் இங்கு மக்கள் மீள் குடியேறி 3 வருடங்கள் கழிந்தும் அரச பேருந்து சேவை இன்மையால் பாடசாலை மாணவர்கள் முதல் நோயாளர்கள் மற்றும் வியாபாரிகள் எனப் பலர் அன்றாடம் நடந்தும் பணம் செலுத்தி வேறு வாகனங்களிலும் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவில் ஏனைய பிரதேசங்களுக்கு அரச பேருந்து சேவைகள் இடம்பெறுகின்ற போதிலும் இப்பிரதேசத்திற்கு வெளிமாவட்டங்களிலிருந்து வரும் அரச பேருந்துகளும் செல்வதில்லை எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

எனினும் ஒரே ஒரு தனியார் பேருந்துசேவை இப்பிரதேசத்தில் இடம்பெறுகின்ற போதும் காலை 9.30 மணியளவில் வந்தால் அடுத்து பிற்பகல் 4.00 மணியளவில் வரும் எனவும் இதனால் தாம் எவ்வித பயனையும் அடையமுடியா துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேச மக்களின் போக்குவரத்துத் தேவைகளை கருத்தில் கொண்டு இங்கு அரச பேருந்து சேவையை ஆரம்பிக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

## பட்டாசு வெடிவிபத்து; இளைஞர் ஒருவர் காயம்

(தென்மராட்சி)

தென்மராட்சி வரணி மந்துவில் பகுதியில் பட்டாசு வெடி விபத்தில் சிக்கிய இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் முற்பகல் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த ந.மிகுந்தன் (வயது-20) என்பவரே இவ்வாறு சிகிச்சைக்கு அனுதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்தில் சிறு காயங்களுக்கு இலக்காகிய மற்றொரு இளைஞர் சாவகச்சேரி மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிய ளவில் குறித்த இளைஞரும் மற்றொருவரும் தென்மராட்சி வரணி மந்துவில் பகுதியில் உள்ள அவரது தோட்டத்தில் குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்து வதற்காகப் பட்டாசு வெடிப் பெட்டி ஒன்றை வாங்கி எடுத்துச் சென்று அங்கே குரங்குகளுக்கு வெடி ஒன்றைக் கொழுத்தி எறிய முற்பட்டபோது அந்த வெடி பட்டாசுப் பெட்டியிலேயே தவறி வீழ்ந்து வெடித் துள்ளது. உடனடியாகப் பெட்டியில் இருநத பட்டாசு வெடிகளும் வெடித்ததினால் ஸ்தலத்தில் நின்றிருந்த இரண்டு இளைஞர்களும் காயமடைந்தனர்.

இருவரும் சாவகச்சேரி மருதுவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கி ருந்து மிகுந்தன் மேலதிக சிகிச்சைக்காக நேற்று முன்தினம் முறபகல் யாழ். போதனாவைத தியசாலையில் சேர்க்கப்பட்ட தாகத் தெரியவருகின்றது. (பா)

## மழை இன்மையால் வறட்சியில் வயல்கள்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை, நவாலி மற்றும் இதர பகுதிகளிலுள்ள மேட்டு நில நெல் வயல்களில் தண்ணீர் வற்றியுள்ளதால் விவசாயிகள் மீண்டும் மழையை எதிர்பார்த்துக்காத்திருக்கின்றனர். சிலர் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் தண்ணீர் இறைக்கின்றனர்.

ஏற்கனவே பெய்த மழையின் போது வெள்ளம் அதிகமாக நின்றதனைத் தொடர்ந்து பலர் வெள்ளத்தை வெட்டி வெளியேயும் கடலுக்கும் ஓட விட்டிருந்தார்கள் தற்போது இவர்கள் மழை எப்போது பெய்யுமென்று காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர். (104)

## விவேகானந்தரின் ஜனனதினம் பேச்சுப்போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வீரத்துறவி விவேகானந்தரின் 150ஆவது ஜனனதின விழாவை முன்னிட்டு உடுவில் கோட்டப்பாடசாலை மாணவர்களிடையே நடத்தப் பெற்றப் பேச்சுப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்தின் அனுசரனையுடன் இந்து ஸ்வயம் சேவா சங்கத்தின் உடுவில் பிரதேச இணைப்பாளரால் நடத்தப்பட்ட இப்பேச்சுப் போட்டி இந்தமாதம் 16ஆம் திகதி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றிருந்தது.


போட்டி முடிவுகள் வருமாறு,

பிரிவு 1, தரம் 10,11 மாணவர்களிற்கிடையே நடைபெற்றிருந்த பேச்சுப்போட்டியில் சுன்னாகம் மயிலணி சைவமகாவித்தியாலய மாணவி ந. சோபினிஜா முதலாம் இடத்தையும், இணுவில் இந்துகக்கல்லூரி மாணவி த.துவாராகா இரண்டாம் இடத்தையும், இணுவில் மத்தியகல்லூரி மாணவி ப.விதுஜனா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.


பிரிவு ii, தரம் 12,13 மாணவர்களிற்கிடையே நடைபெற்றிருந்த பேச்சுப்போட்டியில், இணுவில் மத்திய கல்லூரி மாணவி கு.தயாளினி முதலாம் இடத்தையும், இணுவில் இந்துக் கல்லூரி மாணவி த.கீர்த்தனா இரண்டாம் இடத்தையும், ஏழாலை மகாவித்தியாலய மாணவி ஜெ.வினோஜினி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இவர்களிற்கான பரிசுப் பொதியும், சான்றிதழும் இன்று ஞாயிற்றுக்கிழமை 2.00 மணிக்கு மருதனார் மடம் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் வழங்கப்படவுள்ளன. இப்பேச்சுப்போட்டியில் பங்கேற்ற ஏனைய மாணவர்களிற்கும் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் பரிசும் வழங்கப்படும் என விழாக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் போட்டியில் முதலாமிடங்களைப் பெற்ற போட்டியாளர்கள் விழாவில் பேச வேண்டும் எனவும் போட்டியாளர்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (06)



**யாழ் எயிட் நிறுவனத்தால் யாழ் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டது. இதில் அன்ரா டிஜிற்றல் நிறுவன உரிமையாளர் மயூரன் மாணவன் ஒருவனுக்கு புத்தகப்பை வழங்குவதைக் காணலாம்.**



**அச்சுவேலி பிரதேசத்தில் மருத்துவமனைக்கு அருகாமையில் தம்பி ஒழுங்கைக்கு முன்புறமாக இருக்கின்ற மின்சாரத்தூண் முறிந்து விழும் நிலையில் இருக்கின்றது.**

**இது விடயமாக பல முறை மின்சார சபைக்கு தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.**

**மின்சாரத்தூண் முறிந்து விழுந்து அனர்த்தம் நிகழ்ந்ததன் பின்னர்தான் நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் ஆதங்கத்துடன் தெரிவிக்கின்றனர்.**

## முரசின் இன்றைய பலன்

**(25.11.2012 - ஞாயிற்றுக்கிழமை)**

நந்தன வருஷம் கார்த்திகை மாதம் 10 ஆம் திகதி. நட்சத்திரம்: ரேவதி
அமிர்தயோகம் முற்பகல் 8.43 வரை. திதி: துவாதசி பிற்பகல் 2.57 வரை.
இராகுகாலம் 4.42 - 6.12 வரை. சுபநேரம் 9.12 - 10.42 வரை.
எமகண்டம் 12.12 - 1.42 வரை. குளிகன் காலம் 3.12 - 4.42 வரை.
- கரி நாள், பிரதோஷ விரதம்-

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | தொழில் போட்டி அதிகரிக்கும். சிலர் தொல்லை தருவர். பேச்சில் நிதானம் அவசியம். பணவரவு சுமார். பூர்வ சொத்துக்களால் வருமானம். வீண் கௌரவ செலவு. உறவு வரவு. |
| ரிஷபம் | வெளியூர் பயணம் ஏற்படலாம். தொழில் வளரும். அதிக பணவரவு. உறவினர் நன்மதிப்புடன் நடத்துவர். ஆரோக்கியம். சுபசெய்தி வரும். மாணவர்களுக்கு உயர்ச்சி. |
| மிதுனம் | பிறருக்கு உதவுவதில் மகிழ்வு. தொழிலில் தொந்தரவு இருக்கும். வாகன செலவு. உடல் நலம் மந்தம். திட்டமிட்டவை மாறும். நண்பர் வழி காட்டுவர். ஆன்மிக நாட்டம். |
| கடகம் | நற்செயல்களால் பெருமை பெறுவீர்கள். பேச்சில் சாந்தமும், இனிமையும். சம்பளம், பதவி உயர வாய்ப்பு. உறவினர் நண்பர் மத்தியில் செல்வாக்கு. குடும்ப ஒற்றுமை, மகிழ்ச்சி. |
| சிம்மம் | செயல்களில் நிதானம். தொழிலில் பொறுமை தேவைப்படும். பண வருகை தடங்கல். அலைச்சல் இருக்கும். தெய்வ வழிபாடு. குடும்ப ஆதரவு. உறவினர் ஒத்துழைப்பால் சாந்தி. |
| கன்னி | வேலையில் கண்ணும் கருத்தும். நன்மை தேடிவரும். தொழில் வளர்ச்சி சீராகும். செலவு இருக்கும். குடும்பத் தேவைகள் தீரும். உறவினர் உங்களால் மகிழ்வர். உடல்நலம் சீர். |
| துலாம் | சவாலைச் சந்திப்பீர்கள். தொழில் வளர்ச்சிக்கு புதிய வழி. மேலுயரும் ஆசை. போட்டி, பொறாமை சமாளிப்பீர்கள். அதிக வரவு. கடன் அடைபடும். அரசாங்க வகையில் அனுகூலம். |
| விருச்சிகம் | உழைப்பினால் உயர்வு. புதிய திட்டங்கள் பலனளிக்கும். தொல்லை விலகும். ஆதாயம். நிலம் தொடர்பில் அனுகூல பலன். சுபநிகழ்வு நடத்த திட்டம். மாணவர்க்கு வெற்றி. |
| தனுசு | அடுத்தவர் விவகாரத்தில் நுழைய வேண்டாம்.. கடின உழைப்பால் தொழில் சீராகும். செலவு அதிகரிக்கும். உதவுவதில் மகிழ்ச்சி. மருத்துவ சிகிச்சை. பிள்ளைகளால் ஆறுதல். |
| மகரம் | குடும்பத்தில் பாசம். பணவரவு சுமார். வீண்செலவைத் தவிருங்கள். வாகனப் பயணம் கவனம். எதிர்ப்புகள் இருக்கும். விட்டுக் கொடுத்து வெல்வீர்கள். நண்பர்கள் உதவுவர். |
| கும்பம் | இன்று விவாதம் வேண்டாம். உறவினர் வருகை. எதிர்பாராத செலவு. புதியவர்களிடம் கவனம் வேண்டும். உடல் நலம் மந்தம். வெளியூர் பயணம். பிள்ளைகளால் மகிழ்ச்சி. |
| மீனம் | தடைகளைத் தகர்ப்பீர்கள். உற்சாகமான நாள். பண வரவால் வீட்டில் மகிழ்ச்சி. சொத்து வாங்க யோகம். விருந்தும் கொண்டாட்டமும் இருக்கும். தாய்வழி உறவினரின் உதவி. வெற்றி. |

## வெளியேறியது மான்செஸ்டர் சிட்டி

(மான்செஸ்டர்)

சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில் இருந்து மான்செஸ்டர் சிட்டி அணி வெளியேறியது. ஐரோப்பிய உள்ளூர் கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கும் 58ஆவது சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் ஐரோப்பிய நாடுகளின் முக்கிய நகரங்களில் நடக்கிறது. இதில் ரியல் மாட்ரிட், ஏ.சி., மிலன் உள்ளிட்ட 32 அணிகள் எட்டு பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன.

இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் நகரில் நடந்த டி பிரிவு லீக் போட்டியில் மான்செஸ்டர் சிட்டி, ரியல் மாட்ரிட் அணிகள் மோதின. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணி வீரர் பென்ஜிமா முதல் கோல் அடித்தார். இதற்கு மான்செஸ்டர் சிட்டி அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் ரியல் மாட்ரிட் அணி 1-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியின் கடைசி நேரத்தில் எழுச்சி கண்ட மான்செஸ்டர் சிட்டி அணிக்கு 73ஆவது நிமிடத்தில் செர்ஜியோ அகுயிரோ பெனால்டி மூலம் கோல் அடித்தார். தொடர்ந்து போராடிய இரு அணி வீரர்களால் கூடுதலாக கோல் எதுவும் அடிக்க முடியவில்லை. இதனால் இப்போட்டி 1-1 என்ற கணக்கில் சமநிலையானது.

இதுவரை விளையாடிய 5 லீக் போட்டியில் 3 சமநிலை, 2 தோல்வி உட்பட 3 புள்ளிகள் மட்டும் பெற்றுள்ள மான்செஸ்டர் சிட்டி அணி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

## இரண்டாவது டெஸ்ட் இன்று

(கொழும்பு)

நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்றைய தினம் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அடிலெய்ட் டெஸ்ட்; ஆஸி முன்னிலை

(அடிலெய்ட்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான அடிலெய்ட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி அடிலெய்டில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 388 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் ஸ்மித் 122, பீற்றர்சன் 54, கலிஸ் 58 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிஸ் மூன்று, பீற்றர் சிடில், லம்ப் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

164 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் அவுஸ்ரேலிய அணி விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வருகின்றது. நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, அவுஸ்ரேலிய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றருந்தது. இதில் டேவிட்வோனர் 41, கௌவான் 29, பொண்டிங் 19 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது அணித் தலைவர் கிளார்க், மைக்கல் ஹசி ஆகியோர் களத்திலுள்ளனர். பந்து வீச்சில் கிளெய்ன்வெல்ற் மூன்று, மோர்கல், ஸ்டெயின் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். ஐந்து விக்கெட்டுக்களை கைவசமுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி 273 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 550.

இரு அணிகளுக்குமிடையில் பிறிஸ்பேனில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.





## குக், கெவின் இணைப்பாட்டம் இங்கிலாந்து சிறப்பான ஆரம்பம்

(மும்பை)

குக், கெவின் பீற்றர்சன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி வலுவான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது.

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி மும்பையில் நடைபெற்று வருகின்றது.

இதில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. ஸ்வான், பனிசர் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய இந்தியா அணி, அதன் முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றது. இதில் புஜாரா 135, அஸ்வின் 68, ஹர்பஜன்சிங் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பனிசர் ஐந்து, ஸ்வான் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடி வரும் இங்கிலாந்து அணி, குக், கெவின் பீற்றர்சன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. இறுதியில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, இங்கிலாந்து அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் குக் 209 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர் 10 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களையும், பீற்றர்சன் ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். மூன்றாவது விக்கெட்டுக்காக குக், பீற்றர்சன் இணை இதுவரை 110 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுள்ளது. பந்து வீச்சில் ஓஜா இரண்டு விக்கெட்டுக்களை விழ்த்தினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும். இங்கிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 149 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தோல்வியைத் தவிர்க்க பங்களாதேஷ் போராட்டம்

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்க்க் பங்களாதேஷ் அணி போராடி வருகின்றது. பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி குல்னாவில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 648 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் சந்தர்போல் ஆட்டமிழக்காது 150 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் சாமுவேல்ஸ் 260, பிராவோ 127 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஷகிப் அல் ஹசன் நான்கு, ஹெசி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். 261 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் பங்களாதேஷ் அணி, மேற்கிந்தியத்தீவுகள் அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வருகின்றது. ஒரு கட்டத்தில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது நசீர் உசைன், ஷகிப் அல் ஹசன் இணை சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியைக் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இருப்பினும் இந்த இணை 134 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை, பங்களாதேஷ் அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஷகிப் அல் ஹசன் 97 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது நசீர் உசைன் 59 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெஸ்ட் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க பங்களாதேஸ் அணி இன்னும் 35 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேண்டும் ஊக்கமருந்து சோதனை


(பாரிஸ்)

ரென்னிஸ் போட்டிகளில் ஊக்க மருந்து சோதனைகளை அதிகரிக்க வேண்டும் என, முன்னணி ரென்னிஸ் வீரர்கள் ரோஜர் பெடரர், ஆன்டி முர்ரே வலியுறுத்தியுள்ளனர்.

இது குறித்து பெடரர் கூறுகையில், ஊக்க மருந்து தொடர்பாக வீரர், வீராங்கனைகளிடம் இந்த ஆண்டு குறைவாகவே இரத்த சோதனை நடந்தது. இதை அதிகரிக்க வேண்டும் என்றார்.

ஆன்டி முர்ரே கூறுகையில், ஆர்ம்ஸ்ரோங் செய்தி மிகவும் அதிர்ச்சி தருகிறது. வீரர்கள் தங்களது விளையாட்டில் இப்படி நடப்பது வெறுக்கத்தக்கது. ரென்னிஸில் சோதனை முறைகளைக் கடுமையாக்க வேண்டும் என்றார்.

சர்வதேச ரென்னிஸ் சங்கத்தின், ஊக்கமருந்து தடுப்பு மைய முகாமையாளர் ஸ்டுவர்ட் மில்லர் கூறுகையில், போட்டிகள் இல்லாத நாட்களிலும், இரத்த மாதிரி போன்ற கடுமையான சோதனைகள் நடத்துவதை, அதிகரிக்க முயற்சி செய்து வருகிறோம் என்றார்.



## மூவருக்குப் பங்குண்டு

(லண்டன்)

எனது வளர்ச்சியில் மனைவி அஞ்சலி உட்பட மூன்று பெண்களுக்கு முக்கிய இடம் உண்டு என இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

ஜாம்பவான்களுடன் கலந்துரையாடல் என்ற பெயரில் வெளியாகியுள்ள புத்தகத்தில் இந்திய கிரிக்கெட்டின் சாதனை மன்னன் சச்சின் டெண்டுல்கரின் பேட்டியும் இடம் பெற்றுள்ளது. அதில் நகைச்சுவையாக ஒரு கேள்வி கேட்கப்பட்டது. பயங்கரமான வேகப்பந்து வீச்சு அல்லது கோபமான மனைவி இதில் எதற்கு பயப்படுவீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலேயே டெண்டுல்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னை ஏற்கனவே சிக்கலில் இழுத்துவிட்டு விட்டீர்கள். நான் இப்போது வீட்டில் இருந்து வெளியே இருக்கிறேன். அதனால் கோபமான மனைவிக்கு பயப்படுவேன் என்று தான் சொல்ல முடியும்.

எனது வளர்ச்சியில் மனைவி அஞ்சலி உட்பட மூன்று பெண்களுக்கு முக்கிய இடம் உண்டு. முதலில் அம்மா. அவரது இடத்தை யாராலும் எடுத்துக் கொள்ள முடியாது. 2ஆவது பெண்மணி எனது அத்தை. நான் கிரிக்கெட் பயிற்சியை தொடங்கிய காலத்தில், எனது வீட்டில் இருந்து பள்ளிக்கும், பயிற்சி இடத்திற்கும் செல்ல தூரமாக இருந்ததால், எனது மாமி அத்தை வீட்டில் 4 ஆண்டுகள் தங்கியிருந்து பள்ளிக்கும், கிரிக்கெட் பயிற்சிக்கும் சென்று வந்தேன். அவர்கள் அளித்த ஊக்கத்தை மறக்க முடியாது. அடுத்தது எனது மனைவி அஞ்சலி. 1990ஆம்ஆண்டு அவரை முதன் முதலில் சந்தித்தேன். இப்போது என்னை அவருக்கு 21 ஆண்டுகள் தெரியும். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் ஏற்ற, இறக்கங்கள், கடினமான காலக்கட்டங்கள் அனைத்திலும் எனக்கு பக்கபலமாக இருந்து ஊக்கம் அளித்து வருபவர் அவர் தான் என்றும் டெண்டுல்கர் குறிப்பிட்டார்.

## ஒரு நாள் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு

(குல்னா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டிக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடருக்கான போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணி மோதவுள்ளன.

இதில் முதல் இரண்டு ஒருநாள் போட்டிகள் குல்னாவில் வருகிற 30ஆம் திகதி மற்றும் டிசம்பர் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த இரண்டு ஒருநாள் போட்டி கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் அணியில் இடம் பிடித்துள்ள நசிமுதீன், வேகப்பந்து வீச்சாளர் ஷாகாத் ஹுசைன், சுழற்பந்து வீச்சாளர் எலியாஸ் சன்னி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில், முஷிபுர் ரஹிம் (கப்டன்), மக்முதுல்லா, தமிம் இக்பால், அனாமுல் ஹக், ஜஹிருல் இஸ்லாம், நயீம் இஸ்லாம், ஷகிப் அல்மிஹசன், நசிர் ஹுசைன், சோஹக் காஜி, அப்துர் ரசாக், அபுல் ஹுசைன், ருபெல் ஹுசைன், மஷராப் மொர்டாசா, ஷபியுல் இஸ்லாம் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

# மத்திய கல்லூரியில் நடைபெற்ற இலவச நீச்சல் பயிற்சிப் பட்டறை



(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகத்தில் மூன்றுநாள் நீச்சல் பயிற்சி பட்டறை ஒன்று கடந்த மூன்று நாட்கள் இடம் பெற்றது. யாழ். மத்திய கல்லூரியும், அதன் பழைய மாணவர் சங்கமும் இணைந்து யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களின் நீச்சல் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. யாழ். மாவட்டத்திலுள்ள 33 பாட-சாலைகளைச் சேர்ந்த வீரர்கள் இப்பயிற்சிநெறியில் கலந்து கொண்டனர். நேர அட்டவணைக்கு அமைய இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சிப் பட்டறையில் பங்குகொண்ட வீரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இந்நிகழ்வில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ். எழில்வேந்தன், கிரிக்கெட் பயிற்றுநர் வி.கே. சண்முகலிங்கம், பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் சட்டத்தரணி எஸ். பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# கஜீபன், தனுஷன் சிறப்பான செயற்பாடு ஸ்கந்தவரோதயா கல்லூரி அபார வெற்றி

(சுன்னாகம்)

கஜீபன், தனுஷன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்று கடந்த 21ஆம் திகதி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி கஜீபனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜீபன் 90 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 15 பவுண்டரிகள் அடங்கலாக 100 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். இந்த வருடம் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் சதம் அடித்த யாழ். மாவட்ட வீரர் கஜீபன் என்பது குறிப்பிடத்தக்கது. பந்து வீச்சில் பிரசாந்த் நான்கு, விதுசன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி, தனுஷனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையைப் பெறவில்லை. பந்துவீச்சில் தனுஷன் 13 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

104 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தனுஷனின் பந்து வீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 34 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இரண்டாவது இனிங்ஸிலும் எந்தவொரு வீரரும் தாக்குப்பிடித்து ஆடிவில்லை. பந்து வீச்சில் ஏ.தனுஷன் 13 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், வி.தனுஷன் நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தி அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர்.

# ஒவ்வொரு மாவட்டங்களிலும் கரம் மையம்; விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை



(கொழும்பு)


25 மாவட்டங்களிலும் தலா ஒரு கரம் விளையாட்டுக்காக உள்ள அரங்கு அமைக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் 2016 இல் இது பூர்த்தி செய்யப்படும் எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

ஏ. எச். எம். அஸ்வர் முன் வைத்த ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றியபோதே விளையாட்டுத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக கரம் சம்பியன் போட்டியில் வென்ற அனைவருக்கும் எமது பாராட்டைத்தெரிவிக்கின்றோம்.முதற் தடவையாக பங்கு பற்றிய இலங்கை வீரர் உலக சம்பியனானார்.

அவருக்கு 10 இலட்சம் நிதி, தொழில் உட்பட பல உதவிகள் வழங்கப்பட்டன. கிராம மட்டம் முதல் நாடாளுமன்றம்வரை சகல இடத்திலும் கரம் விளையாடப்படுகிறது. இது தொழில் ரீதியான விளையாட்டாக ஊக்குவிக்க வேண்டியுள்ளது.

சர்வதேச மட்டத்தில் வெற்றியீட்டக் கூடிய பல விளையாட்டுக்களை அடையாளம் கண்டுள்ளோம். சர்வதேச கரம் போட்டி நடத்தக் கூடிய விளையாட்டு அரங்கொன்றை அமைக்க ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.



தேசிய மட்ட கராத்தே போட்டியில் கிளிநொச்சி மகாதேவா சைவ் சிறுவர் இல்லத்தினர் நான்கு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளனர். அண்மையில் கொழும்பில் நடைபெற்ற இக்கராத்தே போட்டியில் குமித்தே (சண்டை) போட்டியில் நான்கு வெண்கலப்பக்கத்தையும் மற்றும் முதல் எட்டு வீரர்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் பதக்கம் வென்றோர் மகாதேவா சைவ சிறுவர் இல்லத்தின் தலைவர், கராத்தே ஆசிரியர் சென்சே விஜயராஜ் ஆகியோருடன் நிற்பதைக் காணலாம். (எஸ்.பி)

# யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி


மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இனிங்ஸ் போட்டி கடந்த புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 23.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லக்ஸ்சானந் 19, திவாகரன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் சங்கீதன் மூன்று, கலைச்செல்வன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 24 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுசன் ஒன்பது, சங்கதீன் ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் குறைந்த ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்துவீச்சில் திவாகரன் ஆறு, சஜீதன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஐந்து ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி, 20.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லக்ஸ்சானந் 17, அலன்ராஜ் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கலைச்செல்வன் ஐந்து, சிறிராம் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 57 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி, 20.4 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் விதுஷன் 12, கிரிதகணேஷ் ஆட்டமிழக்காது 10 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வலுச்சேர்ந்தனர். பந்துவீச்சில் திவாகரன், கஜீதரன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



# அதிகாரங்கள் ஏன் பகிரப்படவேண்டும்?



நவீன அரசியலில் மக்கள் பங்கு பற்றுதல் என்பது முன் எப்போதையும் விட முக்கியமான விடயமாகும் ட்விட்டர், பேஸ்புக், கூகிள் என வெகுஜனங்கள் பங்குபற்றக் கூடிய வலைத்தளங்கள் வந்து விட்டன. ஒவ்வொரு விடயத்திலும் வெகுஜனங்களின் கருத்துக் கணிப்பு என்பது இன்று சாதாரண விடயமாகி வருகிறது. தகவல்களை அறிவதற்கான சாதாரண மனிதனின் சுதந்திரம் வலுவடைந்துள்ளது. இந்தக் காலத்தில் இன அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கல் தேவையில்லை என்பது யதார்த்தத்திற்குப் புறம்பானதும் சமகால வாழ்வியலுக்கு எதிரானதுமாகும். வறுமையை ஒழித்தல், சகலவிதமான சமத்துமின்மைகளையும் காலாவதியாக்குதல் குறிப்பாக எமது சூழலில் சாதி, பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றின் வக்கிரமான இருப்பை உணருதலும் செயற்படுதலும் மனிதர்கள் பரஸ்பரம் கண்ணியமாக நடந்து கொள்ளுதல் என்பன முக்கியமான விடயங்களாகும்.

இன அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கலுக் கெதிரான ஏகபோக அதிகாரம் எவ்வளவு அகங்காரமானதோ அதே அளவிற்கு ஊடக ஏகபோக அதிகார அகங்காரங்களும் ஆபத்தானதாகும். உண்மைகளை மறைத்து திரித்து போதையேற்றும் வாணிபத்தனமான ஊடகத்துறையும் தோற்கடிக்கப்படவேண்டும்.

இராணுவமயமாக்கல், திட்டமிட்ட குடியேற்றங்கள் எந்தளவு தூரம் தமிழர்கள் என்ற ரீதியில் பிரச்சினை ஆனதோ அதே அளவிற்கு வறியவர்களுக்கும், தீண்டாமையின் ஆக்கிரமிப்பில் உழல்பவர்களுக்குமான நிலப்பிரச்சினையும் முக்கியமானது.

யாழின் சனத்தொகை 25 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட 50 வீதமாக குறைந்திருந்தும் காணிப்பிரச்சினை பூதாகரமானது. வன்னியிலும் காணிகளுக்கு ஆவணமில்லாமல் - காணி இல்லாமல் இருப்பவர்களின் பிரச்சினை பாரியது. ஏழைகளின் நிலங்களை இராணுவ தேவைகளுக்காக கையப்படுத்துவது தார்மீக நெறிமுறைகளுக்கு ஒவ்வாதது. நிலமில்லாதவர்களுக்கு நிலம் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவேண்டும்.

அதிகாரப்பரவலாக்கல் மூலம் உருவாகும் அரச கட்டமைப்பே இதனை மேற்கொள்ள வேண்டும். அதற்குரிய அதிகாரங்கள் பிராந்தியமட்டத்தில் இருக்கவேண்டும். நிலம் ஒரு முக்கியமான பிரச்சினை. தவிர சட்டம் ஒழுங்கு, சுகாதாரம், கல்வி, கலாசாரம், போக்குவரத்து, குடிநீர், உள்ளூர் சக்திவளங்களை சூழலுக்கு பாதகமில்லாமல் வளர்த்தெடுத்தல். பிராந்தியமட்ட அதிகாரம் கல்வி நிலையங்களுள் நிலவும் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதாக அமையவேண்டும். கதாநாயக, நாயகி பாடசாலைகள் மறைய வேண்டும்.

சமூக ஏற்றத்தாழ்வின் கட்டுமானமாக இவை இருக்கின்றன. பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் களையப் படவேண்டும். 13ஆவதன் கீழான அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைச் சாத்தியமாக்கப்படவேண்டும்.

முன்னர் எப்போதையும் விட இலங்கை இந்து சமுத்திர, பிராந்திய சர்வதேச சிரத்தைகளை கவனத்திலெடுத்தாகவேண்டும். வடக்கு மாகாண சபைத் தேர்தலை அடுத்த வருடத்தில் நடத்துவது ஒப்புக்கொள்ளப்பட்டது வரவேற்கவேண்டியதே.

ஆனால் 13ஆவதின் கீழான அதிகாரங்கள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். பகிரப்பட்ட அதிகாரங்களை மத்திக்கு எடுத்துக்கொள்வதற்கான நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கான புதிய ஏற்பாடுகளும் அரசியலமைப்பில் உள்ளடங்க வேண்டியிருக்கிறது. இன்று நீதித்துறை, விசேட அதிகாரம், சட்டவாக்கசபை இவற்றுக்கிடையேயான சிக்கல்கள் முரண்பாடுகளும் இதனை உணர்த்துகின்றன.

அனைத்துக் கட்சி நாடாளுமன்ற தெரிவுக்குழு செயற்படுவதற்கான சூழல் சாத்தியமானால் அதிகாரப்பரவலாக்கல், இன சமூகங்களிடையே நல்லுறவு இவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப் படவேண்டும். அதிதீவிர இனவாத சக்திகளின் குரல் வலுவடைய அனுமதிக்கக் கூடாது. இது ஜனநாயகம், சமாதானம், சகோதரத்துவத்தில் நம்பிக்கை உள்ள தலைவர்களின், மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பும் கடமையுமாகும்.

இலங்கை ஜனநாயக பாதையில் பயணிப்பதற்கு இது முதல் படி.

**சுகு - ஸ்ரீதரன் கட்டுரையிலிருந்து.**

# ராஜினாமா!



ராஜாஜியிடம் நான் காரியதரிசியாக வேலை பார்த்த நாளில், சில சமயம், அவருடன் ரயில் பயணம் செய்ய வேண்டியிருக்கும். அப்போது ஒருநாள் நடந்த ரசமான சம்பவம், என் வாழ்க்கைப் பாதையை. மாற்றி அமைத்து விட்டது என்று துணிந்து சொல்லலாம்.

ரயில், "லொடக்" என்று, இரண்டு ஆட்டம் ஆடி நின்றதும், தூங்கிக் கொண்டிருந்தவன், தூக்கி வாரிப்போட்டு எழுந்தேன். நாங்கள் இறங்க வேண்டிய சங்ககிரி துர்க்கம் ஸ்டேஷன் வந்தது. ராஜாஜியும், அப்போதுதான் எழுந்து, தம் படுக்கையைச் சுருட்ட ஆரம்பித்தார்.

அதைப் பார்த்து, நானும் என் படுக்கையைச் சுருட்ட ஆரம்பித்தேன். அதைக் கட்டுவதற்கு ஒரு கயிறு வைத்திருந்தேன். படுக்கையைச் சுருட்டி, அதனடியில் கயிற்றைவிட முயன்றபோது, படுக்கை முழுவதும் அவிழ்ந்து விழுந்தது! பிறகு படுக்கைக்கும், எனக்கும் பெரிய மல்யுத்தம் ஆரம்பித்தது.

தலையணையை உள்ளே திணித்தால், ஜமுக்காளம் வெளியே வந்து விழுந்தது. அதைத் திணித்து விட்டுப் பார்த்தால், துப்பட்டி எப்படியோ வெளியில் வந்து கிடந்தது. எல்லாவற்றையும் மறுபடியும் வைத்துச் சுருட்டி விட்டுப் பார்த்தால், கயிற்றை காணவே காணோம்.

துப்பட்டி, கயிற்றையும் சேர்த்து அழைத்து, படுக்கைக்குள் போய்விட்டது. துப்பட்டி மறுபடியும் வெளியில் வராமல், கயிற்றை மட்டும் எடுப்பதற்குள், எனக்கு மூச்சு வாங்கிவிட்டது.

மறுபடியும், படுக்கையை கட்டத் தொடங்கினேன். ஒரு வார்த்தையில் சொல்கிறேனே, அவரசத்தில் நம்மைக் காலை வாரி விடுவதற்கு, படுக்கையையும், கயிற்றையும் போன்ற வஞ்சக துரோக வஸ்துக்கள் ஒன்றுமே இல்லை.

என்னவெல்லாமோ செய்து பார்த்தேன். படுக்கையை அந்தக் கயிறு கட்டவே மாட்டேன் என்றது.


அதற்குள்ளே, ரயில் விசில் அடித்து விட்டது. தம் படுக்கையைக் கட்டி, அதையும், மற்ற சாமான்களையும் கீழே இறக்கி விட்டு, என்னைப் பார்த்தார் ராஜாஜி! மளமளவென்று வந்து, என் கையிலிருந்து, கயிற்றைப் பிடுங்கி, அதை ஒரு வாங்குவாங்கி, ஒரு இழுப்பு இழுத்து, படுக்கையைக் கட்டி, முடிச்சு போட்டார்.

அப்புறம் கூட, அதை என் வசத்தில் ஒப்படைத்தால், விபத்து நேருமோ, என்னவோ என்று பயந்து, தாமே தூக்கிச் சென்று, பிளாட்பாரத்தில் போட்டார்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர், ரயிலில் இருந்தவர்கள். எனக்கு மானமே போய்விட்டது. கொஞ்ச நாளைக்கெல்லாம், என்னுடைய காரியதரிசி பதவியையே ராஜினாமா செய்து விட்டேன்!

**- ஆனந்த விகடன் (1938) இதழில் அமரர் கல்கி!**

# கனவு முகமூடி



கனவு காணாதவர்கள் யாருமே இருக்க முடியாது. காணும் நல்ல கனவுகள் நனவாக வேண்டும் என்றும் விரும்புகிறோம். ஆனால் நல்ல கனவுகள் மட்டுமே எப்போதும் வருவதில்லை. கெட்ட கனவுகளும் வந்து மனதை சஞ்சலப்படுத்துகின்றன. பொதுவாக கனவு என்பது நம்கையில் இல்லை. அது தூக்கத்தில் எப்போது வரும், எப்போது மறையும் என்பது யாருக்கும் தெரியாது. கனவுகளில் பகல்கனவு, அதிகாலை கனவு, இரவுக் கனவு என பிரிக்கின்றனர். பகல்கனவு பலிக்காது என்றும், அதிகாலை காணும் கனவு பலிக்கும் என்பதும் நம்பிக்கை. இப்போது விரும்பியதை கனவாக காண்பதற்காக புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "ரெமி ஸ்லீப் மாஸ்க்" எனப்படும் இந்தக் கருவி ஒரு முகமூடி. இதை தூங்கும்போது முகத்தில் அணிந்து கொண்டால் போதுமாம். விரும்பிய கனவை காணலாமாம். இந்த கருவியில் 6 சிவப்பு, எல்.இ.டி. விளக்குகள் உள்ளன. இவை தூங்கும் போது மூளையை பார்த்துக்கொண்டே இருக்கும். ஆனால் உங்களின் தூக்கம் கெட்டுப்போகாது. இந்த விளக்குகள் நீங்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது நீங்கள் காண நினைக்கும் கனவுகள் பற்றிய பதிவுகளை மூளைக்கு பிரதிபலிக்கும். அப்போது நீங்கள் விரும்பும் கனவு உங்கள் மனக்கண்ணில் தெரியும்.

கெட்ட கனவுகள் வருவதை தடுக்கவும், பயத்தைப் போக்கவும் இந்தக் கருவி மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று இந்தக் கருவியை கண்டுபிடித்துள்ள டுன்கன்பிராசியர், ஸ்டீவ் மெக்கூய்கன் என்ற இரு விஞ்ஞானிகளும் உறுதியளித்துள்ளனர். தினமும் 15-20 வினாடிகளுக்கு ஒருமுறை உங்களது விருப்பம் இந்தக் கருவி மூலம் மூளைக்கு செலுத்தப்பட்டு அதன் அடிப்படையில் நீங்கள் விரும்பிய கனவு மனக்கண்ணில் தோன்றும் என்று இதை கண்டுபிடித்தவர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்தக் கனவு எப்போது நிறைவேறும் என்று தெரியவில்லை. காரணம் இந்த கருவி இன்னும் விற்பனைக்கு வரவில்லை.



# எஸ்.எம்.எஸ். அனுப்புது நாசா

சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையம் எங்கு பறக்கிறது என்று எஸ்.எம்.எஸ். மூலம் மக்களுக்கு தெரிவிக்கும் சேவையை நாசா தொடங்கியுள்ளது. அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் மற்றும் ரஷ்யா, ஜப்பான், கனடா, ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் விண்ணில் செலுத்தப்பட்டு வெற்றிகரமாக இயங்கி வருகிறது "ஐ.எஸ்.எஸ்" சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம். இதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் உள்பட 6 பேர் தங்கியிருந்து தற்போது ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். றொக்கெட்களை நிலைநிறுத்தும் தளம், ஆய்வுக் கருவிகள், விஞ்ஞானிகள் தங்கி ஆய்வு நடத்தும் பகுதி என மொத்தம் 450 தொன் எடை கொண்ட ஐ.எஸ்.எஸ், பூமியில் இருந்து சராசரியாக 370 கி.மீ. உயரத்தில் பறந்தபடி பூமியை தினமும் 15 முறை சுற்றி வருகிறது.

சூரியன், சந்திரனுக்கு அடுத்தபடியாக வானில் பளிச்சென்று தெரியும் பொருள் என்பதால், அதிகாலை மற்றும் மாலை நேரத்தில் தொலைநோக்கு கருவியின் உதவியின்றி வெறும் கண்ணாலேயே ஐ.எஸ்.எஸ்-ஐ பார்க்கலாம் என்று நாசா கூறியுள்ளது. அதைப் பார்க்க விரும்புபவர்களின் வசதிக்காக புதிய எஸ்.எம்.எஸ் சேவையை நாசா தொடங்கியுள்ளது. அதாவது, ஐ.எஸ்.எஸ். பறந்துவரும் பகுதியில் உள்ளவர்களுக்கு "உங்கள் வீட்டின் மீது ஐ.எஸ்.எஸ். பறக்கிறது" என்று நாசா எஸ்எம்எஸ் அனுப்புகிறது. ஐ.எஸ்.எஸ். செயற்பட தொடங்கி 12 ஆண்டுகள் ஆவதை குறிக்கும் வகையிலும், மக்களுக்கு ஐ.எஸ்.எஸ். மற்றும் விண்வெளி ஆராய்ச்சி மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் வகையிலும் இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளதாக நாசா இணை நிர்வாகி வில்லியம் கெர்ஸ்டன்மயர் தெரிவித்துள்ளார்.

# வெற்றியின் இரகசியம் 14

- ப. அருண்பரத் -

நேரம் கடைப்பிடித்தல்!

நேரம் திட்டமிடல் மற்றும் திட்டமிட்டபடி ஒரு வேலையை, அதற்காக ஒதுக்கிய நேரத்தில் செய்து முடிப்பது ஒரு கலை.

நாம் செய்ய வேண்டிய வேலைகளின் முக்கியத்து வத்தை உணர்ந்து, வரிசைப்படுத்துதல் அவசியம். சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப, ஒரு வேலையின் முக்கியத்துவம் மாறக் கூடும். அதனால், அப்போது செய்ய வேண்டிய வேலையின் வரிசையும் மாறும். ஒரு வேலையின் தன்மையை உணர்ந்து, அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கு எவ் வளவு நேரமாகும் என்பதை, துல்லியமாகக் கணக்கிட நேர அறிவு வேண்டும்.

மேலதிகாரி சொல்கிறாரே என்பதற்காக, ஒரு வாரம் எடுக்கும் வேலையை, மூன்று நாட்களில் செய்து தருவதாக உத்தரவாதம் அளித்து, முடிக்க முடியாமல் திணறக் கூடாது. நேரத் திட்டமிடலில் குளறுபடியானால், விளைவு- விபரீதமாக இருக்கும்.

உதாரணமாக, ஒரு இடத்திற்குச் செல்ல, ஒரு மணிநேரம் எடுக்கும் பட்சத்தில், அரை மணிநேரம் என்று திட்டமிட்டு, அசுர வேகத்தில் வண்டியோட்டி, விபத்து நேரிட வாய்ப்பு இருக்கிறது.

மேற்சொன்ன நேரத் திட்டமிடல், தேர்வுக்குத் தயார் செய்யும் மாணவன், கட்டடம் கட்டும் இன்ஜினியர், அறுவைச் சிகிச்சை செய்யும் டாக்டர் மற்றும் புதிதாகத் தொழில் தொடங்கும் தொழிலதிபர் எல்லோருக்கும் பொருந்தும்.

சலனம், சபலம், கவனச்சிதறல் மற்றும் மனச்சோர்வு ஏற்படும்போதும், உணர்வுகளால் அலைக்கழிக்கப்படும் போதும், தீர ஆலோசித்து தீட்டிய திட்டத்தை, மாற்றிக் கொண்டே இருக்கும் பழக்கத்தைக் கைவிட வேண்டும். மனதுக்கு பிடித்த வேலையை மட்டுமே செய்யாமல், அந்த நேரத்தில் என்ன வேலை செய்யத் திட்டமிட்டிருந்தோமோ, அந்த வேலையில் முழு மனதோடு ஈடுபட வேண்டும்.

ஒரு வேலையைத் தொடங்கும் முன், அந்த வேலையின் நோக்கம், வேலையைச் சிறப்புற செய்வதால் கிடைக்கும் பலன் ஆகியவற்றை மனதில் நிறுத்தினால், ஈடுபாடு தானாக வரும். ஒரு வேலைக்குத் தேவையான உபகரணங்கள், சம்பந்தப்பட்ட விவரங்கள் ஆகியவற்றை, தயார் நிலையில் வைத்துக் கொண்டால், வேலை தங்கு தடையின்றி நிறைவேறும்.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள், திட்டமிட்ட வேலையைத் திட்டமிட்ட நேரத்தில், திட்டமிட்டபடி, முழு ஈடுபாட்டுடன் செய்யும் பழக்கம் கொண்டவர்கள். இந்தப் பழக்கம் வருவதற்கு, சுயகட்டுப்பாடு அவசியம். நம்முடைய நேரத்திட்டத்தில் இல்லாத ஒரு வேலையை, நம்மிடத்தில் ஒப்படைக்க யாராவது வந்தால், ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்த்து, "இப்போது என்னால் இந்த வேலை- யைச் செய்ய இயலாது" என்று நாசூக்காகவும், ஆணித்தரமாகவும் சொல்ல வேண்டும்.



நேர அறிவு உள்ளவர்களுக்கு, விழித்திருக்கும் நேரமெல்லாம், மனதில் கடிகாரம் ஓடிக் கொண்டிருக்கும். நேர உணர்வு இருக்கும்போது, ஒரு வேலை எவ்வளவு நேரமெடுக்கும், எந்த நேரத்தில் என்ன வேலை செய்வது என்ற தெளிவு இருக்கும். நேர உணர்வு உள்ள சிலருக்கு, 'Body Clock' இருக்கும் என்பர். அதிகாலையில் குறிப்பிட்ட நேரத்தில், அலாரம் இல்லாமல் இவர்களால் எழுந்திருக்க முடியும்.

இன்றே செய்ய வேண்டிய எந்த வேலையையும், நாளைக்கு தள்ளிப் போடுவது மோசமான பழக்கம். நேரமின்மையாலும், தவிர்க்க இயலாத காரணத்தாலும் இன்றைய வேலையைத் தள்ளிப் போடலாம். ஆனால், சோம்பேறித்தனத்தாலோ, இன்றே செய்வதற்கு மனம் விரும்பவில்லை என்ற காரணத்தாலோ, நண்பர்கள் தங்களைப் பொழுது போக்கிற்கு அழைக்கின்றனர் என்பதாலோ, அதிக முக்கியமில்லாத வேறு வேலை செய்வதற்கு மனம் விரும்புகிற காரணத் தினாலோ, ஒரு வேலையைத் தள்ளிப் போடுவது தோல்வியாளர்களின் குணம்.

குறித்த நேரத்தில், ஒரு வேலையைச் செய்து முடிக்கும் பழக்கம் வந்து விட்டால் குடும்பத்திலும், அலுவல கத்திலும், வாடிக்கையாளர்களிடத்திலும், நம் மீது இருக்கும் நம்பிக்கையும், நன்மதிப்பும் கூடும்.

நண்பர்கள் மற்றும் உறவினர்களிடத் தில் பேசவும், பழகவும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். உறவுகள் என்பது பூச்செடி போன்றது. சில நாட்கள் தண்ணீர் ஊற்றாமல், செடி வாடிய பின், அதைத் தழைக்க வைப்பது கடினம். உறவும் அது போலத் தான். அவ்வப்போது நலம் விசாரித்து, உறவுகளை வலுப்படுத்த வேண்டும். அதே சமயம், உறவுகள் நம்முடைய திட்டமிட்ட வாழ்க்கையை திசைத்திருப்பி, நிம்மதியைக் குலைத்துவிடக் கூடாது. நாம் முக்கிய வேலையில் இருக்கும்போது, அவர்கள் நம்மைத் தொந்தரவு செய்தால், "பிறகு பேசுகிறேன்" என்று நாசூக்காகச் சொல்லி விட வேண்டும்.

காலம் பொன்னானது. கடந்து போன காலத்தைத் திரும்பப் பெற இயலாது. அதனால் தானோ அதற்கு, "இறந்த காலம்" என்று பெயர் வைத்தனர்.

பணத்தால், பதவியால், கல்வியால், குடும்பப் பின்னணியால் ஏற்றத் தாழ்வு இருக்கலாம். இருப்பவன், இல்லாதவன் என்ற பாகுபாடு இருக்கலாம். உலகிலுள்ள அனைவருக்கும், சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள சொத்து, நேரம். ஏழைக்கும், பணக்காரனுக்கும் ஒரு நாளில், 24 மணி நேரம் தானே!

நேர உணர்வு, நேரத் திட்டமிடல், நேரம் கடைப்பிடித்தல் ஆகியவை வெற்றியாளர்களின் குணங்களாகும். இந்தக் குணங்களை நாமும் பெற்றால் வெற்றி நிச்சயம்.

தொடரும்...

## பாலமுரளியின் திரை இசைப் பாடல்கள்


- R.P. ராஜநாயஹம் -

பின்னணிப் பாடகி பி.சுசிலா விழா. சில மாதங்களுக்கு முன் நடந்தது. விஜய் டிவியில் ஒளிபரப்பப்பட்டது.

பாலமுரளி கிருஷ்ணா சுசிலாவுடன் இனணந்து "தங்கரதம் வந்தது வீதியிலே ஒரு தளிர்மேனி வந்தது நேரினிலே, மரகத தோரணம் அசைந்தாட, நல்ல மாணிக்க மாலைகள் கவிபாட பாட"

பாலமுரளி கிருஷ்ணா அனாயசமாக அதிக சிரமப்படாமல் பாடினார்.

"மாங்கனி கன்னத்தில் தேனூற
இரு மைவிழி கிண்ணத்தில் மீனாட
தேன் தரும் வாழைகள் போராட
தேவியின் மேனி தள்ளாட ஆட
தங்கரதம் வந்தது
வீதியிலே"



அதே சமயம் சுசிலாவும், சௌந்தரராஜனும் பி.பி.ஸ்ரீனிவாஸ் மூவரும் பாடிய போது முதுமை காரணமாக ரொம்பச் சிரமப்பட்டு பாடினார்கள். முதியவர்தான் என்றாலும் கூட பாலமுரளி மட்டும் இயல்பாக நன்றாகப் பாடினார். பாலமுரளி கிருஷ்ணா கர்நாடக சங்கீத பாடகர் என்பதால்தான் அந்த விசேஷப்பயிற்சி. அவரால் இந்த "தங்கரதம் வந்தது"ஆபோகி ராகப்பாடலை இந்த வயதிலும் நன்றாகப் பாட முடிந்திருக்கிறது. ஸ்ரீதரின் "கலைக்கோயில்" படத்தில் இடம்பெற்ற பாடல்.

பாலமுரளி சினிமாவுக்காகப் பாடிய பாடல்களில் மிகப்பிரபலமான திருவிளையாடல் பட "ஒரு நாள் போதுமா, இன்றொரு நாள் போதுமா" பாடல் காட்சியில் டி.எஸ்.பாலையாவின் நடிப்பு அந்தப் பாடல் மிகப் பிரபலமாக ஒரு காரணம்.

"சாது மிரண்டால்" படத்தில் டி.ஆர். ராமச்சந்திரனுக்காக அவர் பாடிய பாடல் "அருள்வாயே நீ அருள்வாயே திருவாய் மலர்ந்து அருள்வாயே"

"சுபதினம்" என்ற கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் படத்தில் முத்துராமனுக்கும் புஷ்பலதாவுக்கும் ஒரு பாடல். ரொம்ப நல்ல டூயட் பாடல். பாலமுரளி - சுசிலா பாடியது. "புத்தம்புது மேனி இசைத்தேனி தூங்கும் மலர் மஞ்சமோ"

"கண்மலர்" (கிருஷ்ணன்) பஞ்சுவின் தம்பி "பட்டு" இயக்கிய படம். ஜெமினி, சரோஜாதேவி, சௌகார் ஜானகி, நாகையா நடித்த படம். இந்தப் படத்தில் "பாமாலை அவர் படிக்க பூமாலை நான் தொடுக்க வாழ் நாள் நடந்ததையா நடராஜா" என்ற எஸ். ஜானகி பாடலுக்கு ஒரு தொகையறா பாலமுரளி பாடியிருந்தார் கேதார் கௌளை ராகத்தில். படத்தில் வி.நாகையா தொகையறாவுக்கு நடித்தார்.

"அம்பலத்து நடராஜா உன் குணத்தை காட்டுதற்கு
என் குலத்தைத் தேர்ந்தெடுத்ததேனையா
உன் பதமே கதியென்று நம்பியவர் வீட்டினிலே
கண் மறைக்கும் விளையாட்டு ஏனய்யா"

"கவிக்குயில்" படத்தில் ரீதிகௌளை ராகத்தில் பாலமுரளியின் "சின்னக்கண்ணன் அழைக்கிறான் ராதையை, பூங்கோதையை, அவள் மனம் கொண்ட ரகசிய ராகத்தைப் பாடி சின்னக்கண்ணன் அழைக்கிறான்"


கண்ணதாசன் மூன்றாம் திருமணம் செய்துகொண்டதைத்தொட்டு பின் எழுதிய பாடல் பாலமுரளி பாடியது. பாலசந்தரின் "நூல்வேலி" படத்தில் இடம் பெற்றது. ஒரு நாள் வீட்டில் கண்ணதாசன் தன் பூட்டிய அறைக்குள் இந்தப் பாடலை மட்டும் மீண்டும், மீண்டும் ஒலிக்கச் செய்து கேட்டுக்கொண்டிருந்தாராம்.

"மௌனத்தில் விளையாடும் மனசாட்சியே
ஆயிரம் நினைவாகி ஆனந்தக்கனவாகி
காரியம் தவறானால் கண்களில் நீராகி
மௌனத்தில் விளையாடும் மனசாட்சியே"

சமீபத்தில் பாலமுரளி கிருஷ்ணா பாடிய பாடல் பாண்டிராஜின் "பசங்க" படத்தில் ஜேம்ஸ் வசந்தன் இசையில் "அன்பாலே அழகாகும் வீடு"

பாலமுரளி கிருஷ்ணாவின் திரைப்படப்பாடல்கள் தனியாக வெளியிடப்பட்டிருக்கிறதா?

## கற்காலம்



"மூன்றாம் உலகப் போரில் என்னென்ன போர்க் கருவிகள் பயன்படுத்தப்படும்" என்று ஒரு நண்பர், அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீனிடம் கேட்டார்.

"அது எனக்குத் தெரியாது. ஆனால், நான்காம் உலகப் போரில் கற்கருவிகளே பயன்படுத்தப்படும்" என்று ஐன்ஸ்டீன் சிரித்தவாறே கூறினார்.

மூன்றாம் உலகப்போர் ஏற்பட்டால், உலகம் அழிந்துவிடும். பின் மனித இனம் தோன்றி கற்கால நாகரிகம் தொடங்கும் என்ற கருத்தில்தான் அவர் இப்படிக் கூறினார்.




# கணனி உலா

A.J.Nimalrajan

# Social Plus: பேஸ்புக் அறிமுகப்படுத்தும் புதிய வசதி


பல்வேறு சமூக வலைத்தளங்களுக்கு மத்தியில் அசைக்க முடியாத அரசனாகத் திகழும் பேஸ்புக் இணையத்தளமானது தனது பயனர்களுக்காக Social Plus எனும் புத்தம் புதிய வசதியினை அறிமுகப்படுத்தியுள்ளது.



அதாவது Social Plus எனும் நீட்சியினை நிறுவிக் கொள்வதன் மூலம் பேஸ்புக் தளத்தின் தோற்ற அம்சங்களை விரும்பியவாறு மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.

Google Chrome, Mozilla Firefox மற்றும் Safari உலாவிகளுக்காக வெளியிடப்பட்டுள்ள இந்நீட்சியின் உதவியுடன் அசைக்கக்கூடிய Chatting Window, Album slideshow, Picture preview, Dislike Button போன்ற பல்வேறு வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். தீவிர Profile Theme - இனை மாற்றியமைக்கக்கூடிய வசதியும் காணப்படுகின்றது. இதற்காக 500 வரையான தீம்களும் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# கூகுள் குரோம் உலாவியிலேயே இசையமைப்பதற்கு



உலகின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள நண்பர்களுடன் இணைந்து கணனி மற்றும் இணைய வசதியுடன் இசையமைத்து மகிழலாம்.

ஆனால் இவற்றிற்கு எந்த இசைக்கருவியோ, மென்பொருட்களோ தேவையில்லை. கூகுள் குரோம் உலாவி மட்டும் இருந்தால் போதும். குறித்த இணையத்திற்கு சென்று, நீங்கள் விரும்பும் இசைக் கருவியை தெரிவு செய்யவும். 19 இசைக் கருவிகளை 3இற்கும் மேற்பட்ட நண்பர்களுடன் இணைந்து வாசிக்கலாம்.

# கணனி மோசடியை தவிர்க்க...



கணனி பாவனையாளர்கள் அனைவரும் தனக்கென தனி இரகசிய குறியீடுகளை வைத்திருப்பர்.

ஆனால் இதனை அறிந்து கொண்டு ஒருவரின் தகவல்களை அறியவும், மோசடி செய்யவும் அதிகளவு வாய்ப்பு உண்டு. இதனை தடுப்பதற்காக தற்போது புதிய நவீன தொழில்நுட்பம் அறிமுகமாக உள்ளது. அதாவது கணனியில் குறித்த பாவனையாளர்களின் கண் கருவிழி படலங்களின் பார்வை இரகசிய குறியீடாக பயன்படுத்தப்பட உள்ளது.


இந்த புதிய முறையை அமெரிக்காவின் டெக்சோஸ் மாகாணத்தில் உள்ள சான்மார்கோ பல்கலைக் கழகத்தை சேர்ந்த கணனி விஞ்ஞானி ஒலெக் கொமோ, கோர்ட்சேவ் கண்டுபிடித்துள்ளனர்.

இவர்கள் கூறுகையில், ஒரு பொருளை இரண்டு பேர் ஒரே மாதிரியாகப் பார்க்க முடியாது. ஒவ்வொருவரின் பார்வையும் பல கோணங்களாகத்தான் இருக்கும். எனவே ஒருவரின் தகவல்களை திருடுவது என்பது முடியாத ஒன்று என்று தெரிவித்துள்ளனர்.

# இன்றைய உலகம் இவர்களால்...

இன்றைய உலகை கணனியே ஆள்கிறது. காய்கறி விற்பனைகூட கணனியால்தான். மனித இன வளர்ச்சியில் எடிசன் தந்த மின்சாரம் முதல் மாற்றத்தைத் தந்தது. அதனையொற்றியே உலகம் இயங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இயந்திரங்கள் உருவாக்கப்பட்டு தொழிற்புரட்சி நடந்தது. இதற்கடுத்தாற்போல மின்னணு சாதனங்கள் உருவாயின. இதன் உச்சமாக இன்று உலகமே கணனிமயமாகிவிட்டது. இந்தத் தொழில் நுட்பத்தை கைக கொண்டு சாதனை படைத்தவர்களாகவும், இன்றைய உலகில் தவிர்க்க முடியாத, தெரிந்து கொள்ளவேண்டியவர்களாவும் இருக்கிற சிலரைப் பார்க்கலாம்.

## Steve Jobs



அப்பிள் கணனி நிறுவனர்களுள் ஒருவர். மிகச் சிறிய அளவில், கைகளில் எளிதாக வைத்துக் கொள்ளும் வகையில் அப்பிள் iPhone, iPod, iPad ஆகியவற்றை உருவாக்கியவர். கணனித் தொழிலில் இவரது இந்தத் தயாரிப்புகள் தான் இன்று உலகச் சந்தையில் பல்லாயிரம் கோடிப் பணத்தை அள்ளிக்குவித்துக் கொண்டிருக்கிறது.

1955 பெப்ரவரி 24இல் அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் பிறந்த இவர் கடந்த ஆண்டு (2011) ஒக்ரோபர் 5இல் மறைந்தார். இவர் கல்லூரிப் படிப்பை பாதியில் விட்டவர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

## பில் கேட்ஸ்



Microsoft கணனி நிறுவனத்தை நிறுவியவர். உலகெங்கும் பல கோடிக்கணக்கான இல்லங்கள், அலுவலகங்களில் இவரது கணனிக்ள் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 1995லிருந்து 2007 வரை உலகின் முதல் பணக்காரராக இருந்தவர். இப்போது இரண்டாவது இடத்தில் இருக்கிறார். தற்போது அந்நிறுவனத்தின் 8 சதவீதப் பங்குகளை மட்டும் வைத்துக் கொண்டு செயல்படாத நிர்வாகியாக உள்ளார்.

தனது வருமானத்தை உலகம் முழுதும் உள்ள பல அறக்கட்டளைகளுக்கு நன்கொடையாக அளித்துவருகிறார். குறிப்பாக போலியோ ஒழிப்பில் ஈடுபட்டுவரும் ரோட்டரி அமைப்பிற்கு உதவிவருகிறார். 1955 ஒக்ரோபர் 28இல் அமெரிக்காவின வாஷிங்டனில் சீட்டல் நகரில் பிறந்த பில் கேட்ஸ், தற்போது வாஷிங்டன் அருகில் உள்ள மெடினாவில் வாழ்ந்துவருகிறார்.

## லினக்ஸ் டோர்வால்ட்ஸ்




Microsoft கணனி போலவே இன்னொரு கணனி லினக்ஸ். இந்தக் கணனியின் மூல மென்பொருளை, பயன்படுத்துவோர் அனைவரும் அறிந்து கொள்ளும் விதமாக வெளிப்படையாக அளித்து கணனி அறிவை வளர்க்கும் முயற்சிக்கு வித்திட்டவர்.

தற்போது உலகெங்கும் விரைந்து விற்பனையாகிக் கொண்டிருக்கும் அன்ட்ரோய்ட் (Android) கையடக்கக் கணனி இவரது புதிய படைப்பு. கூகுள் இணைய வசதியை உள்ளடக்கி எந்த இடத்திலும் இணையத்தைப் பயன்படுத்த ஏதுவாக உருவாக்கப்பட்டுள்ளது. 1969 டிசம்பர் 28 இல் பின்லாந்தின் ஹெல்சின்கியில் பிறந்த லினஸ் டோர்வால்ட்ஸ், தற்போது அமெரிக்கா, ஓரிகான் மாநிலம், போர்ட்லாந்தில் வாழ்ந்துவருகிறார்.

## டிம் பெர்னெர்ஸ் லீ



வலைத்தளத்தின் மூலம் உலகையே இணைத்தவர் இவர்தான். இன்று இணைய தள முகவரிக்கு முன்னால் WWW என்பதைச் சேர்க்கிறோமே, அந்த WORLD WIDE WEB - கண்டுபிடித்தவர் டிம் பெர்னெர்ஸ் லீ. இங்கிலாந்தைச் சேர்ந்த கணனிப் பொறியாளரான லீ உலகின் முதல் கணனி இணைய உலாவியையும் (web browser), கணனி இணையப் பரிமாற்றகத்தையும் (web server) 21 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கினார். 1955இல் லண்டனில் பிறந்த இவர் தற்போது அமெரிக்காவின் மசாசுடெட்சில் வாழ்கிறார்.





## லேரி பேஜ் ,செர்ஜி பிரின



உலகில் அதிகமானவர்களால் பயன்படுத்தப்படும் GOOGLE தேடுபொறியை இந்த இருவரும் இணைந்து உருவாக்கினார்கள். எந்தப் பொருள் குறித்தும் அறிய இன்று அனைவரும் கூகுள் இணையத் தேடுபொறித் தளத்தைத்தான் அணுகுகின்றனர். 1973 மார்ச் 26இல் அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலம், லேன்சனில் பிறந்தவர் லேரி பேஜ். தற்போது அமெரிக்காவில் கலிபோர்னியா, பாலோ அட்டோவில் வாழ்கிறார்.

1973 ஆகஸ்ட் 21இல் அன்றைய சோவியத் யூனியனின் (ரஷ்யா) மொஸ்கோவில் பிறந்தவர் செர்ஜி பிரின். இவர் தற்போது அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலம் லாஸ் அல்டோவில் வாழ்கிறார்.

## இவான் வில்லியம்ஸ்




இன்று கணனியில் விரல் பதித்தவுடனேயே முதல் கணக்குத் திறப்பது சமூக இணைய தளங்களில்தான். அவற்றில் முன்னணியில் உள்ள Twitter என்ற சமூக உரையாடல் இணைய தளத்தையும், Blogger என்ற கருத்துத் தளத்தையும் உருவாக்கியவர் இவான் வில்லியம்ஸ். 1972 மார்ச் 31இல் அமெரிக்காவின், நெப்ரஸ்கா க்ளார்க்ஸ்சில் பிறந்த இவர் தற்போது அங்குள்ள கலிபோர்னியா, சான் பிரான்சிஸ்கோவில் வாழ்கிறார். தனிமனிதர்களின் உணர்வுகள், எண்ணங்கள், கருத்துகளை வெளிப்படுத்தும் மிகப்பெரிய தளமாக இவர் உருவாக்கிய இணைய தளங்கள் உள்ளன.

## மார்க் ஷுக்கர்பெர்க்



இன்றைய உலகின் மிக அதிகமானவர்கள் பேசிப் பழகும் முதன்மையான சமூக இணையதளமான Facebook உருவாக்கியவர் இந்த 28 வயது இளைஞர். அமெரிக்காவின் நியூயோர்க், வைட் பிலைன்சில் 1984 மே 14 இல் பிறந்த மார்க் ஷுக்கர் பெர்க், இன்று உலகின் இளம் பணக்காரர்களில் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். ஹாவர்ட் பல்கலைக் கழகத்தில் படித்த இவர், தனது படிப்பை பாதியிலேயே விட்டவர். பின்னர் தனியே முயன்று Facebook தளத்தை உருவாக்கியுள்ளார். இன்னொரு முக்கிய செய்தி உண்டு. அது என்ன தெரியுமா? தன்னை மதமற்றவர் என்றும், நாத்திகர் என்று அறிவித்துக் கொண்டுள்ளார்.

# வடமாகாண ஆளுநரால் நூல்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ் பொது நூலகம், யாழ் பல்கலைக்கழக நூலகம் என்பவற்றிற்கு ஆளுநரினால் நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இந்நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

15வது ஆளுநர் மாநாட்டினை முன்னிட்டு பல்வேறு பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் வட மாகாண சபையின் திணைக்களங்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. அப்புத்தகங்களை ஆளுநர் யாழ் பொது நூலகம், யாழ் பல்கலைக்கழக நூலகம், யாழ் மாவட்ட செயலகம், பௌத்த இந்து கலாசார நிறுவ்னம் ஆகியவற்றிற்கு அன்பளிப்பாக வழங்கினார்.

யாழ் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா யாழ் பொது நூலகத்திற்கான நூல்களையும், யாழ் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் யாழ் மாவட்ட செயலகத்திற்கான பிரதிகளையும், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி வசந்தி அரசரட்ணம் யாழ் பல்கலைக்கழக நூலகத்திற்கான நூல்களையும் பெற்றுக் கொண்டனர். பௌத்த இந்து கலாசார நிறுவனத் தலைவர் எஸ்.இராமச்சந்திரன் தனது நிறுவனத்திற்கான பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்

இதேவேளை சப்பிரகமுவ ஆளுநரினால் அன்பளிப்பு செய்யப்பட்ட 'தம்மபதம்' நூலும் அனைவருக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார்.

# சரசாலை பொதுநூலகத்தின் வாசிப்புமாத போட்டிமுடிவுகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபை சரசாலை பொது நூலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு - I

கு.சுஜீப் மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் இ.விருஜா - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், சி.விதுசா மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்.

பிரிவு - II

சு.துவாரகா மட்டுவில் அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலை இருவர் இரண்டாமிடம், மு.ரஜீபா மட்டுவில் கமலாசினி வித்தியாலயம், பா.ஜெனீற்றா மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயாக் கல்லூரி, இ.அபிராமி மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்.

பிரிவு - III

மு.அர்ச்சனா, இ.சங்கீதா, இ.லக்சிகா மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, முன்பள்ளி மாணவர்களின் கதைசொல்லும் போட்டி ஆ. கிசானா சமீபா முன்பள்ளி, அ.பவித்திரன் ஜனாதீப முன்பள்ளி, த.வர்ணன் மாதுனை முன்பள்ளி.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு தேசியவாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் வைத்து வழங்கப்படும் என நூலகர் இ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (11)

# வடமாகாண தொழிற்துறை திணைக்களத்தின் மக்களுக்கான சேவைகள் விபரம்

(கார்த்தி-சிகரம்)

வடமாகாண தொழில்துறை திணைக்களம் வட மாகாணத்திலுள்ள அனைத்து சிறிய நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களும் சொந்தமாக தொழில் ஒன்றை ஆரம்பித்து வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான தொழில் பயற்சிகளையும், வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்கள், உதவிகளையும் வழங்கி வருகின்றது.

கிராமிய தொழிற்துறையின் ஊடாக வளமான சமூகத்தை உருவாக்கும் நோக்குடனேயே கைத்தறி நெசவுப் பயிற்சி, சிறு கைத்தொழில் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்திப் பயிற்சி, தொழிற்திறன் பயிற்சி, வாழ்வாதார தொழில் அபிவிருத்தி சேவை, குறுங்கால தொழில்நுட்ப பரிமாற்ற பயிற்சிகளை வழங்குதலே வட மாகாண தொழிற்துறை திணைக்களத்தின் பிரதான தொழிற்பாடுகளாக உள்ளன

**வட மாகாண தொழிற்துறை திணைக்களத்தால் வழங்கப்படுகின்ற சேவைகள**

பருத்தி நூலிலான கைத்தறி நெசவு உற்பத்திகளிலான 06 மாத கால நெசவுப் பயிற்சி.

தும்பு, மரவேலை,மட்பாண்ட உற்பத்தி ஆகிய பாரம்பரிய சிறுகைத்தொழில்கள் தொடர்பில் 06 மாத கால பயிற்சி நெறிகள்.

விழிப்புணர்வு ஏற்படுத்தல், வியாபாரம், நிதி, சந்தைப்படுத்தல் திட்டங்கள், திறன் விருத்தி, கடன் அணுகுமுறை, நியூக்கிளியஸ் உருவாக்கம் போன்ற வாழ்வாதார தொழில் அபிவிருத்தி.

**குறுங்கால தொழில்நுட்ப பரிமாற்ற பயிற்சிநெறிகள்**

மரவேலை, மேசன் வேலை மற்றும் பனை, பன்புல், பற்றிக் துணி, கழிவுக்கடாதாசி, தோல் பொருள் சார்ந்த உற்பத்திகள், சிப்பி சோகியிலான உற்பத்திகள், தேங்காய் சிரட்டையிலான உற்பத்திகள், வீட்டு மின் இணைப்புகள், கணனி வன்பொருள், ஒட்டுவேலை, குழாய் இணைப்பு, படகு வெளியிணைப்பு திருத்தும் பயிற்சி, மோட்டார் வாகனம், ஆட்டோ திருத்தும் தொலைபேசி திருத்தும் பயிற்சி.

**வேலைவாய்ப்பு உதவிச் சேவைகள்**

உசிதமான தொழிற்பயிற்சி கற்கைநெறிகளைத் தெரிவுசெய்து கொள்வதற்கான வழிகாட்டல்கள், தொழிற்பயிற்சி வழங்குனர்களுடன் இளம் வயதினரை தொடர்பாக்குதல், வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான வழிகாட்டல், தொழில் ரீதியான வழிகாட்டல், தனிப்பட்ட நிதி திட்டமிடல் மற்றும் நிர்வாகத்திற்கான வழிகாட்ட்ல், வேலைவாய்ப்பு வங்கி.

**தொழில் முயற்சி அபிவிருத்தி**

· வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான வழிகாட்டல், வியாபாரங்களுக்கான அறிவுரை சேவை, தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உதவி, நிதித் திட்டமிடலுக்கான வழிகாட்டல்கள், சந்தைகள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு அணுகுதலைப் பெற்றுத் தருதல், இணையம், மின்னஞ்சல் உதவி.

வட மாகாணத் தொழிற்துறைத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பயிற்சிகள், சேவைகளைப் பெற்றுக்கொள்ள ஆர்முள்ளவர்கள் பின்வரும் முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

யாழப்பாணம் - மாவட்ட அலுவலகம், தொழிற்துறைத் திணைக்களம்,கச்சேரி, யாழ்ப்பாணம். தொ.பே.இல:- 021-2223546 ,வவுனியா -மாவட்ட அலுவலர், தொழிற் துறைத் திணைக்களம், கச்சேரி, வவுனியா., தொ.பே.இல- 024-2223083, கிளிநொச்சி - மாவட்ட அலுவலர், தொழிற்துறைத் திணைக்களம், கச்சேரி, கிளிநொச்சி. தொ.பே.இல - 021-3217577, முல்லைத்தீவு - மாவட்ட அலுவலர், தொழிற் துறைத் திணைக்களம், கச்சேரி, முல்லைத்தீவு. தொ.பே. இல - 021-3217576, மன்னார் மாவட்ட அலுவலர், தொழிற்துறைத் திணைக்களம், கச்சேரி, மன்னார். தொ.பே.இல - 023-2222418

# பதிவிறக்கப் பெட்டகம்

விபத்தொன்றில் சிக்கி என் தந்தை மருத்துவமனையில் நினைவற்றுக் கிடந்த நாளொன்றில் என் தாத்தம்மா இறந்து போனார். தனது ஒரே மகனுக்கு நேர்ந்துவிட்ட அந்தக் கொடுமையை அறியாமலே அவர் இறந்துபோனார். தனது தாய் இறந்து போனது தெரியாமலே எனது தந்தை நினைவிழந்து கிடந்தார். தற்செயலான இந்த இரு நிகழ்வுகளையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி பாவம் புண்ணியம் வாங்கிவந்த வரம் என்பதாக சாவு வீடு புலம்பித்தள்ளியது. ஒத்த மகனைப் பெத்தும் ஒதவாமப் போச்சே என்பதுதான் சோகத்தின் மையமாயிருந்தது. அதாவது கொள்ளிக்குடம் உடைப்பதற்கென்றே இருந்த பிள்ளை ஆஸ்பத்திரியில் கிடக்கிறதே என்பதுதான். சரி, மகன் இல்லாவிட்டாலென்ன மகள் என்ற முறையில் என் தாய்க்கு நான் கொள்ளிக்குடம் உடைக்கிறேன் என்று என் அத்தையும் கோரவில்லை. 'வழக்கத்தில்' இல்லாத ஒன்றை கேட்க வேண்டுமென்று அவருக்கு தோன்றாமல் போனதில் வியப்பில்லை. ஆனால் மகள் கொள்ளிவைத்தால பிணம் ஏற்காதா என்கிற கேள்வியை ஆவேசமாக எழுப்பிய 'கொள்ளிவை' என்கிற நாடகத்தைப் பார்த்து கைதட்டிய நான் ஏன் அமைதியாயிருந்தேன்? அந்தக் கேள்வியை வெறுமனே நாடக வசனமாக கேட்டு கைதட்டி அங்கேயே மறந்து விட்டிருந்தேனா? மிக முக்கியமான அந்தக் கேள்வியை வாழ்க்கைக்கானதாக நான் உள்வாங்கிக் கொள்ளவேயில்லையா? கலை இலக்கியத்தையும் வாழ்வையும் தொடர்புபடுத்திக்கொள்ள தெரியவில்லையா எனக்கு? அல்லது என் வசதியை முன்னிட்டு பயன்படுத்துவது ஃ மறந்து விட்டவன் போலிருப்பது என்று சந்தர்ப்பவாதியாக இருக்கிறேனா? 'கொள்ளிக்குடம்' உடைப்பதும் கொள்ளிவைப்பதும் ஆண்கள் செய்வதுதானே வழக்கம் என்று நான் உட்பட எல்லோருமே இயல்பாக நம்பியதால் நாங்கள் யாரும் என் அத்தையிடம் கோரவுமில்லை. கடைசியில் என் அத்தை உட்பட எல்லோரும் சேர்ந்து, என் தந்தையின் நிலையிலிருந்து கொள்ளிக்குடம் உடைக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்து வழக்கத்தை காப்பாற்றினார்கள்.

மீசையை மழி, மொட்டையடி போன்ற வற்புறுத்தல்களிலிருந்து தப்பிக்க இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாத நான் செய்து என்ன ஆகப்போகிறது என்று கூறி மறுத்துவிட முடிந்த என்னால், கொள்ளிக்குடம் உடைப்பதை மறுக்க ஒரு பொய்யைக்கூட சொல்ல முடியாமல் போனது ஏன்? எரிக்கிற சாதிகள் கொள்ளி வைப்பது, புதைக்கிற சாதிகள் கொள்ளிக்குடம் உடைப்பது என்கிற சாதிசார்ந்த சடங்கை செய்துதான் ஆகவேண்டுமா என்கிற கேள்வி எனக்கு எழாமல் போனது மட்டுமல்ல, கொள்ளிக்குடம் உடைக்கும் சடங்கை எனது அத்தையிடம் ஒப்படைக்காதன் மூலம் ஒரு ஆணாகவும் நான் செயல் பட்டிருக்கிறேன். வழக்கத்தைக் காப்பாற்றுவது என்பதன் பெயரால் ஆண் என்கிற எனது அதிகாரத்தைத்தான் இங்கு நான் காப்பாற்றியிருக்கிறேன்.

– ஆதவன் தீட்சண்யா

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் படைக்கப்பட்டவனல்ல மனிதன். சந்தர்ப்ப சூழ்நிலைகள்தான் மனிதனால் படைக்கப்படுகின்றன. – பெஞ்சமின் டிஸ்ரேலி

ஒன்றைச் செய்ய விரும்பினால் வழியைக் கண்டடைகிறாய். செய்யாமல் இருக்க விரும்பினால் காரணங்களைக் கண்டுபிடிக்கிறாய். – ஹென்றி செஸ்டர்

வெளிநாடுகளில் நான் சந்தித்த 90 சதமானம் பதிப்பாளர்களுக்குத் தமிழ் என்ற ஒரு மொழி இருக்கிறது என்பது எங்கள் சந்திப்பிற்குப் பிறகுதான் தெரியும். மீதி 10 சதமானத்தில் பெரும்பான்மையினருக்கு இலங்கைத் தமிழர்கள் அவர்கள் நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தபோது தெரியும். சிறுபான்மையினருக்கு இந்தியாவுக்கு வந்துள்ள காரணத்தால் தெரியும். தமிழ் இலக்கியம், சிந்தனைகள்வழி தமிழை அறிந்த ஒருவரையும் பார்க்கக் கிடைக்கவில்லை.


ஒரு இன மக்களிடம் அவர்களுடைய மொழியையும் பண்பாட்டையும் பற்றிய போலியான நினைப்புகளையும் போலியான நினைவுகளையும் ஏற்படுத்துவது அவர்களை மெதுமெதுவாகப் படுகொலை செய்வதற்குச் சமமானது.

– காலச்சுவடு கண்ணன்

பூனை புலியைப் போல பயங்கரமாக இருந்ததா என்பது முக்கியமில்லை. எலி பிடித்ததா என்பதுதான்! – பெல்ஸி

எந்த சமூகம் தன் குழந்தைகளையும் முதியவர்களையும் பிச்சை எடுக்க விட்டிருக்கிறதோ அது உள்ளுக்குள்ளேயே அழுகிக் கொண்டிருக்கும் சமூகம். – ஜெயகாந்தன்

# நிபுணத்துவசேவை கிடைக்காமையால் வடக்கு மக்கள் ஆபத்தின் விளிம்பில்



(கொழும்பு)

வடக்கில் மீள்குடியமர்ந்த மக்கள் நிபுணத்துவசேவைகள் கிடைக்காமல் அல்லாடிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக மருத்துவர்களின் சேவைக் குறைவு காரணமாக அனாவசிய உயிரிழப்புகளுக்கு உட்படும் ஆபத்தான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். என்று ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் அவர்கள் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

வரவு, செலவுத்திட்ட விவாதத்தின் உயர் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கம் முதலில் வவுனியா பல்கலைக்கழக கல்லூரி வளாகமாக அமையப்பெற்றது. இதற்காக தனியாக இடமொன்றைப் பெற்றுக் கொண்டுள்ள சூழலில் அவ் வளாகம் இன்னும் முழுமை பெறவில்லை. எனவே அந்த நடவடிக்கைகளையும், ஏற்பாடுகளையும் விரைவுபடுத்த வேண்டும் என கௌரவ உயர்கல்வி அமைச்சரிடம் இந்த மன்றில் கேட்டுக்கொள்கிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயம், மற்றும் பொறியியல் பீடங்களை கிளிநொச்சியில் அமைப்பதற்கான ஏற்பாடுகளின் முன்னெடுப்புகளை கௌரவ உயர்கல்வி அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க அவர்கள், கிளிநொச்சிக்கு வருகைதந்து பூர்வாங்க நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டிருந்தமை உத்வேகம் அளிக்கும் செயற்பாடாக அமைந்திருந்தது. இதற்காக என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றிகளையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீள்குடியமர்ந்த வன்னிப் பிரதேச மக்களின் பிரதான தொழிலாக விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி என்பன அமைந்திருக்கிறது. மரபு சார்ந்த முறைகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் அவர்களின் விவசாய, கால்நடை உற்பத்திகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் மாற்றத்திற்குரிய நல்லதொரு இடைவினை அப்பிரதேசத்தின் விவசாயிகளுக்கும் பல்கலைக்கழக சமூகத்திற்கும் இடையே ஏற்படும் வாய்ப்புக்கள் இதனால் அதிகரித்துள்ளது.

இதே போன்று கணித விஞ்ஞான பிரிவுகளில் உயர்தரங்களில் கற்கும் இந்தப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக்கழக சமூகத்தின் ஊடாக கல்வி அறிவு அதிகரிக்கும் வாய்ப்பும் பரீட்டையில் சித்தி எய்தும் வீதமும் கூட அதிகரிக்கும்.

இவ்வாறாக பல்கலைக்கழகத்தின் பீடங்கள் வட மாகாணத்தின் பின் தங்கிய மாவட்டங்களுக்கு நகர்த்தப்படுவதன் ஊடாக நல்ல மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்படுகின்றன என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கிளிநொச்சிப் பல்கலைக் கழக விவசாய மற்றும் பொறியியல் பீடங்களின் நிர்மாணத்திற்கும், செயற்படுத்துதலிற்கும் இந்திய அரசும் முன்வந்துள்ளமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதும், வரவேற்புக்குரியதுமாகும்.

மேன்மை தங்கிய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அவர்களும் யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்ற இந்திய தூதரகப் பிரிவின் துணைத் தூதுவர் அவர்களும் நேரடியாகவே விவசாய, பொறியியல் பீடங்களின் அமைவிடங்களுக்கு விஜயம் செய்திருந்தனர்.

அத்தோடு உதவிக்கான வாய்ப்புகள் பற்றி ஆராய்ந்தனர். உதவுவதற்கான உறுதிமொழிகளை வழங்கியிருந்தனர். தற்போது உதவித்திட்டங்களுக்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு விரிவாக்கப் பிரிவுகளில் மீன்பிடித் தொழில்நுட்பத்திலும், விளையாட்டு விஞ்ஞானப் பிரிவிலும், வவுனியா வளாகத்தினால் ஆங்கில மொழியிலும் டிப்புளோமா பட்டங்களுக்குரிய கற்கைகளையும் பட்டங்களையும் வழங்கியுள்ளன.

ஆனால், துரதிஷ்டமாக இவர்களுக்கான வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, இவர்களின் நிபுணத்துவத்தை சமூகம் பெற்றுக் கொள்ளும் வகையில் இவர்களுக்கான வேலை வாய்ப்புக் களை வழங்கியுதவுமாறு கௌரவ கல்வி அமைச்சர் அவர்களையும், கௌரவ கடற்றொழில், நீரியல்வள அமைச்சர் அவர்களையும் இச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அவர்களைப் பாடசாலைகளில் ஆசிரியர்களாகவும், மீன்பிடி அமைச்சில் மீன்பிடி உதவியாளர்களாகவும் இணைத்துக் கொள்வதற்கு ஆவன செய்யுமாறு மிகவும் வினயத்துடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மீள்குடியேற்றம் நிகழ்ந்த பின்தங்கிய மாவட்டங்களின் மக்கள் இன்று பல்வேறு நிபுணத்துவம் வாய்ந்த சேவையாளர்களின் தேவைக்காக அல்லாடிக் கொண்டிருக்கின்றனர்.

உயிர்வாழ்வுக்கு அவசியமான வைத்தியர்களின் தேவை மிகுந்த பற்றாக்குறையாக இந்த மாவட்டங்களில் இருப்பதனால், அனாவசிய உயிர் இழப்புகளுக்கு உட்படும் ஆபத்தான நிலையிலேயே இந்த மக்கள் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். என்றும் அவர் தெரிவித்தார்.

## தொகுதி அமைப்பாளர் நியமனம் சுதந்திரக்கட்சிக்குள் குழப்பம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள் முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தொகுதி அமைப்பாளர் பதவிகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றமே இந்த முரண்பாட்டு நிலைமைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குருணாகல் தேர்தல் தொகுதி அமைப்பாளராக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நியமிக்கப்பட உள்ளதாகவும், ஏற்கனவே குறித்த தொகுதி அமைப்பாளராக கடமையாற்றி வரும் பிரதி அமைச்சர் ஜயந்த ஹேரத் நிகவரெட்டிய தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குருணாகல் தேர்தல் தொகுதி மட்டுமன்றி வேறும் தேர்தல் தொகுதிகள் தொடர்பிலும் இவ்வாறு நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

## மாற்று ஏற்பாடுகள் செய்யாமல் 13ஆம் திருத்தம் அகற்றப்படமாட்டாது

### அமைச்சர் நிமால் திட்டவட்டம்

(கொழும்பு)

மாற்று ஏற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படாமல் 13ஆம் அரசியல் திருத்தம் முற்றாக அகற்றப்படமாட்டாது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யவோ, அதில் மீண்டும் திருத்தங்களை மேற்கொள்ளவோ, அரசாங்கம் இதுவரை எந்த தீர்மானங்களையும் எடுக்கவில்லை எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளும், சில எதிர்க் கட்சிகளும் 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பாக வெளியிட்டுள்ள நிலைப்பாடுகள் அரசாங்கத்தின் நிலைப்பாடு அல்ல எனவும் அவர் கூறியுள்ளார். அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் ஒன்று தொடர்பாக தவறான நிலைப்பாடுகளை வெளியிடுவதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அரசாங்கம் குறித்து, தவறான தோற்றத்தை ஏற்படுத்தக் கூடும் எனவும் சிலருக்கு இப்படியான நிலைமையை ஏற்படுத்தும் தேவையிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். மாற்று செயற்பாடுகள் இன்றி, திடீரென 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை நீக்கினால், இந்தியா மற்றும் இலங்கை இடையில் இருக்கும் உறவுகள் பாதிக்கப்படுவதுடன், நாடும் நெருக்கடிக்குள் தள்ளப்படும் எனவும் அமைச்சர் சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

## தெரிவுக்குழுவில் ஆஜரானமைக்கு சிராணிக்கு அரசு பாராட்டு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் கலாநிதி சிராணி பண்டார நாயக்க மீதான குற்றப்பிரேரணை தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் ஆஜரானமையானது பாராட்டுக்குரியதாகும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதில் அவர் முகம் கொடுப்பதற்கும் தனது கருத்துக்களை முன்வைப்பதற்கும் அரசியல் அமைப்பின் பிரகாரம் சகல உரிமைகளும் அவருக்கு இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவசர செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர்களான எஸ்.பி. திசாநாயக்க, ஜோன் செனவிரட்ன மற்றும் லக்ஷ்மன் செனவிரத்தின ஆகியோர் இணைந்து மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பிரதம நீதியரசர் சிராணி பண்டார நாயக்க மீதான குற்றவியல் பிரேரணை குறித்து தெரிவுக்குழுவின் முதலாம் கட்ட விசாரணைகள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற கட்டிடத்தொகுதியில் இடம்பெற்றன.

இதனையடுத்து இந்த செய்தி யாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தொழில் நுட்பப்பயிற்சி விவசாயிகளுக்கு கிடைக்கும்

(கொழும்பு)

விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பப்பயிற்சிகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

உள்நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு வெளிநாட்டு தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தனவின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்நாட்டின் விவசாய உற்பத்திகளை நவீனத்துவத்துடன் அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் இந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.




கிளிநொச்சி மாவட்டத்திற்கான CBR நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ மாவட்ட மட்ட கிராமியத் தொண்டர்களுக்கான செயலமர்வு நேற்றுமுன்தினம் கரைச்சி பிரதேச செயலக கேட்போர கூடத்தில் நடைபெற்றது. கரைச்சி பிரதேச செயலகத்தின் வெளிக்கள அதிகாரிகள் கருத்துரைகள் வழங்குவதனையும் நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள் பிரதிநிதிகளையும் காணலாம்.

# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## கர்நாடக சங்கீதம்

ஆசிரியர் : K.மலர்விழி

**கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெளியான கர்நாடக சங்கீதம் பயிற்சி வினாக்களுக்குரிய விடைகள்.**

### பகுதி I

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| (01) | 3 | (11) | 3 | (21) | 1 | (31) | 3 |
| (02) | 2 | (12) | 4 | (22) | 3 | (32) | 2 |
| (03) | 4 | (13) | 4 | (23) | 2 | (33) | 4 |
| (04) | 1 | (14) | 1+3 | (24) | 4 | (34) | 1 |
| (05) | 3 | (15) | 3 | (25) | 3 | (35) | 4 |
| (06) | 1 | (16) | 1 | (26) | 2 | (36) | 3 |
| (07) | 4 | (17) | 3 | (27) | 3 | (37) | 4 |
| (08) | 3 | (18) | 3 | (28) | 4 | (38) | 4 |
| (09) | 2 | (19) | 4 | (29) | 1 | (39) | 2 |
| (10) | 2 | (20) | 1 | (30) | 4 | (40) | 4 |

### பகுதி II

**01)**

1) பைடால குருமூர்த்தி சாஸ்த்திரிகள்

2) ஸ்வரஜதி - சம்போமஹாதேவா
இராகம் - கமாஸ்
வர்ணம் - அன்னமே - ஆரபி இராகம்.
சௌக்ககாலக்கிருதி - கபாலி - மோகனம்
மத்திமகாலக் கீர்த்தனை - தேவதேவ
இராகம் - மாயாமாளவகௌளை

3) தகதிமி தக தகிட

4) சங்கராபரணம்

5) திருப்புகழ்

6) தியாகராஜசுவாமிகள், முத்துஸ்வாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள்

7) அலங்காரம்

8) பக்கவாத்தியங்களின் ஒத்துழைப்பு, கற்பனா ஸ்வரத்தின் அமைப்பு.


9) திசி

10) இராகமாலிகை

**02)**

1) தவில்

2)




1. கொட்டு
2. வார்
3. வலந்தலை
4. கழி
5. வெண்டயம்

3) தவில் பலாமரத்தில் உருளை வடிவமாக உட்புறத்தில் குடைந்தெடுக்கப்பட்டு, இருபுறமும் தோலால் மூடப்படும். இவை வலந்தலை (தட்டு) இடந்தலை (தொப்பி) என அழைக்கப்படுகின்றன. வலந்தலையில் 2 தோல்களும், தொப்பியில் ஒரு தோலும் கொண்டு மூடப்பட்டுள்ளது. இந்தத் தோல்கள் ஆட்டுத்தோலால் ஆனவை.

தவில் வார்கள் எருமைமாட்டுத் தோலால் செய்யப்பட்டு இறுக்கிக் கட்டப்படுகின்றன. மூங்கில் வளைகள் தவிலின் இரு புறங்களிலும் பொருத்தப்படும். ஒலி எழுப்பும் தோற்பகுதிகள் வளைகளில் இணைத்துச் சுற்றப்படும். வலதுகை விரல்களால் வாசிக்கப்படும் அகன்ற தோற்பகுதிக்கு வலந்தலை என்று பெயர். இடது கையில் குச்சியால் அடித்து வாசிக்கப்படும் பகுதிக்கு இடந்தலை என்று பெயர். இது தொப்பி எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்விரு தோற்பகுதிகளிலும் வார்கள் நுழைவதற்கு ஏற்றவாறு 11 துவாரங்கள் காணப்படுகின்றன. இத்துளைகளை 'கண்கள்' என்று கூறுவார்கள். இவற்றின் இடையே வார்க்கற்றைகள் நுழைக்கப்பட்டு வளைகளுடன் இறுக்கிக் கட்டப்படுகின்றன. தற்காலத்தில் தோல்வாருக்குப் பதிலாக உலோகவார் பயன்படுத்தப்படுகின்றது.

தவில் வாத்தியத்தை கட்டியுள்ள நாடாவை இணைக்கும் வளையத்தின் பெயர் 'வெண்டயம்' ஆகும். இது பஞ்ச லோகங்களினால் ஆனது. தவில் பெரும்பாலும் தஞ்சை நாச்சிமார் கோவிலடியில் செய்யப்பட்டு வருகிறது. தவில் கழி திருவாச்சி மரக் கொம்பினால் செய்யப்படுகின்றது. இது 12 அங்குல நீளமுடையது. தவில் வாசிப்பதில் பிரபல்யம் அடைந்தவர்கள் (தேர்ச்சி பெற்றவர்கள்)

1. அம்மாசத்திரம் கண்ணுசாமிப்பிள்ளை
2. வாங்கைமான் சண்முகசுந்தரம்

**3)** 1. இராகலட்சணம்
மத்தியமாவதி

இது ஜன்ய ராகம் தாய் ராகம் 22 ஆவது மேளமான கரஹரப்பிரியாவாகும்.

ஆ : ஸரிமபநிஸ்
அவ: ஸ்நிபமரிஸ

இவ் இராகத்தில் வரும் ஸ்வரங்களாவன: ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சுத்த மத்யமம், பஞ்சமம், கைசிகி நிஷாதம்

வர்ஜ ராகம், காந்தாரம், தைவதம், வர்ஜ சுரங்கள், ஔடவ ராகம், உபாங்க இராகம், ரிஷபம், மத்திமம், நிஷாதம் ஜீவ சுரங்களும் ரி, ம, ப நியாச சுரங்களாகும். கம்பித சுரங்கள் கமக வரிக ரக்தி ராகம், த்ரிஸ்தாயி ராகம், ஒரு புராதன ராகம், தேவாரப் பண்களில் இதற்குச் செந்துருத்தி என்று பெயர். சுத்த கர்நாடக இராகம்.

இதனுடைய கானகாலம் நடுப்பகல் ஆயினும் மிகவும் சுபகரமான ராகமானதால், இதை எப்பொழுதும் பாடலாம். எல்லாச் சுரங்களிலும் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன. ரிமரிபமநிபஸ், நிரிஸ்ரி நிஸ்பநிமப ஸரிமரிஸநிபநிஸரிஸா ஸ்நிபமரிமபநி ஸர்நி, பாமா - ரிஸ் ரீமபா போன்ற தாடு பிரயோகப்பிடிகள் மிகவும் ரஞ்சகமானவை. இசை நாடகங்களில் உபயோகப்படுத்தப்படும் இராகங்களில் ஒன்று.

ஸ்வர ஸ்வர மூர்ச்சனாகார ஜன்ய ராகம். மோகனத்தின் ரிஷப மூர்ச்சனையே இவ்விராகம் ரி, ம, ப, நி சுரங்கள் கிரகபேதம் செய்தால் முறையே இந்தோளம், சுத்தசாவேரி, உதய ரவிச்சந்திரிகா, மோகனம் ஆகிய இராகங்கள் தோன்றும்.

இந்த ராகத்தை கச்சேரி பஜனை காலசேஷபம், நாடகம் முதலிய நிகழ்ச்சிகளின் இறுதியில் பாடி முடிக்கும் வழக்கம் தொன்று தொட்டு வருகின்றது. இசை நிகழ்ச்சிகளில் பல்வேறு ராகங்களைக் கேட்பதன் மூலமாக பல்வேறு இரச உணர்ச்சிகள் நமக்கு ஏற்படுகின்றன. மத்தியமாவதி ராகத்தைக் கடைசியில் கேட்பதால் ஒருவித சாந்த நிலைமை ஏற்படுகிறது.

அத்துடன் ராகங்களை அகாலங்களில் பாடுவதால் ஏற்படும் தோஷமும் இந்த ராகத்தைக் கடைசியில் பாடுவதால் நிவாரணமாகிறது என்றும் கூறப்படுகிறது. மத்தியமாவதியின் பழைய பெயர் மத்யமாதி ஆகும். மாலைவேளை புல்லாங்குழலில் வாசிக்க மிக்க ரஞ்சகமாக இருக்கும். புராணம் பாடுவதற்கு உகந்த இராகம்.

**3-2)** இராகலட்சணம்
பந்துவராளி (காமவர்த்தனி)

51 ஆவது மேளகர்த்தா இராகம் பிரம்ம சக்கரத்தில் 3 ஆவது இராகம் (பிரம்ம - கோ)

ஆ : ஸரிகமபதநிஸ்
அ : ஸ்நிதபமகரிஸ.

இவ் இராகத்தில் வரும் சுரங்களாவன: ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தர காந்தாரம், பிரதிமத்திமம், சுத்த தைவதம், காகலிநிஷாதம்.

சம்பூர்ணராகம், ஆரோஹணத்திலும் அவரோஹணத்திலும் எல்லாச் சுரங்களும் ராகச்சாயா சுரங்கள், நியாச ஸ்வரமாக வரும். மத்திமம் சற்று தீர்க்கமாக அசைத்துப் பாடலாம். பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம். உருப்படிகள் ஸ, ப, நி சுரங்களில் ஆரம்பிக்கின்றன. பதமா, தஸ்நிதபம ஆகியவை விசேட சஞ்சாரங்கள்.

ஸர்வ, ஸ்வர, கமக, வரிக, ரக்தி, ராகம், தாரஸ்தாயி காந்தாரத்திற்கு மேலே இவ் இராகத்தின் சஞ்சாரம் காண்பது அரிது. விஸ்தாரமாக ஆலாபனைக்கு இடங்கொடுக்கும் ராகம். பிரசித்த பிரதி மத்திம ராகங்களில் இது ஒன்று. மாயாமாளவகௌளையின் நேர்பிரதி மத்திம ராகம் இதுவேயாகும். சாயாலக ராகங்களில் ஒன்று. மூர்ச்சனாகாரக ராகம். இதன் நிஷாத மூர்ச்சனையே கனகாங்கி (1)

மேளகர்த்தாவாகும். எப்பொழுதும் பாடலாம். கச்சேரியின் ஆரம்பத்தில் இவ் இராகச் சுருதிகளைப்பாடக் கச்சேரி விரைவில் களைகட்டும். பண் சாதாரி நட்டாராகம் என்பதும் இவ் இராகமே. ஹிந்துஸ்தானி இசையில் பூர்விதாட் என்று அழைக்கப்படுகிறது. கருணைச்சுவையை வெளிப் படுத்தும் ராகம். கடபயாதி ஸங்க்யைக்காக காமவர்த்தனி என்று அழைக்கப்படுகிறது.

சஞ்சாரம்
ஸரிகமபாம - பதபமா - பதநித நிநிஸாநி - தநிஸ்நிதபாம
பதநிஸ்ரிக்ரிஸா - ஸ்நிதபாம - கமபதநிதபம - கமபதம
கமகரிஸா - ஸரிகம பாமகாரி - பமகரிஸா - ஸநித நிஸரிஸா

உருப்படிகள்
1. வர்ணம் - ஸாமிநின்னே - ஆதி - ஷட்கால நரசய்யா
2. க்ருதி - ஸாரஸாக்ஷ - ஆதி - ஸ்வாதித்திருநாள்
3. க்ருதி - சம்போமஹாதே - ரூபகம் - தியாகராஜர்
3. க்ருதி - நின்னருள் இயம்பலாகுமோ - ரூபகம் - பாபநாசம்சிவன்
4. க்ருதி - சிவசிவயென - ஆதி - தியாகராஜசுவாமிகள்
5. க்ருதி - நின்னேநெர - ரூபகம் - தியாகராஜசுவாமிகள்

3 -3) இராகலட்சணம்
(ஆரபி)

இது ஜன்ய ராகம் 29 ஆவது மேளமான சங்கராபரணத்தின் ஜன்யம்
ஆ : ஸரிமபதஸ்
அ : ஸ்நிதபமகரிஸ

இவ் இராகத்தில் வரும் ஸ்வரங்களாவன : சட்ஜம், சதுஸ்ருதிரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம்.

வர்ஜராகம் ஆரோஹணத்தில் மட்டும் காந்தாரம், நிஷாதம் வர்ஜம் ஔடவ சம்பூர்ண ராகம், உபாங்க ராகம் கனராகம் பிரசித்த கனபஞ்சக ராகங்களில் இது ஒன்று. எனவே இவ்விராகத்தின் சாயல் மத்திமகாலம் அல்லது தானம் (கனம்) வாசிப்பதால் எளிதாக விளங்கும். ரிஷபம், மத்திமம், தைவதம், ராகச்சாயா ஸ்வரங்கள், ரிஷபம், பஞ்சமம் நியாச ஸ்வரங்கள், ரிஷபம், தைவதம் கம்பித ஸ்வரங்கள், நிஷாதம், காந்தாரம் இவ் இராகத்தின் அல்ப ஸ்வரங்கள் இவை தீர்க்க ஸ்வரங்களாக வரமாட்டா. நிஷாதம் இல்லாமலே சில உருப்படிகள் உள. அத்துடன் ஸ்ஸ்தபபமபமகரிரி போன்ற நிஷாத வர்ஜ பிரயோகங்களும் ரஞ்சகமானவை. காந்தாரம் ஒரு துர்பல ஸ்வரம். அதனை அமுத்தமாகவோ, தீர்க்கமாகவோ ஜண்டையாகவோ பிடிப்பது பொருந்தாது.

மா, கரிஸரீ என்பது ஒரு விசேட ரஞ்சக பிரயோகம். உருப்படிகள் ரி, ப, த ஸ்வரங்களில் ஆரம்பிக்கும். எப்பொழுதும் பாடலாம். கமக வரிக ரக்தி ராகம் மிகவும் மங்களகரமான இராகம். த்திஸ்தாயி ராகம், கச்சேரியின் ஆரம்பத்தில் பாடத் தகுதியான ராகம். இது ஒரு மூர்ச்சனாகார ஜன்ய ராகம். இதன் ரி, ம, ப ஸ்வரங்களைக் கிரக பேதம் செய்ய முறையே ஆபேரி, மோகன கல்யாணி, கேதாரகௌளை ராகங்கள் வரும். ரௌத்ர ரசம் பொருந்திய ராகம் கன இராகம். பண் பழந்தக்க ராகம் என்று குறிப்பிடப்படுவது ஆரபியையேயாகும்.

1) மத்தியமாவதி 2) பந்துவராளி 3) ஆரபி.

4) 1. முத்துத்தாண்டவர்

2. 1. பேசாதே நெஞ்சமே - சூர்யகாந்தம் - மிஸ்ரஜம்பை
2. காணாமல் வீணே காலம் கழித்தோமே - தன்யாசி - மிஸ்ரசாபு
3. தரிசனம் செய்வேனே - வசந்தா - ஆதி

3. தமிழிசை வளர்ச்சிக்கு முத்துத்தாண்டவர் பெரும் பங்காற்றி உள்ளார். தேவியின் அருள் பெற்று தேவியின் சொற்படி சிதம்பரம் சென்று இறைவனின் அருளால் பல நூற்றுக்கணக்கான பாடல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய கீர்த்தனங்கள் அறுபது. பதங்கள் இருபத்தைந்து. இவர் பதங்களையும் இயற்றியுள்ளார்.

இவரது பதங்களில் தெருவில் வாரானோ என்ற கமால் ராகப் பதம் மிகச் சிறந்ததொன்றாகும். இவரின் பாடல்கள் யாவும் கற்பவர், கேட்பவர் உள்ளங்களில் சிவபக்தியை விளைவிப்பனவாகவும், சொற்சுவை, பொருட்சுவை, இசை நுணுக்கம், எதுகைமோனை முதலிய தொடை நயங்களைக் கொண்டவையாகவும், பழைய வரலாறுகள் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்பியுள்ளனவாயும் விளங்குகின்றன. இவரது பாடல்கள் பேரின்பப் பதங்கள் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

5) எனக்கு இசைக்கச்சேரி பார்ப்பது என்றால் மிகவும் பிடிக்கும். அன்று நல்லூர் திருவிழாவின் 17 ஆவது நாள் இசை நிகழ்ச்சி பார்வையிடும் ஆவலுடன் அங்கு சென்றேன். மாலை 6.30 மணியளவில் இசை நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இசை நிகழ்ச்சியில் பாட்கர்கள் இருவர். பக்க வாத்தியங்களாக வயலின், மிருதங்கம், கடம், மோர்சிங் என்னும் இசைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

இசைக் கச்சேரி தொடங்கு முன் சில நிமிடங்கள் தம்புராவை மட்டும் மீட்டிக் கொண்டிருந்தது மிகச் சுகமான அனுபவமாகவும், இசை உலகிற்குள் எம்மை ஈடுபடுத்தி முழு மனதுடன் அவ் இசைக்கச்சேரியினை இரசிக்கும் மனப்பக்குவத்தையும் எமக்கு ஏற்படுத்தியது.

முதலில் ஹம்ஹத்வனி இராகத்திலமைந்த "வாதாமிகணபதிம்" என்னும் உருப்படி பாடப்பட்டது. மிகச் சொற்ப இராக ஆலாபனை யுடனும் கற்பனாஸ்வரம் 2 ஆம் காலத்தில் சிறிது பாடப்பட்டதும் மிக ரஞ்சகமாக இருந்தது. அடுத்து ஹிந்தோள இராகத்திலமைந்த "இராமனுக்கு மன்னன்" எனும் உருப்படி விஸ்தாரமான ஆலாபனையுடன் பாடப்பட்டு நிரவல் செய்யப்பட்டு முதலாம் இரண் டாம் காலங்களில் கற்பனா ஸ்வரமும் பாடப்பட்டது மிக நன்றாக இருந்தது. அடுத்ததாக இராகமாலிகை என்னும் உருப்படி பாடப்பட்டது. பல இராகங்களான ஒரு உருப்படி இது. அவ் வுருப்படியின் இராகங்கள் ஒவ்வொன்றும் மாறிமாறிப் பாடும்போது மிகவும் ரஞ்சகமாக இருந்தது. பின் நல்லைக்கந்தனின் மேல் பாடப்பட்ட ஒரு கீர்த்தனையும் என் மனதை மிகவும் கவர்ந்தது. இறுதியில் பரஸீ இராகத்திலமைந்த தில்லானாவும், பஜனும் பாடி அவ் இசை நிகழ்ச்சி முடிவு பெற்றது.

மிக இனிமையாக இருந்த இவ் இசை நிகழ்ச்சிக்கு அணிசேர் கலைஞர்களாக இருந்த அனைவரும் மிக நன்றாக வாத்தியங்களை வாசித்திருந்தார்கள். தனி ஆவர்த்தனக் கச்சேரிக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் தாள வாத்தியங்களின் வாசிப்பு மிகப் பிரமாதமாக இருந்தது. ஒலி, ஒளி அமைப்பு மிகப் பிரமாதமாக இருந்தது.

இராகமாலிகை என்னும் உருப்படி நான் விரும்பி ரசித்த உருப்படியாகும். பல வர்ண பூக்களால் அமைந்த மாலை அழகாக இருப்பதுபோல, பல இராகங்களால் அமைந்த அவ் உருப்படியும் மிக அழகாக இருந்தது. பாலயாமி என்னும் இராகமாலிகையின் ஒவ்வொரு இராக முடிவிலும் ஸ்வரங்களின் கோர்வைகள் மிக அழகாகத் துல்லியமாகப் பாடப்பட்டது.

இவ்வினாக் கச்சேரியில் எல்லா உருப்படிகளும் மிக அழகாகப் பாடப்பட்டு பக்கவாத்தியங்களும் அதற்கு ஏதுவான முறையில் வாசிக்கப்பட்டு மிக அழகான இசைக் கச்சேரியாக இருந்தது சிறப்பான அம்சமாகும்.

6) 25 - மாரரஞ்ஜனி
26 - சாருகேசி
27 - ஸரஸாங்கி
28 - ஹரிகாம்போஜி
29 - தீரசங்கராபரணம்
30 - நாகானந்தினி

மாரரஞ்ஜனி : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், சுத்த நிஷாதம்.

சாருகேசி : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், கைசிகி நிஷாதம்.

ஸரஸாங்கி : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.

ஹரிகாம்போஜி : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், கைசிகி நிஷாதம்.

தீரசங்கராபரணம் : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம்.

நாகானந்தினி : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், ஷட்சுருதி தைவதம், காகலி நிஷாதம்.

7) 1. வர்ணம்
தானவர்ணம், பதவர்ணம்

அப்பியாசகான உருப்படி வகைகளுள் வர்ணம் மிக முக்கியமான தாகும். வர்ணங்களை அப்பியாசம் செய்வதன் மூலம் உருப்படிகளை அழகுபடுத்தி, மெருகுடனும், கமகத்துடனும் பாடவும், வாசிக்கவும் முடியும். வர்ணத்தில் வார்த்தைகள் குறைவாகவே காணப்படும். இதன் சாகித்தியமானது பக்தி விஷயமாகவோ, சிருங்கார விஷயமாகவோ, சங்கீத வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ இருக்கும்.

வர்ணமானது பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம், சரண ஸ்வரங்கள் என்னும் அங்கங்களைக் கொண்டுள்ளது. இவற்றுள் பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் என்னும் அங்கங்களை பூர்வாங்கத்துள்ளும், சரணம் சரண ஸ்வரங்கள் என்னும் அங்கங்கள் உத்தராங்கத்தினுள்ளும் அடங்கும். சரணத்தை உபபல்லவி என்றும், எத்துக்கடைப் பல்லவி என்றும், சிட்டைப் பல்லவி என்றும் அழைப்ப துண்டு. சரண ஸ்வரங்களுக்கு எத்துக்கடை ஸ்வரங்கள் என்றும், சிட்டை ஸ்வரங்கள் என்றும் வேறு பெயர்களுண்டு.

(தொடரும் ....)

மிருதி வினாக்களுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை (01.12.2012) அன்று வெளியாகும்.

# லோக்பால் மசோதா எதிர்ப்பு வலுக்கிறது

(புதுடில்லி)

ஊழலை ஒழிக்க வகை செய்யும், "லோக் பால்" மசோதா குறித்த, தன் பரிந்துரைகளை, ராஜ்யசபா தேர்வுக் குழு, நேற்று முன்தினம் ராஜ்யசபாவில் தாக்கல் செய்தது. சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே பேராட்டம் நடத்தியதை அடுத்து, ஊழலை ஒழிக்க வகை செய்யும், லோக் பால் மசோதாவை, நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கு, மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. இந்த மசோதா, லோக்சபாவில், கடந்தாண்டு நிறைவேற்றப்பட்டது.

கட்சிகள்' எதிர்ப்பு:ராஜ்யசபாவில் .தாக்கல் செய்யப்பட்டபோது, மசோதாவில் இடம் பெற்றுள்ள, குறிப்பிட்ட சில விதிமுறைகளுக்கு, எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. குறிப்பாக, மாநிலங்களில், ஊழலுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும், லோக் ஆயுக்தா என்ற அமைப்பை ஏற்படுத்துவது, கட்டாயம் என, கூறப்பட்டிருந்த விதிமுறைக்கு, பெரும்பாலான எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

நாட்டின் கூட்டாட்சி கொள்கையை சீர்குலைக்கும் வகையில், இந்த விதிமுறை உள்ளது என, எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பின. சி.பி.ஐ.,யை, லோக் பால் வரம்பிற்குள் கொண்டு வர வேண்டும் என்று, பிரதான எதிர்க்கட்சியான, பா.ஜ., வலியுறுத்தியது. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால், ராஜ்யசபாவில், லோக் பால் மசோதாவை நிறைவேற்ற முடியவில்லை. இதையடுத்து, இந்த மசோதா, ராஜ்யசபா தேர்வுக்குழுவின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

லோக் பால் மசோதாவில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக, சில பரிந்துரைகளை குறிப்பிட்டு, தேர்வுக்குழு சார்பில், வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டது. இந்த அறிக்கையை, தேர்வுக் குழு உறுப்பினரும், காங். எம்.பி.யுமான சாந்தா ராம் நாயக், ராஜ்யசபாவில் நேற்று முன்தினம் தாக்கல் செய்தார். அப்போது, பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள், அரசுப் பணிகளில், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு, ஒதுக்கீடு அளிக்கும் விவகாரத்தை எழுப்பி, கடும் அமளியில் ஈடுபட்டனர்.ஆனாலும், இந்த கடும் அமளியையும் பொருட்படுத்தாது, லோக் பால் வரைவு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

# பாரதிய ஜனதா கட்சியின் சாயம் வெளுத்துவிட்டது




(புதுடில்லி)

"2ஜி" முறைகேடு குறித்து, சி.ஏ.ஜி.,யின் ஆய்வில், முரளி மனோகர் ஜோஷி குறுக்கிட்டதாக, புகார் எழுந்துள்ளது. இது குறித்து நாடாளுமன்றத்துக்கு வெளியே பேட்டியளித்த காங்கிரஸ் தலைவர் சோனியா கூறுகையில்,"2ஜி விவகாரத்தை கிளப்பி, ஆதாயம் பார்த்த பாரதிய ஜனதாவின் சாயம் வெளுத்துவிட்டது. இது குறித்து, பா.ஜ., தலைவர்கள் விளக்க வேண்டும்," என்றார்.

இதற்கு பதிலளித்த, பா.ஜ. செய்தி தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறுகையில், ஓய்வு பெற்ற பிறகு சிங் புகார் தெரிவித்துள்ளார் காங்கிரஸின் கைப்பாவை ஆகிவிட்டார். சி.ஏ.ஜி., யை வலுவிழக்கச் செய்ய மத்திய அரசு முயல்கிறது. பொது கணக்கு குழு முன் ஆஜராகி சாட்சியம் அளித்த போது ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டு, இப்போது புகார் தெரிவிப்பது மர்மாக உள்ளது்இதை ஏற்க முடியாது, என்றார்.

மத்திய சட்ட அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறுகையில், 2ஜியில் குறிப்பிடப்பட்ட இழப்பு குறித்து சந்தேகம் எழுந்தது. உண்மை நிலை என்ன என்பது இப்போது வெளியாகிவிட்டது. இதை மக்கள் அறிந்து கொள்வர், என்றார்.

பா.ஜ. செயலரும் எம்.பி.யுமான பல்பீர் புஞ்ச் கூறுகையில், சிங்கின் புகார் அர்த்தமற்றது. இந்த விவகாரத்தில் இரண்டு உண்மை வெளிப்பட்டுள்ளது. அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருப்பதும், ஊழல் நடந்து இருப்பதும் உண்மை. இழப்பு இல்லை என்றால், 122 உரிமங்கள் ரத்து செய்யப்பட்டு இருக்காது ராஜாவும் சிறைக்கு போயிருக்க மாட்டார், என்றார்.







# சூப்பர்ஷானிக் ஏவுகணை சோதனை வெற்றி



(புதுடில்லி)

எதிரிகளின் ஏவுகணைகளை, இடைமறித்து தாக்கும் சக்தி பெற்ற, இந்தியாவின் சூப்பர்சானிக் ஏவுகணை சோதனை, நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

நீண்ட தூரம் சென்று எதிரிகளின் இலக்குகளை தாக்கி அழிக்கும், ஏவுகணை தயாரிப்பில் இந்தியா தொடர்ந்து தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இந்த வரிசையில், நேற்று மேலும் ஒரு சாதனை படைக்கப்பட்டது.எதிரிகளின் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும், வல்லமை படைத்த சூப்பர்சானிக் ஏவுகணை சோதனை, நேற்று, ஒடிசா மாநி லம் பலசோர் கடற்கரை பகுதியில் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் மதியம், 12:52 மணிக்கு, சண்டிபூர் கடற்பகுதியில் இருந்து ஒரு ஏவுகணை ஏவப்பட்டது. பின்னர் நான்கு நிமிடம் கழித்து, வீலர் தீவிலிருந்து இடைமறித்து தாக்கும் வல்லமை படைத்த சூப்பர்சானிக் ஏவுகணை ஏவப்பட்டது.பின் கண்காணிப்பு ரேடார்கள் தரும் சிக்னல்கள் உதவியுடன், சண்டிபூர் பகுதியிலிருந்து சோதனை ஏவுகணையை, சூப்பர்சானிக் ஏவுகணை இடைமறித்து நடுவானில் தாக்கி அழித்தது. சண்டிப்பூர், பலசோரிலிருந்து, 15 கி.மீ., தொலைவிலும், வீலர் தீவு சண்டிப்பூரிலிருந்து, 70 கி.மீ., தொலைவிலும் உள்ளது.இந்த ஏவுகணை எட்டாவது முறையாக சோதித்து பார்க்கப்பட்டுள்ளது.

# போராட்டம் தொடரும் மம்தா பானர்ஜி அறிவிப்பு



(கொல்கத்தா)

தற்காலிக தோல்வியை எல்லாம் பொருட்படுத்தாமல், எங்களது கொள்கைப் போராட்டம் தொடரும், என, திரிணமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி கூறியள்ளார். மத்திய அரசுக்கு எதிராக, மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமுல் காங்கிரஸ் கட்சி, நாடாளுமன்றில் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் நிராகரிக்கப்பட்டது. இதை, அரசியல் கட்சிகள் விமர்சித்து இருந்தன.

இந்நிலையில், கொல்கத்தாவில் கல்லூரி விழாவில், மம்தா பானர்ஜி பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், அப்போது அவர் கூறியதாவதுகொள்கைக்காக போராடும் போது, தோல்வியை சந்திக்க வேண்டியிருக்கும் அதை பொருட்படுத்தாமல், கொள்கையில் உறுதியாக இருந்தால், இறுதியில் வெற்றி கிடைக்கும். நானும் தோல்வியை சந்தித்துள்ளேன். ஆனால், என் கொள்கையில் உறுதியாக இருக்கிறேன். விமர்சனங்கள் எங்கிருந்து வந்தாலும்,அதை நான் சந்திப்பேன். நான் மக்களின் நலனுக்காக பணியாற்றுகிறேன். அதனால், விமர்சனங்களைப் பற்றி கவலைப்படவில்லை.என்றார்.

இடதுசாரி முன்னணி தலைவர் பிமன் போஸ் கூறியதாவது: திரிணமுல் காங்கிரஸ், நாடாளுமன்றின் கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்ததன் மூலம், மம்தா பானர்ஜியின் அரசியல் முதிர்ச்சியின்மை வெளிப்பட்டுள்ளது. 19 எம்.பி.க்களை மட்டும் வைத்துக் கொண்டு இது நடக்காது என்று தெரிந்தும், தோல்வியை சந்தித்துள்ளனர்.

இந்த தீர்மானத்தை கொண்டு வர, மற்ற கட்சிகள் முன்வரவில்லை.

போதுமான உறுப்பினர்கள் எண்ணிக்கையை பெற்ற பின், தீர்மானத்தை கொண்டு வந்து இருக்க வேண்டும். நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவேன் என, மக்கள் மத்தியில் அறிவித்துவிட்டார். அந்த நிலைப்பாட்டை காப்பாற்றுவதற்காக, அனுமதிக்கப்படாது என தெரிந்தும் முயன்று தோல்வி அடைந்துள்ளார்.இது போன்ற நடவடிக்கையை எங்கள் கட்சி மேற்கொள்ளாது. நாங்களும், மற்ற கட்சிகளும் அன்னிய நேரடி முதலீடு குறித்து, 184 விதியின் கீழ் விவாதிக்க வேண்டும் என, வலியுறுத்தி வருகிறோம். இதில், எதிர்ப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இவ்வாறு பிமன் போஸ் கூறினார்.

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : யோ. சினோஜா
முகவரி: அம்பாள் குளம், கிளிநொச்சி.

அகவை 8 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



பெயர் : பு. புவியரசி
முகவரி: இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

அகவை 9 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# எகிப்து ஜனாதிபதிக்கு எல்லையில்லா அதிகாரம்

எகிப்து ஜனாதிபதிக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கும் அரசியல் சாசன அறிவிப்பை அந்நாட்டு ஜனாதிபதி முகமது முர்சி வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேல்- பலஸ்தீனம் இடையே ஏற்பட்ட சண்டையில் சமாதான முயற்சி மேற்கொண்டு, போர் ஏற்படாமல் தடுத்த காரணத்திற்காக சர்வதேச தலைவரகளின் பாராட்டுகளைப் பெற்றவர் எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி.

இதற்கு அடுத்த நாளிலேயே ஜனாதிபதிக்கு எகிப்து இராணுவம், அரசியல், நீதித்துறையில் வரம்பற்ற அதிகாரத்தை அளிக்கும் வகையிலான அரசியல் சாசன அறிவிப்பை வெளியிட்டார்.

அதாவது நாட்டின் நலனைக் காக்க ஜனாதிபதி எந்த முடிவை வேண்டுமானாலும் எடுக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கி வரும் சட்ட நிர்ணய சபையை எந்த நீதிமன்றத்தாலும் கலைக்க முடியாது என்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது.

இவை தவிர எகிப்தில் இதற்கு முன்பு ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சியை அகற்றும் போராட்டத்தின் போது, காயமடைந்து ஊனமடைந்தவர்களுக்கு அதிக ஓய்வூதியம் உள்ளிட்ட அறிவிப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

இதற்கு அந்நாட்டு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. தன்னை புதிய பாரோன (பண்டைய எகிப்து சாம்ராஜ்ய மன்னர்களின் பொதுவான பெயர்) மன்னராக நிலை நிறுத்திக் கொள்ள முர்சி முயற்சிக்கிறார் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.


மேலும் எதிர்க்கட்சிகள் நாடு தழுவிய அளவிலான போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.



முர்ஷியின் இந்த நடவடிக்கைக்கு எதிர்க்கட்சித் தலைவரும், அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான முகமது எல்பராதே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.


அவர் கூறுகையில், ஜனாதிபதி பதவியில் இருப்பவர் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது ஏற்றுக் கொள்ள முடியாதது. எகிப்தில் மீண்டும் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்



எகிப்து நாட்டில் அதிபர் முகம்மது மோர்சியின் ஆதரவாளர்களுக்கும் மற்றும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. தலைநகர் கெய்ரோவில் உள்ள தஹ்ரீர் சதுக்கத்தில் இவர்கள் மோதிக் கொண்டனர்.

# காற்று மண்டலம் இல்லாத குள்ளமான கிரகம்



காற்று மண்டலம் இல்லாத குள்ளமான கிரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சூரிய குடும்பத்தில் புதிய குள்ளமான கிரகம் இருப்பதை தற்போது விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். புளூட்டோ கிரகத்தை விட மூன்றில் 2 பங்கு அளவே உள்ள இக்கிரகத்துக்கு "மேக்மேக்" என பெயரிட்டுள்ளனர்.

சூரியனை சுற்றி வரும் இக்கிரகம் புளூட்டோவுக்கு மிக தொலைவிலும், சூரியனுக்கு அருகிலும் உள்ளது. ஆனால் இங்கு காற்று மண்டலம் இல்லை என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலையை வெறுக்கும் ஜேர்மன் சிறுவர்கள்



ஜேர்மனியில் பள்ளிக்குழந்தைகள் அதிகளவு மன அழுத்தத்திற்கு ஆளாவதாக தற்போதைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

ஜேர்மனியின் சிறுவர் பாதுகாப்பு கழகமும், PROSOZ என்ற சமூக ஆய்வு மையமும் இணைந்து 11 மாகாணங்களைச் சேர்ந்த 4700 ஆரம்ப பாடசாலை மாணவர்களிடம் அவர்களின் மனநலம் குறித்து ஆய்வு நடத்தியது.

இந்த ஆய்வில் 7 முதல் 9 வயதிலான மாணவர்களுக்கு அதிக வீட்டுப்பாடம், அதிக தேர்வுகள், பெற்றோரின் கட்டுப்பாடு போன்றவற்றால் அடிக்கடி மனஅழுத்தம் ஏற்படுவது தெரியவந்துள்ளது.

மேலும் மூன்றில் ஒரு பங்கினர் பாடசாலையாலும் ஆறில் ஒரு பங்கினர் குடும்பத்தாலும் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர் என்பதும், பெரும்பாலான குழந்தைகளுக்கு பள்ளி மகிழ்ச்சியான இடமாக இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

குறிப்பாக சிறுவர்கள் தொலைக்காட்சி மற்றும் கணனிக்கு அதிகளவு முக்கியத்துவம் தரவில்லை என்பது வியப்பை அளித்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஒசாமாவின் சடலத்தை கடலில் போட்டது எப்படி?



ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பிறகு, அவரது சடலத்தை அமெரிக்கா எப்படி கடலில் போட்டது என்பது குறித்து அதிர்ச்சிக்கரமான தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த ஒசாமா பின்லேடனை கடந்தாண்டு மே மாதம் அமெரிக்க படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஆனால் பின்லேடனின் சடலத்தை உலகிற்கு காட்டாத அமெரிக்கா, கடலில் புதைத்து விட்டதாகத் தெரிவித்தது.

பின்லேடனின் புகைப் படங்களைக் கூட வெளியிடவில்லை. இந்நிலையில் இரகசிய மின்னஞ்சல்கள் மூலம் ஒசாமாவின் சடலம் எவ்வாறு புதைக்கப்பட்டது என்பது குறித்து அதிர்சசியான தகவல் வெளியாகி உள்ளது.

அதாவது பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதும், அவரது உடலை கைப்பற்றிய கடற்படை வீரர்கள் உடலை முழுவதுமாக தண்ணீர் ஊற்றிக் கழுவித் துடைத்துள்ளனர்.

பின்னர் அதை ஒரு, வெள்ளை ஹட்டில் வைத்து கட்டியுள்ளனர். அதன் பின்னர் பெரிய பேக்கில் உடலைப் போட்டு பார்சலாக்கியுள்ளனர் என்று அந்த மின்னஞ்சலில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் மற்றொரு மின்னஞ்சலில், பின்லேடனின் உடல் அடக்கம் குறித்த விவரம் சிலருக்கு மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் உள்ளது.

அதில் இஸ்லாமிய முறைப்படி பின்லேடன் உடல் அடக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கூறுகையில், உடலை பேக்கிங் செய்த பின்னர் ஒரு இராணுவ அதிகாரி இஸ்லாமிய மத வாசகங்களை ஆங்கிலத்தில் படித்தார்.

அதை ஒரு உள்ளூர்க்காரர் உதவியுடன் அரபியில் மொழி பெயர்த்துச் சொல்லப்பட்டது. அதன் பின்னர் தயாராக வைக்கப்பட்டிருந்த சவப் பெட்டியில் உடலை வைத்து ஆணி அடித்து அதை கடலுக்குக் கொண்டு செனறு அங்கு கடலில் அந்த சவப்பெட்டி போடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மின்னஞ்சல் அமெரிக்க பாதுகாப்புப்படை கூட்டுத் தலைமை அதிகாரி மைக் முல்லன், அமெரிக்க மத்திய கூட்டுப் பாதுகாப் புப்படை அதிகாரி ஜேம்ஸ் மேட்டிஸ் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பின்லேடன் உடலை பார்சல் செய்யும் பணியிலும், பின்னர் கடலுக்குக் கொண்டு செல்லும் பணியிலும் பெட்எக்ஸ் பார்சல் நிறுவனத்தை பயன்படுத்தியுள்ளனர். உடலைப் பார்சல் செய்த பின்னர் சாலை மார்க்கமாக லாரியில் வைத்து அமெரிக்க முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்

# இணையத்தில் பாலியல் வீடியோ சீன உயர் அதிகாரி பதவி நீக்கம்

சீனாவில் இணையத்தில் வெளியான செக்ஸ் வீடியோ தொடர்பான சர்ச்சையில் உயர் அதிகாரியின் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் மிகவும் பிரபல்யமான மிக்ரோபிளாக் என்ற இணையத்தில் சமீபத்தில் செக்ஸ வீடியோ காட்சிகள் வெளியானது.

இதில் இடம்பெற்ற காட்சியில், தென்மேற்கே உள்ள ஷோங்குயிங் நகரை சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட உயர் அதிகாரியான லீயி ஷிங்பு என்பவர் இளம் பெண்ணுடன் இருந்த போது எடுத்த படம் எனக்கூறப்பட்டது. இந்த வீடியோ காட்சி சீன மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஆனால் இதை மறுத்த லீயி நிருபர்களிடம் கூறுகையில், இந்த வீடியோ கடந்த 2007ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. இது போலியானது என்று விளக்கம் அளித்தார்.



இதனையடுத்து கம்யூனிஸ்டு கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை குழுவினர் விசாரணை நடத்தினார்கள்.

அதில் லீயி சம்பந்தப்பட்ட வீடியோ காட்சிகள் உண்மையானது தான் எனத் தெரியவந்ததையடுத்து, லீயி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

சமீபகாலமாக அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டில் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஒபாமா உரை ஹிலாரி குட்டித் தூக்கம்



மியான்மரில் வரலாற்று சிறப்பு மிக்க உரையை ஒபாமா நிகழ்த்தி கொண்டிருந்த நேரத்தில், ஹிலாரி கிளிண்டன் குட்டித் தூக்கம் போட்டுள்ளார்.

மியான்மர் நாட்டிற்கு சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, யாங்கூன் பல்கலைகழகத்தில் வரலாற்று சிறப்பு மிக்க உரையை ஆற்றிக் கொண்டிருந்தார்.

ஒபாமாவின் உரையை சுமார் 1500 பேர் கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அமெரிக்க வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் தூங்கி கொண்டிருந்தார்.நீண்ட நேரம் பயணம் மேற்கொண்டதால் அசதியில் கிளிண்டன் தூங்கியதாகத் தெரிகிறது.

# கைத் தொலைபேசிக்கு தடை

(கராச்சி)

பாகிஸ்தானில் நடந்து வரும் பயங்கரவாத தாக்குதலை அடுத்து மொகரம் பண்டிகை முன்னெச்சரிக்கையாக கைத்தொலைபேசிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை மதியம் முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மொபைல் சேவை மீதான தடை அமுலில் இருக்கும். மொத்தம் 50 நகரங்களில் இந்தத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# வேலணையில் இளைஞன் கடத்தல் ஈ.பி.டி.பி. வன்மையாக கண்டனம்

வேலணைப் பகுதியில் கடந்த 21 ஆம் திகதி அதிகாலை 2.00 மணியளவில் சதாசிவம் யோகேஸ்வரன் என்பவர் கடத்தப்பட்டுள்ளார். இச்சம்பவத்துக்கு ஈ.பி.டி.பி வன்மையான கண்டனத்தைத் தெரிவிப்பதாக ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச அமைப்பாளரும் வேலணை பிரதேச சபை தவிசாளருமான சி.சிவராசா (போல்) தெரிவித்துள்ளார்.

கண்டன அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 30 ஆண்டு கால யுத்தத்தின் பின் எமது மக்கள் ஒரு சுதந்திரமான வாழ்வையும், அதிவேகம் கொண்ட அபிவிருத்தியையும் கண்டு வரும் இவ்வேளையில் இவ்வாறான செயற்பாடுகள் நிச்சயமாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

மேற்போன்ற செயற்பாடுகள் எம் மக்களின் நிம்மதியான வாழ்வுக்கும் சுதந்திரமான நடமாட்டத்துக்கும் குந்தகம் விளைவிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

மாறாக சுயநல அரசியலுக்காக தேவையற்ற விதத்தில் இக்காணாமல் போன சம்பவத்துடன் எமது கட்சியையும் எமது கட்சி உறுப்பினரையும் தொடர்புபடுத்துவதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

எமது மக்கள் அபிவிருத்தியின் உச்சநிலையை அடைய வேண்டும் என்ற நோக்கோடு அரசுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். ஆனால் தங்களதும் தாம் சார்ந்தவர்களினதும் சுயநலத்துக்காக அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்றி அதில் உல்லாச வாழ்க்கையை அனுபவிப்பவர்கள் நாங்கள் அல்ல என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணியினர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து மேற்படி இளைஞன் காணாமல் போனமை விடயத்தில் எமது கட்சிதான் அவரைக் கடத்தியது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரால் அறிக்கைகள் விடுவது, ஆரவாரப்படுவதால் எவ்வித பிரயோசனமும் கிடையாது. ஏனெனில் எமது தீவக மக்கள் நாங்கள் யார்? நீங்கள் யார்? என்பதை நன்றாக அறிந்து கொண்டுள்ளார்கள்.

கட்சி விட்டு கட்சி தாவி, சொந்த வாழ்க்கையிலும் சரி; அரசியல் வாழ்க்கையிலும் சரி ஒரு இலட்சியம் இல்லாமல் பயணிக்கும் கூட்டமைப்பின் இளைஞர் அணித தலைவர் எஸ்.நிஷாந்தன் என்று சொல்லப்படுபவர், உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா அல்லது சுரேஷ் பிரேமச்சந்திரன் பா.உ கூட்டா இதனை முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணித்தலைவர் தெளிவுபடுத்த வேண்டும். ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும.

அதாவது, தீவகப் பகுதியில் ஜனநாயகம் இல்லை என்று தெரிவித்திருக்கும் இவரின் கருத்திலிருந்தே இவரின் உண்மைத் தன்மையில்லாத அரசியலை மக்கள் அறிந்து கொள்வார்கள்.

அதாவது கடந்த வருடம் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வேலணை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகப் போட்டியிட்டு மூன்று பேர் சபை உறுப்பினர்களாகியுள்ளனர். இவரின் கருத்தின்படி தீவகப் பகுதியில் ஜனநாயகம் இல்லை என்றால் தேர்தலில் பிரசாரம் செய்து, மக்களின் வீடுகளுக்கு நேரில் சென்று துண்டுப் பிரசுரங்கள் கொடுத்து இந்த மூன்று பேரும் தேர்தலில் வெற்றியீட்டியிருக்க முடியுமா?

அத்துடன் மேற்படி யோகேஸ்வரன் என்பவர் காணாமல் போனமை தொடர்பில் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதுடன், பொலிஸாரும் அவரைக் கண்டுபிடிப்பதற்கான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் உண்மையிலேயே கடத்தலா? அல்லது நாடகமா என்பது பொலிஸ் விசாரணைகளின் மூலம் வெளிப்படுத்தப்படும்.

அதனை விடுத்து பொலிஸாரின் விசாரணை அறிக்கை வருவதற்கு முன்னர் தெரு நாய்கள் போல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிதான் இவரைக் கடத்தியுள்ளது என்று குரைப்பது எந்த வகையில் நியாயமாகும்.

அத்துடன் எமது கட்சிக்கென்று ஒரு நிரந்தரமான கொள்கையை வைத்திருக்குமாறு தெரிவித்திருக்கும் நிஷாந்தன், தனக்கு ஒரு நிரந்தரமான கட்சியை வைத்திருக்குமாறு தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காப்புறுதி கம்பனியின் அசிரத்தை வீதிப் போக்குவரத்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோயில் வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தையடுத்து காப்புறுதி கம்பனியாளர்கள் ஸ்தலத்திற்கு தாமதமாக வந்தமையால் சில மணிநேரம் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

நேற்று மாலை 5.30 மணியளவில் கோயில் வீதியில் உள்ள வீடொன்றிலிருந்து புறப்பட்ட கார் முன்னே சென்ற ஒரு பிக்கப் வாகனத்துடன் மோதுண்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்படாத நிலையில் சில மணி நேரம் வீதியின் குறுக்கே இரு வாகனங்களும் காணப்பட்டதால் வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

காப்புறுதி கம்பனியினர் அவ்விடத்திற்கு வந்து புகைப்படம் எடுத்த பின்னரே வாகனப் போக்குவரத்துக்கு வீதி பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. இவ்வீதி விபத்தினால் இவ்வீதியூடாக செல்லமுடியாது என்று கைலாச பிள்ளையார் கோயிலடியில் உள்ள இராணுவத்தினர் பலருக்கும் தெரிவித்தை காணக்கூடியதாக இருந்தது.

இரவு 7.15 மணியளவிலேயே வாகனங்கள் வீதியில் சென்றன. கணிப்பீட்டளவில் பாரிய விபத்தாக இது தென்படாத நிலையிலும் பொது மக்களுக்கு இவ் விபத்து பெரும் சிரமத்தைக் கொடுத்தது. (இ)

# மருதனார்மடத்தில் விபத்து எட்டுப் பேர் காயம்

மருதனார்மடம் தொட்டியாலடிப் பகுதியில்நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் எண்மர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாவிட்டபுரம் நோக்கிச் சென்ற தனியார் சிற்றூர்தி ஒன்றும் சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த கன்ரர் வாகனமும் மருதனார்மடம் தொட்டியாலடி பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. சம்பவத்தில் இரு சாரதிகளும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் சேதமடைந்த கன்ரர் வாகனம் கனரக பக்கோ இயந்திரத்தின் உதவியுடனேயே அப்புறப்படுத்தப்பட்டது. வாகனங்கள் பாரியளவில் சேதமடைந்திருந்தாலும் தெய்வாதீனமாக உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

மேலும் பஸ்ஸில் பயணித்த 6 பேர் சிறு காயங்களுக்குள்ளாகி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

# 1303 பில்லியன் ரூபா கடனை அடுத்த வருடம் பெறத் திட்டம்

அரசாங்கம் அடுத்த ஆண்டில் 1303 பில்லியன் ரூபா கடனைப் பெற்றுக்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை நிதி அமைச்சு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடன் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சர்வதேச கடன் நிறுவனங்களுடன் கடன் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் மற்றும் வட்டித தொகைகளை செலுத்தவும், வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை ஈடு செய்யவும் அரசாங்கம் இவ்வாறு கடன் பெற்றுக்கொள்ளவுள்ளது.

## பிராந்திய...

வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கை தொடர்பான நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியா எப்போதும் தனது பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றது. ஐ.நா.வின் அமைதி காக்கும் படைக்காகவும் அல்லது ஒரு நாட்டின் அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரிலேயே அன்றி வேறெந்த நடவடிக்கைகளுக்காகவும் இந்தியா தனது இராணுவத்தை பயன்படுத்தவில்லை.

அதேபோன்று அதிகாரம் பெறும் நோக்கிலோ அல்லது பிராந்திய வல்லரசாகும் கொள்கையிலோ இந்தியா செயற்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

## யுத்தநிறுத்த...

இராணுவம் மெதுவாக அதுவும் நிச்சயமாக முன்னேறிக் கொண்டிருந்தது. விடுதலைப் புலிகள் பின்வாங்கிக் கொண்டிருந்தனர்.

யுத்தம் ஏ - 9 வீதியில் யாழ்ப்பாணம் - கண்டி வீதிக்கு மேற்காக நகர்ந்தது. அத்தருணத்தில் கௌரவமான யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் இருந்தன. அதனை புலிகளின் தலைமையினாலும் வெளிநாட்டு அமைப்புகளினாலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி பொதுமக்களையும் தலைமையையும் காப்பாற்ற வேண்டும் என்று கருதினேன். அதற்காக பல நாடுகளின் முக்கியஸ்தர்கள், பிரதிநிதிகள் ஐ.நா.வின் உயர் அதிகாரிகளுடன் போராடிப் பார்த்தேன்.

சர்வதேச அனுசரணையுடன் ஐ.நா. பிரதிநிதிகளிடம் ஆயுதங்களை ஒப்படைப்பது என்ற திட்டத்தை உருவாக்கினேன். புலித் தலைவர்களின் குடும்பத்தினருக்கு அடைக்கலம் கொடுக்க மூன்று நாடுகளுடன் பேசியிருந்தேன். இந்தத் திட்டத்தை நோர்வே உள்ளிட்ட நாடுகளுக்கு தெரிவித்தேன்.

இந்தத் திட்டம் பற்றி குறிப்பிட்டு 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரபாகரனுக்கு கடிதம் அனுப்பினேன். புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அனுப்பி வைத்தேன். பிரபாகரனோ இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார் அதனையடுத்து நானும் இந்தத் திட்டத்தை கைவிட்டுவிட்டேன் என்றார்.

## அரசை...

இவ்வாறான யோசனை சமர்ப்பிக்கப்படவுள்ளது. டிசம்பர் 2 ஆம் திகதி இந்த யோசனை சபையில் சமர்பிக்கப்படவுள்ளது.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யக் கூடாது என்ற இந்த யோசனையை நிறைவேற்ற அனைத்து மாகாண சபைகளின் முதலமைச்சர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளனர்.

## தேசிய...

குண்டெறிதல் போட்டியில் விமலேந்திரா 15.13 மீற்றர் தூரம் எறிந்து இந்த சாதனையை முறியடித்தார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு சாந்தன சமரவீர என்பவர் 13.97 மீற்றர் தூரம் எறிந்ததே இதுநாள் வரை தேசியரீதியான சாதனையாக இருந்தது. அதனையே விமலேந்திரா நேற்றைய தினம் முறியடித்தார்.

இவர் இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவில் குண்டெறிதல் போட்டியில் பங்குபற்றி தங்கம் வென்றதுடன், 15 ஆவது கனிஷ்ட விளையாட்டு விழாவிலும் பங்குபற்றியவர்.

அத்துடன் 20 வயது தட்டெறிதல் போட்டியிலும் 34.83 மீற்றர் தூரம் எறிந்து இரண்டாமிடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் பயிற்றுநர் விஜிதரன் இவருக்கான பயிற்றுநராக உள்ளார்.

## அவதூறை...

குணசேகரவினால் நேற்று முன்தினம் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.

கடந்த யூலை 11ஆம் திகதி மேற்படி இரு நாளேடுகளிலும் வெளியிடப்பட்ட செய்தி தமக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளதாகவும், அதற்கு இழப்பீடாக தலா 100 மல்லியன் ரூபாவை வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் கூறினார்.

இந்த வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 21 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய மேலும் கூறினார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இராணுவத்தின் சட்டப் பிரிவுப் பணிப்பாளர் பிரிகேடியர் ரஞ்சித் ராஜபத்திரன, இராணுவம் சட்டத்துக்கு மேலாகவும் இல்லை, அதேவேளை கீழாகவும் இல்லை. இராணுவத்தின் நற்பெயரைப் பாதுகாக்க நாம் போராடுவாம் என்று கூறியுள்ளார்.

## கடற்றொழிலாளர்...

கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சுத் தொடர்பான வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

எமது பிரதேசங்களில் இப்பொழுது தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும் பாஸ் நடைமுறை அம்மக்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினையாக இருக்கிறது. யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்கள் முடிவடைந்துள்ள நிலையில் தொடர்ந்தும் கடற்படையினரால் பாஸ் நடைமுறை பின்பற்றப்படுவது அங்குள்ள கடற்றொழிலாளர்களுக்கு மிகப்பெரிய அசௌகரியத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

குறிப்பாக மன்னாரிலிருந்து முல்லைத்தீவு வரையிலுள்ள பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் பாஸ் நடைமுறை இருந்து வருகின்றது. இதுஏற்றுக்கொள்ள முடியாத ஒருவிடயம். இது கடற்றொழிலாளர்களின் உரிமையை மறுக்கின்ற செயற்பாடாகும். எனவே அவர்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தும் போக்கு தவிர்க்கப்படவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் குறிப்பாக நயினாதீவு, கிளாலி, சுழிபுரம், திருவடிநிலை, மாதகல் பிரதேசங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பாக பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் பள்ளிக்குடா, இரணைமாதாநகர், வலைப்பாடு போன்ற பிரதேசங்களிலும் முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் இந்த பாஸ் நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இது அநாவசியமான ஒரு நடைமுறையென்றுதான் நான் கருதுகின்றேன். அமைச்சர் ராஜித சேனாரத்ன இவ்விடயம் தொடர்பாக பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளார் இந்தநடைமுறையானது ஒரு குறுகியகாலத்துக்கு இல்லாமல் செய்தாலும்கூட மீண்டும் ஏதோ ஒருவகையில் இந்த நடைமுறையைப் பின்பற்றும் நிலைமை ஏற்படுகின்றது.

எனவே இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடாத்தி நிரந்தரத் தீர்வொன்றினைப் பெற்றுத்தரவேண்மென கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# பொருளாதாரம் வளர்ச்சி பெற தனியார்துறை வளர வேண்டும்

## – உலக வங்கி ஆலோசனை



(கொழும்பு)

இலங்கை ஆசியாவின் ஆச்சரியமாக மாறவேண்டும் என்றால் பொருளாதார சவால்களை முறியடிக்கும் வகையில் தனியார் துறையின் பங்களிப்பை உயர்த்த வேண்டும் என்று உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஸ்ரீ முல்யாணி இந்திரவதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் துறையை கவர்ச்சியானதாக்குவதற்கு முறையான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் திறன்கள் ஊடாக இலங்கை பெற்றுள்ள பொருளாதார ஸ்திரத்தன்மை நிலைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், ஏனைய மத்திய நிலை வருமானம் ஈட்டும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பொருளாதார வழிமுறை பாராட்டத்தக்கது.

இதன்பொருட்டு, இலங்கையில் நீண்ட கால பொருளாதார கொள்கையை செயற்படுத்துவதற்கு உலக வங்கி தயாராகவுள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் குறிப்பிடத்தக்க பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஸ்ரீ முல்யாணி இந்திரவதி சுட்டிக்காட்டினார்.

### தாலிக்கொடி திருடிய சந்தேகநபர் கைது

(சாவகச்சேரி)

கோயிலாக்கண்டிப் பகுதியில் 2 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி திருடப்பட்டுள்ளது. கடந்த 15 ஆம் திகதி கோயிலாக்கண்டியில் உள்ள ஒரு வீட்டில் கழற்றி வைக்கப்பட்ட 2 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டதையடுத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

(பா)

# முகாம் அமைக்க காணி கோருகிறது இராணுவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் படை முகாம் அமைப்பதற்காக அரச காணியொன்றைத் தருமாறு இராணுவத்தினர் கோரிக்கை விடுத்துள்ளதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அதிகாரி விமல் ராஜ் தெரிவித்தார்.

இக்கோரிக்கையை காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் நிமல் வி.புஞ்சிஹேவவுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காணி சீர்திருத்தச் சட்டத்திற்கு அமைய காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவரினால் அனுமதிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டால் இராணுவத்தினருக்கான காணி வழங்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# தடைவிதிக்கப்பட்ட பாணி மருந்து சட்டவிரோதமாக விற்பனை



இலங்கையில் பயன்படுத்துவதற்கு தற்காலிக தடைவிதிக்கப்பட்டுள்ள இருமலுக்கான பாணி மருந்து ஒருசில மருந்தகங்களில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக வாசனைத் திரவியங்கள் மற்றும் தேசிய ஔடத அதிகார சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சுமார் ஒரு வாரத்திற்கு முன்னதாக கம்பஹா பகுதியில் இடம்பெற்ற மரணத்திற்கும் இந்தப் பாணி மருந்து காரணமாக அமைந்துள்ளதா என கண்டறிவதற்காக பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

கம்பஹாவில் தங்குமிட விடுதியொன்றிலிருந்த நான்கு இளைஞர்களில் ஒருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த விடுதியிலிருந்த லேபிள் நீக்கப்பட்ட போத்தலில் இருந்த பாணி மருந்து வகையை அந்த இளைஞன் அருந்தியமை தெரியவந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. இதேவேளை உயிரிழந்த இளைஞனின் கையடக்கத் தொலைபேசிக்கு கிடைத்த குறுந்தகவல் தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒருசில தனியார் மருந்தக உரிமையாளர்கள் தங்களிடம் எஞ்சியுள்ள பாணி மருந்தை சட்டவிரோதமாக விற்பனை செய்வதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

## பிழையான நிலைப்பாடு மாற்றியமைக்கத் திட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழகம் தொடர்பில் சமூகத்தினுள் நிலவும் பிழையான நிலைப்பாட்டினை மாற்றுவதற்கு உயர்கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

சமகாலத்தில் நிகழும் சில சம்பவங்கள் காரணமாக பொதுமக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பில் பிழையான கருத்தை கொண்டுள்ளதாக உயர்கல்வியமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்துள்ளார்.

இதனைக் களைவதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

விரைவில் குறித்த வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியாக தெளிவுபடுத்தல் அடிப்படையில் மேற்கொள்ளவுள்ளதாக உயர் கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

# கடல் எல்லையை மீறினால் மீன்பிடி உரிமம் இரத்து

(கொழும்பு)

இலங்கையின் கடல் எல்லையை மீறிச் சென்று மீன்பிடியில் ஈடுபடும் மீன்பிடியாளர்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு தேவையான வகையில், அடுத்த ஜனவரி மாதம் மீன்பிடிச் சட்ட மூலத்தில் திருத்தங்கள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என மீன்பிடி, நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

மீன்பிடி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார். இலங்கை மீனவர்கள் சர்வதேச கடல் எல்லைகளை மீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடதக்கது.

# சுற்றுலாத்துறை மேம்பாடு ரஷ்ய அரசு ஒத்துழைப்பு

(கொழும்பு)

ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலா மற்றும் முதலீட்டுத் துறைகளை வலுவாக முன்னெடுப்பதற்குத் தேவையான திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கைக்கான ரஷ்யாவின் புதிய தூதுவர் எலெக்ஸாண்டர் ஏ காச்வா தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சில், அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியபோதே ரஷ்யத் தூதுவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுலா மேற்கொள்கின்றவர்களில் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகமாக அமைந்துள்ளது.

இலங்கையின் சுற்றுலாத் துறைகள் குறித்து தமது நாட்டு சுற்றுலாப் பயணிகளை தெளிவுபடுத்துவதற்கு விசேட திட்டமொன்றை முன்னெடுப்பதாகவும் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை தொடர்பான பிரசாரங்களுக்காக ரஷ்ய இலத்திரனியல் மற்றும் அச்சுத் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் விசேட ஊடகக் குழுவொன்றை நியமிப்பதற்கும் தாம் நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அநாவசிய கேள்வி எழுப்பினால் சபைக்கு வெளியே செல்ல நேரிடும்

## – சபாநாயகர் எச்சரிக்கை




(கொழும்பு)

நாடாளுமன்றில் அநாவசியமான ஒழுங்குப் பிரச்சினைகளை கேள்விகளாக எழுப்பும் நபர்களை சபைக்கு வெளியில் அனுப்ப வேண்டிவருமென சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

2013 வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க உரையாற்றிய வேளை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை கேள்வியாக எழுப்பினார்.

அந்த சமயத்தில் கேள்வி ஒழுங்கு பிரச்சினையோடு தொடர்புடையதல்ல என தெரிவித்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றில் அநாவசியமான ஒழுங்கு பிரச்சினைகளை கேள்விகளாக எழுப்பும் நபர்களை சபைக்கு வெளியில் விரட்ட வேண்டிவருமென எச்சரித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, சபாநாயகருக்கு நன்றி தெரிவித்ததோடு சபாநாயகர் ஆசனத்தில் இருந்து சென்றதும் அந்த ஆசனத்தில் அமர்வோர் தங்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டார்.



# வைத்தியரான மனைவி மாயம் இராணுவ அதிகாரி முறைப்பாடு

(கொழும்பு)

வைத்தியரான தனது மனைவியைக் காணவில்லை என இராணுவ அதிகாரியொருவர் காலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாத்தறை வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவில் சுயநினைவை இழக்கச் செய்கின்ற வைத்தியராக கடமையாற்றிய தனது மனைவியான எரந்தி கருணாரத்ன (வயது -27) என்பவரையே காணவில்லை என அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வேலையை முடித்துக் கொண்டு ஹிக்கடுவையில் உள்ள வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த அவர் ஹபராதுவையில் வைத்து தொலைபேசி தொடர்பினை ஏற்படுத்தியதாகவும் அதற்கு பின்னர் அவர் வீட்டுக்கு திரும்பவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.